
# நெருப்புச் சுவாலை



வி.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Dedicated to the Deceased Oblates of the Provinces of Colombo & Jaffna*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புச் சுவாலை

விபி

Oblate Publication, Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புச் சுவாலை

**Source:**
Saint Eugine de Mazenod
Living in the Spirit's Fire
Alfred A. Hubenic, omi,
with Rene Motte, omi.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு: நெருப்புச் சுவாலை

ஆசிரியர்: கலாநிதி டேவிற் வி. பற்றிக், அமதி
முதல்வர், தொடர்பகம், 657/1, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்.

பக்கம்: XVI + 124

பதிப்பு: மார்கழி, 2018

பதிப்புரிமை: ஆசிரியர், 077 981 9355, frvpomi@gmail.com

அச்சகம்: மதி கலர்ஸ்

அட்டைப்படம் & பக்க வடிவமைப்பு : அல்பேட் பெஸ்ரியன், 0776701442

விலை: 300 ரூபா

பொருள்: ஆன்மீகம்

புனித இயுஜின் டீ மசனெட்டின் வாழ்வியல் வரலாறு, போதனைகள், சாதனைகள், அமலமரித் தியாகிகள் சபை உருவாக்கம், சமூக மாற்றத்திற்கான தூண்டுதல்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கியது. ஏழையரின், இளையோரின் சுபீட்சத்திற்கு, சமுதாயச் சீர்திருத்தத்திற்கு வித்திடுகின்றது. Living in the Spirit's Fire Eugene de Mazenod ஆங்கில நூலிலிருந்து பெரும்பகுதி மொழிபெயர்க்கப்பட்டது.

Title: Neruppusuwalai

Author: Dr. David V. Patrick, omi
Superior, Thodarpaham, 657/1, Hospital Road, Jaffna.

Pages: XVI + 124

1st Edition: December, 2018

Copyright: Author, 077 981 9355, frvpomi@gmail.com

Publisher: Oblate Publication, Jaffna

Press: Mathy Colours, Nallur

Cover Design & Layout : Albert Bastian, 0776701442

Price: Rs. 300

ISBN: 978-955-7706-09-2

Content: Spirituality

This book explains the Life, Teachings. Achievements of St. Eugene de Mazenod, the Founder of the Missionary Oblates of Mary Immaculate, and the motivations for social change. It restores the development of the poor and youth sowing the seeds of social reformation. A great portion of this book is a translation of Living in the Spirit's Fire Eugene de Mazenod.

Source book: Living in the Spirit's Fire
Eugene de Mazenod by Alfred Hubenig omi,
OMI General Publication, Rome, 2004.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


1. அழைப்பின் வெளிப்பாடு

2. ஏழையருக்கு நற்செய்தி அறிவிப்பு

3. மகா ஞானவொடுக்கம்

4. உரோமை அங்கீகாரம்

5. அப்போஸ்தலிக்க பணியாளன் எதிர்கொள்ளும் தடைகள்

6. மார்சேல் ஆயர்

7. உயர் தலைவர்

8. இரட்சணியப் பணியாளன்

9. அமலமரித்தியாகி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை



என் இனிய இயேசுவிற்கு முதலில் நன்றிகள் கூறி, என் இதயத்தில் அவரையே போற்றி,

ஏழைகள், இளையோர் ஏற்றம் பெற, இந்நூலை இறைவன் திருப்பாதம் சமர்ப்பிக்கின்றேன்.

ஆயர் பெற்றக்கினி யாழ்ப்பாணத்தில் இருந்து பிரான்சிலுள்ள துள்பேயின் ஆயர் பேர்ட்ரண்டைச் சந்தித்து குருக்களுக்கான தேவையை முன்வைத்தார். அப்போது பேர்ட்ரண்ட் பெற்றக்கினியிடம் கூறினார்: "மார்சேலுக்குப் போய் அங்கு இயூஜின் ஆயரைச் சந்தியுங்கள். அவரது சபையோ சிறியது. ஆனால் அவரது இதயமோ புனித பவுலைப் போன்று, உலகு போன்று மிகவும் பெரியது. ஏழைகள் என்பதை அழுத்தமாகச் சொல்லுங்கள். நிச்சயமாகக் கேட்டது கிடைக்கும்."

'ஏழை' என்ற சொல்லைக் கேட்டதும் காந்தம் போல் கவரப்பட்டு அன்பை அள்ளி அள்ளிக் கொடுத்து புதுவாழ்வை மலர்விக்கும் இப்புனிதர் சமூக மாற்றத்திற்கு வித்திட்டவராக, இயேசுவை, திருச் சபையை, ஏழைகளை மையப்படுத்தி வாழ்ந்தவர் என்பதை எண்ணிப் பார்க்கையில் நாமும் நமது சமுதாய மறுமலர்ச்சிக்காக, ஓயாத அலை களாய் பாரபட்சமின்றிப் பணியாற்ற வேண்டும் என்பதை உணருகின் றோம். அவரது இதய தாகம் பிறருக்காக நாம் வாழ வேண்டும் என்ற தாகத்தையே எம்முள் தோற்றுவிக்கின்றது.

உலகுபோல் பெரியதான பேரிதயம் கொண்ட இயுஜின் டீ மசனெட் உண்மையிலே உயர்ந்தவராய் எல்லோர் இதயங்களிலும் இடம் பிடித்தவராய் பிறரன்புப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டு சமுதாய மாற்றத்தில் சரித்திரம் படைத்தவர். பிரபுத்துவ செல்வாக்குநிலை களைத் தூக்கி எறிந்துவிட்டு, ஏழையரின் ஊழியனாக, இளையோரின் தோழனாக, தூசி படிந்த வீதிகளில் கால் நடந்து பாதம் பதித்தவர். எல்லோரையும் நல்லோராக்க நானிலம் எங்கும் நற்செய்தி அறிவித்த வர். நலிந்துபோன குடும்பங்களில் நல்லுறவிற்கு வழிகாட்டியவர். இயேசுதாகம் கொண்ட இயுஜின் எம்மையும் அவ்வழி வாழ, இருளான உலகில் சுடர்விட்டு அருள்வெளிச்சம் பரப்ப அழைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இந்த சமூகத்தில் மங்கி எரியும் திரிகளை அணைப்பதில் பயனில்லை. நீங்கள் எரிவதை, வெப்பம் கொடுப்பதை, வெளிச்சம் கொடுப்பதை விரும்புகின்றேன். இல்லையேல் வெளியேறுங்கள்” என்று இயுஜின் துணிச்சலோடு கூறியது ஏனோதானோ நிலையில் வாழாது உற்சாகத் தோடும் ஊக்கத்தோடும் நற்பணியாற்ற வேண்டும் என்ற வேகத்தைத் தூண்டுவிக்கின்றது.

எமது சமூக, ஆன்மீக மேம்பாட்டில் ஆர்வத்தோடு அக்கறை காட்டும் யாழ். ஆயர் பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியதையிட்டு பெரு மகிழ்வு அடைகின்றேன். மேலும் எனது இலக்கியப் பணிக்கு அர்த்தம் காணும் விதமாக வாழ்த்துச் செய்தி வழங்கிய அமதிகளின் மாகாண முதல்வர் அருட்கலாநிதி செ.எட்வின் வசந்தராசா, அமதி அவர்களுக்கும் இந்நூலினை அழகுற வடிவமைத்த அல்பேட் பெஸ்ரியன் அவர்களுக் கும் பல்வேறு வழிகளில் உதவி நல்கிய யாழ். ஆச்சிரம முதல்வர் அருட் பணி எம். நிர்மலராஜா (செ.தா.) அவர்களுக்கும் அருட்பணியாளர்கள் ஜெறோம் லம்பேட் (அமதி), ஜெராட் (அமதி) ஆகியோருக்கும் சமூகச் சீராளன் செ. யோசப் பாலா அவர்களுக்கும், ‘யாழ்களரி’ ஆசிரியர் ஜோர்ச் ஜெஸ்ரின் அவர்களுக்கும் ஏனைய வாசக நேயர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அகிலமெங்கும் ஏழையருக்கு நற்செய்தி அறிவிக்கும் நற்பணியாற்றி இறையடி சேர்ந்த அனைத்து அமலமரித் தியாகிகளும் இறைவனோடு நித்தியமும் சங்கமிப்பார்களாக.

உறங்கியது போதும். விழித்தெழுவோம்!

பதுங்கியது போதும். பாய்ந்து செல்லுவோம்!’

வாருங்கள்! அவர் வழியில் ஏழையரின் விழிநீரைத் துடைப்போம்!

சேருங்கள்! பாரினில் புது உலகு படைத்திட முயல்வோம்!

சொல்லுங்கள்! நானிலமும் நற்செய்தியினை.

செல்லுங்கள்! இறை இராட்சியம் பரப்பிடவே.

**- டேவிற் வி. பற்றிக் அ.ம.தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Rt. Revd. Dr. Justin B Gnanapragasam*
Bishop of Jaffna

*Bishop's House,*
*P.O. Box No. 02*
*Jaffna - Sri Lanka*
Tel: +94(0) 21 222 2649 (O)
+94(0) 21 222 8518 (R)
Email: gnanamjb48@gmail.com

# யாழ். ஆயரின் ஆசிச் செய்தி



அருட்பணி வின்சன் பற்றிக் அமதி எழுதிய புனித இயூஜின் டீ மசனெட் பற்றிய "நெருப்புச் சுவாலை" என்னும் நூல் அமலமரித் தியாகிகளின் பணிவாழ்வில் ஆன்ம வாஞ்சை என்னும் பெரும் நெருப்பை மூட்டும் என்பது எனது நம்பிக்கையாகும். இந்நூல் வாசகநெஞ் சங்களில் ஆன்மீக வெளிச்சத்தைத் தூண்டு விக்கவல்லது.

இவ்வேளையில் ஆயர் இயூஜின் டீ மசனெட்டின் புனிதர் பட்டத்தின் போது திருத்தந்தை இரண்டாம் யோன் போல் கூறிய வார்த்தைகளை நினைவுகூருகின்றேன்.

> "இந்த ஆயர் மூலமாக கிடைக்கப் பெற்ற அளப்பெரிய மறுமலர்ச்சிக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவரது தூண்டுதல் அவர் காலத்திற்கு மட்டும் உரித்தானது அல்ல. அது இன்னும் நமது நாட்களிலும் தொடருகின்றது."

ஆயர் பெற்றக்கினி யாழ்ப்பாணம் இருந்து பிரான்சில் உள்ள துள் பேயின் ஆயர் பேட்ரென்டைச் சந்தித்து இலங்கையில் குருக்களுக்கான தேவையை முன்வைத்தார். அப்போது ஆயர் பேட்ரென்ட்,

"மாசேலுக்குச் சென்று அங்கு இயூஜின் ஆயரைச் சந்தியுங்கள். அவரது சபையோ சிறியது. ஆனால் அவரது இதயமோ புனித பவுலைப் போன்று, உலகு போன்று மிகப் பெரியது. 'ஏழை ஆன்மாக்கள்' என்பதை அழுத்தமாகச் சொல்லுங்கள். அதைக் கேட்டால் அவர் எதிர்மறையாகச் செயற்பட மாட்டார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஏழைகள் மீது தணியாத தாகம் கொண்ட ஆயர் இயூஜின் டீ மசனெட் இலங்கைக்கு அமலமரித் தியாகிகளை ஆன்மீகப் பணிக்காக 1847ம் ஆண்டு அனுப்பி வைத்தார். அவரின் நேரடி வழிகாட்டலின் கீழ் அமலமரித் தியாகிகள் தங்கள் பணிகளை இலங்கையிலே சிறப்பாக ஆரம்பித்தார்கள். விசேட விதமாக நற்செய்தி அறிவிப்புப்பணி, கல்விப்பணி, ஆன்மீகப் பணி போன்றவற்றை மேற்கொண்டார்கள். இயேசுவை, திருச்சபையினை, ஏழை மக்களை மையப்படுத்தி வாழ்ந்த புனித இயூஜின் டீ மசனெட் அமலமரித் தியாகிகளது வாழ்வியல் ஒழுங்குகளை தெளிவாகத் தந்துள்ளார்.

அவரது வழிகாட்டலில் அமல மரித்தியாகிகள் இயேசுவையே மையப் படுத்தி வாழவும், மரியன்னை பக்தியை வளர்க்கவும் வேண்டுமென்று இறைவனை பிராத்தித்து எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,

+ Gnanapragasam

பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்
யாழ். ஆயர்
12-12-2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமதிகளின் மாகாண முதல்வரின் வாழ்த்துச் செய்தி



"எரியும் திரிகளாய் இருங்கள், இல்லாவிடின் எமது சபையை விட்டு வெளியேறுங்கள்" என அமலமரித்தியாகிகள் சபையின் நிறுவுனர் புனித இயூஜின் டீ மசனெட் தனது சபையின் ஆரம்ப நாட்களில் தன் சபைச் சார்ந்த துறவிகளிற்கு அன்புடன் ஆனால் கண்டிப்பாக கட்டளையிட்டார். ஈர் நூறு வருட எமது சபையின் பயணத்திலே பல ஆயிரக்கணக்கான அமலமரித்தியாகிகள் தம்மை உருக்கி பிறருக்கு ஒளி கொடுக்கும் அன்புத் தீபங்களாக சுடர்விட்டு பிரகாசித்தார்கள், இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். எழுபதிற்கும் மேற்பட்ட நாடுகளில் ஏறக்குறைய நான்காயிரம் அமலமரித்தியாகிகள் சபையின் குருக்களும் துறவிகளும், பல்வேறு வேளைகளில் மனித வாழ்விற்கு ஒவ்வாத சூழ்நிலைகளிலும் கூட, மனித மாண்பிற்காய் தம்மை அர்ப்பணித்து வாழ்கின்றார்களென்றால் அதற்கு காரணம், தன் வாழ்க்கை அனுபவத்தால் எமக்கு வழிகாட்டிநிற்கும் எம் சபையின் அன்பு நிறுவுனர், புனித இயூஜின் டீ மசனெட் என்றால் மிகையாகாது.

குழந்தைப்பருவத்தில் மிதமிஞ்சிய சுகபோகம், கட்டிளமைப்பருவத்தில் அகதிவாழ்க்கையும் அதனால் ஏற்பட்ட கோரவிளைவுகளும், இளம் பராயத்தில் தடுமாறிய பயணமும் அதனால் தடுக்கி விழுந்த சந்தர்பங்களும், இயேசுவின் பாடுகளால் உந்தப்பட்டு பெரிய வெள்ளியன்று பார்வை பெற்ற அனுபவமும், இளம் குருவாக ஆன்மீக ஏழ்மைத்தனத்தில் உழல்வோரை ஆண்டவரிடம் அழைத்துச் செல்லவேண்டும் என்கின்ற அளவிடமுடியா அவாவும் அதனால் உருவாகிய அமல மரித்தியாகிகளின் வரலாறுமென அதீத அர்த்தம் நிறைந்த புனித இயூஜினின் வாழ்வானது, வாழ்வை தொலைத்து அலைகின்ற பல மானிடருக்கு விடுதலையின் பாதையாக, தேவையாகத் தோன்றுகின்றது.

சமகால எம்மவரின் அவல நிலைகளை கண்ணுற்று, அவர்களிற்காய், அருட்தந்தை வின்சன் பற்றிக் (வி.பி.) அமதி அடிகளார் எழுத்துருவாக்கிய "நெருப்புச்சுவாலை" எனும் புனித இயூஜினின் இவ் வரலாற்றுச் சுருக்கமானது காலத்தின் தேவை என்பது மட்டுமல்லாமல் அமல மரித்தியாகிகளின் வாழ்வையும் பணியையும் கோடிட்டுக்காட்டும் ஓர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக் குறிப்பேடுமாகும். அருட்தந்தை அல்பிரட் குவேனிக் அமதி அடிகளார் ஆங்கிலத்தில் தொகுத்த **"Living in the Spirit's Fire"** எனும் நூலை தழுவி இந்நூல் எழுதப்பட்டுள்ளபோதும் எமது சமூகத்திற்கு பயன்படக்கூடிய ஆக்கபூர்வமான கருத்துக்களையும், சிந்தனைத் தூண் டல்களையும் அருட்தந்தை வி.பி. இந்நூலில் உள்ளடக்கியிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

இலங்கைத் தேசத்தை தன் இதயத்தில் சுமந்த புனித இயூஜின் டீ மசனெட்டின் இவ் வாழ்க்கை குறிப்பேடு நிச்சயமாக இப்புனிதரைப் பற்றி நாம் மேலும் அறிந்துகொள்ளவும் இப்புனிதரின் வழி எம் வாழ்வை சீர்படுத்த எமக்கு கரம் கொடுக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

தன் எழுத்தியலில் தான் நேசிக்கும் எம் சபை நிறுவுனரின் வாழ்க்கைக் கும் இடம் கொடுத்தமைக்காக இவ்நூலாசிரியரை உளமார வாழ்த்தி இவரின் எரியும் திரியாக ஒளிகொடுக்கும் இவரின் எழுத்துப்பணி மென் மேலும் சிறக்க ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்கலாநிதி செ. எட்வின் வசந்தராசா, அமதி**
மாகாண முதல்வர்,
யாழ்ப்பாணம்.
*07-11-2018*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுச் சுவடுகள்

*28.11.1847* அருட்பணி சமேரியாவின் தலைமையில் அருட்பணியாளர்கள் லூயிஸ் கீற்றிங், யோசப் அலெக்சாண்டா சியமின், அருட்சகோ. கஸ்பாட் டீ ஸ்ரெபானிஸ் அமலமரித் தியாகிகள் குழுவினர் யாழ்ப்பாணத்தில் கால் பதித்தமை.

*17.02.1848* பணிப் பொறுப்பு ஏற்கப்பட்டது.

*19.09.1857* முதல் மகாஞானவொடுக்கம் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் பங்குகளில் வழங்கப்பட்டது.

*1.11.1862* திருக்குடும்ப சபையினர் யாழ். வருகை.

*17.04.1864* துறவற சபையான புனித வளனார் சகோதர சபை ஸ்தாபகம்.

*1869* யாழ். புனித மடுத்தீனார் குருமடம் ஆயர் பொஞ்சினால் நிறுவப் பட்டது.

*1870* மடுத் திருப்பதியின் புனருத்தாபனமும் புதிய ஆலய ஆரம்பமும்.

*10.02.1876* முதல் சுதேச அமதி குருவாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாண்ரா சாகர திருநிலைப்படுத்தப்பட்டார்.

*1893* புதிய ஏற்பாடு சொவைல் அமதி அடிகளாரால் சிங்களத்தில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது.

*1904* சுவாமி ஞானப்பிரகாசர் தலைமையில் நல்லூர் பங்கு நிறுவப்பட்டது.

*29.12.1943* யாழ். முதல் சுதேச ஆயராக எமிலியானுஸ்பிள்ளை அமதி நியமனம்.

*1981* சுவாமி ஞானப்பிரகாசர் அமதி நினைவாக முத்திரை வெளியீடு.

*1984* வடமாநிலம் தனிநிர்வாக அலகாகப் பிரகடனம்.

*1989* வடமாநிலம் தனிமாகாணமாகப் பிரகடனம்.

*1990* சுவாமி T.M.F. லோங் அமதி நினைவாக முத்திரை வெளியீடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அழைப்பின் வெளிப்பாடு

இயூஜின் டீ மசனெட் தென் பிரான்சிலுள்ள எக்ஸ்சென் புறொவான்சில் *1782*ம் ஆண்டு ஆவணி மாதம் *1*ம் திகதி பிரபுக்கள் குடும்பத்தில் சாள்ஸ் அன்ரனிக்கும் மாறி றோசிற்கும் மகனாகப் பிறந்தார். பெற்றோரின் திருமணத்தின்பொழுது தந்தை வயது *36*, தாய் வயது *18*.

*1816*ல் இயூஜினிற்குத் தந்தை கடிதம் எழுதினார்:

*"நான் ஓரளவிற்கு இறந்துவிட்டேன். நான் இன்னும் உயிர்வாழுவது ஆண்டவரது அருளால்தான் என நம்புகிறேன். ஆபத்தான வேளைகளில் எல்லாம் அன்னை மரியாவிற்கு பக்தி வணக்கம் செலுத்துகிறேன். அன்னை மரியாவைப் பல தடவைகள் நினையாமல் ஒருநாளும் நகர்வதில்லை."*

இயூஜினின் தாயார் முரண்பட்ட பண்புகளைக் கொண்டிருந்தார். பரிவும் சினமும் தியாகமும் சுயநலமும் புரிந்துணர்வும் ஏற்றுக்கொள்ளாமையும் மனஉறுதியும் சந்தேகமும் அவரது ஆளுமையில் ஆட்சி செய்தன. தாயார் இயூஜினை வெனிசில் விட்டிற்று தனது மகளுடன் எக்ஸ்என் புறொவான்ஸ் வந்துசேர்ந்தார். தன் கணவனுக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் 'உனது மகன்' என்று அந்நியப்படுத்தியே எழுதினார்.

ஏழு வருடங்களுக்குத் தாயைக் காணாமல் பிரான்ஸ் திரும்பிய பொழுது தாய் அங்கிருக்கவில்லை. பின்னர் இயூஜின் குருமடம் செல்ல விருப்பதைத் தெரிந்ததும் பல தடைகளைத் தாயார் முன்வைத்தார். விடுமுறையின் பொழுது இயூஜினை வீட்டிற்கு வராமல் தடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயூஜின் குருப்பட்டம் பெற்றபொழுது தாயார் பிரசன்னமாயிருக்க வில்லை. மாறாக, திருமண ஆடையை அனுப்பி ஏளனப்படுத்தினார். எனினும் இயூஜின் தாயாரை அன்புசெய்தார். தாயார் 81 வயதில் 1851ல் இறைவீடு சேர்ந்தார்.

## இறைஅழைத்தல் அருளின் வெளிப்பாடாகும்

அழைப்பின் வரலாற்றை உற்றுநோக்கும்பொழுது வாழ்வு என்பது இறைவனோடு இணைந்த கதையே. ஒருவர் தூர இருந்தாலும் கடவுள் அவரோடு எப்பொழுதும் அருகிலே பிரசன்னமாயிருப்பார். இறைவனுடனான இந்த அற்புத உறவு ஒரு குறிப்பிட்ட கால விசுவாச அனுபவத்தின் பின்னரே உணரலாம். இவ்வாறு, படிப்படியாக பல ஆண்டு விசுவாச அனுபவத்தின் பின்னரேயே இயூஜின் சொல்ல முடிந் தது: "அவர் என்னை அன்புசெய்தார் அத்தோடு எனக்காகத் தன்னைத் தானம் செய்தார்" (கலாத்தியர் 2:20).

## ஆரம்பப் பருவம்

இயூஜினின் ஆரம்பப் பருவம் எக்ஸ்என் புறொவான்சில் மிகவும் இனிதாகவும் மகிழ்வானதாகவும் இருந்தது. பெற்றோரின் நல்லுறவு மேலும் இயூஜினிற்கு உற்சாகத்தை அளித்தது. நாளாந்தம் மரியன்னையின் புகழ்பாடி, செபமாலை சொல்லி, மகனை விசுவாசத்திலும் கல்வியிலும் தாயார் வளர்த்தார். மரியன்னையின் மாசில்லா உற்பவப் பக்தியிலும் தாயார் சிறந்து விளங்கினார். ஏழு வயதில் இயூஜின் பூர்பன் கல்லூரி யில் கல்வி கற்றார்.

## எக்ஸ் என் புறொவான்சில் குழப்பம்

1790 மார்கழி மாதத்தில் பிரன்சியப் புரட்சி வெடிக்கலாயிற்று. சாள்ஸ் அன்ரனி டீ மசனெட் புரட்சி எதிர்ப்பாளர்களில் ஒருவராக இனம் காணப்பட்டார். 1791ம் ஆண்டு சித்திரை மாதத்தில் இயூஜின் குடும்பத்தினர் பிரான்ஸ் நாட்டை விட்டு வெளியேறினார்கள். அப் பொழுது இயூஜினிற்கு வயது 8. 12 வருட இடப்பெயர்வின் பின்னர் 1802ல் தனது 20ம் வயதில்தான் இயூஜின் தாய்நாடு வந்தார். ரூறினில் இரண்டரை வருடங்கள் 1794 சித்திரை மாதம் வரை தங்கியிருந்து நேபிள்ஸ் கல்லூரியில் கல்வி பயின்றார். இயூஜின் 1794 தொடக்கம் 1797 கார்த்திகை மாதம் வரை வெனிசிற்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கடும் மன உழைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டு, அங்கு அவர் தனது தந்தையோடும் மாமாவோடும் வாழ்ந்து வந்தார். 12 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட இக்காலப்பகுதியில் இயூஜின் உடல்ரீதியான மாற்றங்களை அனுபவித்து நேரத்தை எவ்வாறு செலவிடுவது என்று தெரியாது தத்தளித்தார்.

அவர்களது வீட்டிற்கு அருகே டொன் பரடோ சினெலியும் அவரது சகோதரர் அருட்தந்தை சினெலியும் வாழ்ந்து வந்தார்கள். இக்குடும்பத்தின் தொடர்பு இயூஜினிற்குப் பெரும் ஆசீர்வாதமாக அமைந்தது. ஒரு நாள் இயூஜின் யன்னலில் சாய்ந்தபடி பகற்கனவு கண்டுகொண்டிருந்தார். அந்நிகழ்வை இயூஜின் ஆயராய் இருந்து பணியாற்றியபொழுது நினைந்து குறிப்பேட்டில் வடித்தார்:

இயூஜின் இப்படிப் பகற்கனவு கண்டு நேரத்தை வீணடிப்பதையிட்டுப் பயப்படவில்லையா? - டொன் பராடோ

"நான் வருந்துகிறேன். நான் அந்நியன். எனது வீட்டில் ஒரு புத்தகமும் இல்லை" என்று இயூஜின் பதிலளித்தார்.

"அது பிரச்சனையல்ல, என் அன்பு மகனே. நான் இருக்குமிடம் எனது நூலகமே. அங்கு நிறையப் புத்தகங்கள் உள. இலத்தீன், இத்தாலியன், பிரெஞ்சு மொழிகளில் தாளாளமாய் புத்தகங்கள் உள. ஏதாவது புத்தகம் வேண்டுமா?"

"எனக்கு கன புத்தகங்கள் வேண்டும்" என்று இயூஜின் பதிலளித்தார்.

உடனே ஒரு கயிற்றினூடாக ஒரு புத்தகத்தை அனுப்பினார். புத்தகத்தைப் படித்துவிட்டு, நன்றி கூறித் திருப்பிக்கொடுத்தார்.

அதுதான் அவர்களது நட்பின் ஆரம்பம். அடுத்த நாள் நிறையப் புத்தகங்களை அனுப்பி வைத்தார். அந்த இளங்குரு இயூஜினது ஆசானாகவும் ஆன்மீக வழிகாட்டியாகவும் விளங்குகின்றார்.

நாலு ஆண்டுகள் டொன் பாரடோனின் வழிகாட்டல் இயூஜினின் வாழ்வில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தது. இஞ்ஞாசியாருடைய ஆன்மீகப் பாரம்பரியத்தில் இயூஜினது ஆன்மீக அத்திவாரம் கட்டி எழுப்பப்பட்டது. இயூஜினிற்கு இக்காலம் வாழ்வு தொடர்பான தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானத்தைத் தெளிவுபடுத்தும் காலமாக அமைந்தது. இது தொடர்பாக இயூஜின் எழுதினார்:

"இக்காலத்தில்தான் கடவுளின் உண்மையான மனிதன் தனது ஆற்றல் மிக்க முன்கூட்டிய ஆயத்தத்தாலும் தூயஆவியின் கருவியாக இயங்கிய தாலும் என்னில் விசுவாசத்தினதும் பக்தியினதும் அத்திவாரத்தைக் கட்டி எழுப்பினார். அதே அத்திவாரத்தின்மேல் இறைவன் தமது இரக் கத்தினால் எனது ஆன்மீக வாழ்வின் கோபுரத்தைக் கட்டி எழுப்பினார்."

டொன் பரடோ இயூஜினிற்குக் கடுமையான நேர அட்டவணையைத் தயாரித்தார். காலை முழுவதும் இலத்தீன், விவிலியம், திருச்சபை வரலாறு போன்ற பாடங்களைக் கற்றார். இருவரும் இணைந்து அன்னை மரியாவிற்கான செபமாலைத் தியானத்தையும் திருஇருதயத்திற்கான சிறப்பு ஆராதனையையும் மேற்கொள்வார்கள். "ஒவ்வொரு சனிக்கிழமை யும் ஒப்புரவு அருட்சாதனம் பெற்று ஒவ்வொரு ஞாயிறும் நற்கருணை உட்கொள்வேன். செபத்தையும் நல்ல நூல்கள் வாசிப்பதையும் மேலதி கமாக மேற்கொள்வேன்." இயேசுசபைத் துறவியரால் எழுதப்பட்ட வெளிநாட்டு இரட்சணியப் பணிகள் பற்றிய கடிதங்களை இயூஜின் வாசிக்குமாறு டொன் பராடோ தூண்டுவித்தார். இயூஜின் மகிழ்வோடு குறிப்பிடுகின்றார்:

"எனக்குப் பன்னிரெண்டு வயது நடக்கும்போதே இறைவன் இரட்ச ணியப் பணிகளுக்கு எனது வாழ்வை அர்ப்பணிக்குமாறு எனது இதயத் தில் உண்மையான ஆசையை விதைத்தார்."

பின்னர் இயூஜின் தனது நண்பன் யக்குவே யென்காட்டிற்கு விசுவாசம் அல்லாதோருக்கு மனமாற்றத்தை விதைக்க தனது வாழ்வை அர்ப் பணிக்குமாறு பெரும் ஆவல் எழுந்ததைத் தான் உணர்ந்ததாகக் கூறினார். வெனிசில் வாழ்ந்த ஆண்டுகள் ஆசீர்வாதத்தின் வெளிப்பாடாகவே இயூஜினிற்கு அமைந்தது எனலாம். அவர் செனெலியின் குடும்பத்தில் உண்மையான மகிழ்வினை அனுபவித்து மனிதரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் வளப்படுத்தப்பட்டார். பின்னர் இயூஜின், "எனது குருத்துவ வாழ்விற்கான அழைப்பு இந்நாட்களில் அரும்பியது" என்று குறிப்பிட் டார். பன்னிரெண்டு வயதிலேயே டொன் பரடோமூலம் ஆரோக்கிய மான கற்றலைத் தன்னால் மேற்கொள்ள முடிந்தது எனப் பின்வருமாறு இயூஜின் எழுதினார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்ற முடிந்தது. ஏனெனில் கடவுளின் ஆவி தரும் விடுதலை சந்தர்ப்ப சூழல்களுக்கு ஏற்றாற்போல செயற்படுவதற்கு என்னைத் தூண்டுவித்தது."

'விடுதலை' என்ற பதம் இயூஜின் வாழ்வில் பிரதானமானதாக விளங்கியது. போரின் பின்னர் ஆண்கள் வரி கட்டவேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டது. அவர்களது சுமையைக் குறைப்பதற்காக ஆயர் இயூஜின் ஞாயிறில் கட்டாயமாத் திருப்பலியில் பங்கெடுக்க வேண்டும் என்ற சட்டத்தை பாதிப்படைந்தோருக்குத் தளர்த்துமாறு தனது மறை மாவட்டக் குருக்களுக்குப் பணித்தார்.

## குடும்பக் குழப்பம்

1795ல் பிரஞ்சியப்புரட்சி முடிவுற்ற காலகட்டத்தில் இயூஜினது குடும்பத்தில் குழப்பம் ஆரம்பித்தது. இயூஜினின் தாயார் தனது மகள் நினெற்றுடனும் தனது தாயாருடனும் தனது சொத்துக்களை மீள் பெறுவதற்காக வெனிசிலிருந்து எக்ஸ்என் புறொவான்ஸ் திரும்பினார். தனக்கு உரித்தான சொத்துக்களையும் கணவனது சொத்துக்களையும் தனதாக்கிக் கொண்டு பணத்தை இலக்காக்கிய வண்ணம் கணவனை விவாகரத்து செய்துகொண்டார். பிரிவிற்கான அடிப்படைக் காரணிகளாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையே நிலவும் 18 வருட இடைவெளி, அவர்களது கல்வி வித்தியாசம், பொறாமையுள்ள மாமியாரதும் உளப்பாதிப்புற்ற மச்சாளதும் தொடர் தலையீடு போன்றவை காணப்படுகின்றன.

இந்நிலமை பற்றி வருத்தத்துடன் சாள்ஸ் அன்ரனி தனது நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"நான் மீள்குடும்ப உருவாக்கத்தில் அனுபவிக்க நேரிடும் அனைத்து நெருக்கீடுகளையும் வேதனைகளையும் முன்கூட்டியே தரிசனம் செய்கிறேன். நானும் எனது மகனும் அந்த மூன்று (மனைவி, தாய், மச்சாள்) பெண்களால் எதிர்கொள்ளப்போகும் துன்ப துயரங்களை வார்த்தைகளால் வடிக்கமுடியாது. நாங்கள் இருவரும் ஓர் அறைக்குள் தள்ளப்பட்டோம். அவர்கள் அனைத்தையும் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். எல்லாவற்றையும் தீர்மானித்து அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள். ஏதாவதொன்றைத் திருத்த முற்பட்டால் இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் ஒருமித்துப் பாய்வார்கள். அவர்களை எதிர்த்துநிற்பது பெரும் கொந்தளிப்பிலேயே முடியும். ஈற்றில், விவேகமான ஆட்கள் எடுக்கும் முடிவை எடுத்து, எமது அறைக்குள் ஒதுங்கிடுவோம்."

இயூஜின் ஓராண்டு காலம் (தை 1798 - தை 1799) நேபிள்ஸில் தந்தையோடு தங்கியிருந்தார். அங்கு அவரது அனுபவம் எப்படியிருந்தது என்பது பற்றி அவர் எழுதிய கடிதத்திலிருந்து தெரிய வருகின்றது:

"செனெலி குடும்பத்தினரைப் போன்று நல்ல நண்பர்கள் தற்பொழுது இல்லை. எனது சுவையைத் திருப்திப்படுத்தக்கூடிய எதுவும் இல்லை. எதுவுமே செய்யாமல் மாமாவின் பூசையில் பங்கெடுக்க கோவிலுக்குப் போவதைத் தவிர வேறு எங்கும் போகாமல் இருப்பது 16 வயது இளைஞனான எனக்கு கசப்பான அனுபவமாகும்."

தை 1799 தொடக்கம் ஐப்பசி 1802 வரை பலர்மோவில் இயூஜின் தந்தையுடன் தங்கியிருந்தார். இக்காலப்பகுதியில் இயூஜின் உலக போக்கில், உலக நாட்டங்களில் ஈடுபட்டவராய் காணப்பட்டார். இஸ்ராயேல் மக்கள் இடப்பெயர்வின்பொழுது ஆன்மீக இடப்பெயர்வை அனுபவித்தது போல இயூஜின் பலர்மோவில் ஆன்மீக இடப்பெயர்வை அனுபவித்தார். தனது சொந்த சுயதேடல் போக்கிலிருந்து விடுபட்டு தூய வீடு தேடல் தொடர்பான பயணத்திற்குத் தயாரானார். பலர்மோவில் கணிசாவின் பிரபுவும் சிற்றரசியும் இயூஜினைத் தம் மகனாக ஏற்று கரிசனையோடு கண்காணித்தார்கள்.

தமது இரு மகன்களோடு மூன்றாவது மகனாக அவர்களது இல்லத்தில் இயூஜின் இடம்பிடித்தார். இந்தப் புதிய தாயார் புனிதம் மிக்கவராய் இயூஜினை நற்பண்புகளால் அலங்கரித்து அவரது நல்வாழ்விற்கு வித்திட்டார். இயூஜின் இப்புதிய வாழ்வை நன்கு அனுபவிக்கலானார். தான் பலர்மோ சமூகத்தில் ஊறியவன் என்ற வகையில் வேண்டியதெல்லாம் கிடைக்கப் பெற்றவனாய் இயூஜின் மெய்மறந்து வாழ்ந்தான். உலகபோக்கில் தன்னை வலிந்து கட்டிக்கொண்டு 'பிரபு' பட்டத்தை இயூஜின் பெற்றுவிட்டான். இளம் இயூஜினிற்கு டொன் பார்ரலோ சினெலி கற்றுக்கொண்ட பாடங்களுக்கு விசுவாசமாயிருக்கும்படி அடிக்கடி கடிதங்கள் எழுதினார். எனினும், கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கு இயூஜின் விசுவாசமாக வாழ்ந்தாலும் குருத்துவ அழைப்பை முற்றிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்துவிட்டார். இறுமாப்பு, பிடிவாதம், சுயநலம் போன்றவற்றால் இயூஜின் ஆட்கொள்ளப்பட்டார். இயூஜினின் நிலையறிந்த அவரது தங்கை தனது கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"உமதும் உமது நண்பர்களதும் எழுத்துக்களிலிருந்து நீர் எப்படி நேரத்தை வீணடிக்கிறீர் என்பது தெரியவருகின்றது. எனது அன்புள்ள அண்ணா, நீர் ஒரு காலத்தில் மிகவும் பக்தியுள்ளவனாக இருந்தீர். வயது போன பெண்களின் கைகளைத்தான் குலுக்கினீர். ஆனால், இப்பொழுது இவ்வளவு கேவலமாக, தான்தோன்றித்தனமாக நடந்து கொள்கிறீர். உமக்கு நான் கூறுகின்ற புத்திமதிகளுக்காக இறைவன் என்னை ஆசீர் வதிப்பாராக. மேலதிகமாக நான் ஒன்றும் கூறவிரும்பவில்லை. எனக்கும் உமக்கும் இடையே இருக்கும் அன்பை எதுவும் மாற்ற முடியாது என உறுதியாகக் கூறுகிறேன்."

**1802**ம் ஆண்டு ஐப்பசி மாதம் **24**ம் திகதி இயூஜின் எக்ஸ் என் புறொவான்ஸ் திரும்பினார். சாதாரண இளைஞனைப் போன்று ஆழமில்லா உலக போக்கிற்கும் அர்த்தமுள்ள ஆன்மீக போக்கிற்கும் இடையே இயூஜினின் வாழ்வில் போராட்டம் நிகழ்ந்து கொண்டேயிருந்தது. எனினும் இயூஜினின் பெரியவெள்ளி அனுபவம் ஆன்மீக போக்கின் உச்சக்கட்ட ஈர்ப்பாக நிகழ்ந்தது. குருவாகப் பணியாற்ற வேண்டும் என்ற ஆசை கொழுந்துவிட்டு எரிய, இயூஜின் இறைவனைத் தேடி பிரான்சில் அலை யலானார். இதுவே மேலெழுந்தவாரியான ஒரு குழப்பத்தின் ஆரம்பம். இதுவே மனமாற்றத்திற்கும் குருத்துவத்திற்கும் இட்டுச் செல்லும் ஒன்றாக அமைந்தது. கன்னிச்சாறோரின் சிற்றரசியின் இறப்பே இதன் உச்சமாகும். தனது சொந்தத் தாயாரின் தூர விலகி நின்றலை ஈடுசெய்த புதிய தாயார் இறந்துவிட்டார் என்பது இயூஜினில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மிகவும் மனவருத்தத்தோடு தனது தாயாருக்கு இயூஜின் கடிதம் எழுதினார்:

"இந்தக் காயம் ஒருபோதும் ஆறாது. இரவுமுழுவதும் தூக்கமின்றி அல்லல்பட்டேன். எனது அன்பான தாயாருக்காக என்னால் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது."

எக்ஸ் என் புறொவான்சில் இயூஜினது வாழ்வு சிறிது காலமே நீடித்தது. பின்னர் **5** மாதங்கள் சென்லொறென்ற் டுவோர்டனில் தங்கினார். அது இயூஜினிற்கு சிறைவாசமாகவே இருந்தது. **1803**ம் ஆண்டு ஆவணி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் திகதி தனது தந்தைக்குக் கடிதம் எழுதினார்:

"இந்த வேளையின் நான் எனது இளமைப் பருவத்தை உணருகின்றேன். ஆனால் இங்கு வந்த ஒரு மாதத்திலே மிகவும் வயதுபோனவனாக உணருகின்றேன். அலுப்பினாலும் தனிமையினாலும் தொடர்ந்து செத்துக் கொண்டிருக்கின்றேன்."

ஒரு மாதத்தின் பின்னர் தனது தாயாருக்கு இயூஜின் கடிதம் எழுதினார்:

"இந்த மலைமேல் நான் வசிக்கவேண்டும் என்று தெரிந்திருந்தால் நான் பிரான்ஸ் வந்திருக்கமாட்டேன். உங்களோடு இருப்பதும் உங்களோடு வாழ்வதுமே எனது ஆசையாக இருந்தது."

அங்கிருந்து இயூஜின் எக்ஸ்என் புறொவான்ஸ் வந்து. ஆடம்பரமான வாழ்க்கையை உலகபோக்கில் மேற்கொண்டார். இந்த வேளையில் அவரது குருவாக வருவதற்கான ஆசைகள் அருகிப்போயின. அமதிகளின் வரலாற்று ஆசிரியர் யோசவ் பியலெர்ஸ் இயூஜினின் நிலை பற்றிப் பொருத்தமாகக் குறிப்பிடுகின்றார்:

"குழந்தைப் பருவத்தில் குருவாக வருவதற்கான ஆசை சுவாலைவிட்டு எரிந்தது: நேபிள்ஸில் நிழலிட்டது: பலர்வோமில் மறைந்து காணப் பட்டது. எக்ஸ்என் புறொவான்சில் இல்லாமல்போனது."

## திருமணம்

திருமணம் பற்றிய பேச்சு எழுந்தபொழுது இயூஜின் கூடுதலான சீதனம் கொண்டுவரும் பெண்ணையே திருமணம் செய்வதாகக் கூறினார். கூடுதலான சீதனத்துடன் வந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்யுமாறு தாயாரினால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. இயூஜினும் ஒப்புக்கொண்டார். ஆனால் அப் பெண்ணோ திருமணமாகும் முன்னரே இறந்துவிட்டாள்.

மீண்டும் தாயார் நாற்பதாயிரம் பிறாங் சீதனத்துடன் வந்த பெண்ணை முன்மொழிந்தார். ஆனால் இயூஜின் "ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பிறாங் சீதனம் இல்லாவிடில் நான் திருமணம் செய்யாமலே இறந்திடுவேன்" என்று மிரட்டினார்.

இயூஜின் கடவுளை விட்டு எவ்வளவு தூரம் பிரிந்தாலும் கடவுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயூஜினோடு தொடர்ந்து தொடர்பிலேயே இருந்தார். கடவுள் இயூஜினை இருப்பு நிலையில் அன்புசெய்ததோடு இருளினூடாவும் துன்பத்தினூடாகவும் தூய்மைப்படுத்தலானார். நேரத்திற்கு நேரம் இயூ ஜினின் வாழ்வில் வெளிச்சத்தைப் பரப்பி, 'நான்' உன்னை அன்பு செய்கின் றேன்' என்று உறுதிப்படுத்தினார். பெரிய வெள்ளி அனுபவம் மன மாற்றத்திற்கான வெளிச்ச நிகழ்வாகவே நிறைவேறியது. பிரான்ஸிற்கு வருவதற்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பலர்மோ வில் பெரியவெள்ளி அனுபவம் நடந்தேறியது.

"கடவுளுக்கு வெளியே நான் இன்பத்தைத் தேடினேன். ஆனால் கிடைத்ததோ துன்பம். எத்தனை தடவைகள் என் இதயம் இறைவ னைப் புறக்கணித்தது. சிலுவையில் காட்சி என்னில் தோற்றிய கண் ணீர் துளிகளை என்னால் மறக்கமுடியுமா? சாவான பாவத்தில் நான் மூழ்கியிருந்தேன். அதுதான் எனது துன்பத்திற்கான காரணம். துன்பத்தில் இறுக்கப்பட்ட எனக்கு, அமைதியை இழந்து அல்லல்பட்ட எனக்கு, இறைவனை நோக்கித் திசைதிருப்பியது பெரிய ஆறுதலாக மாறியது. எனது எல்லா எண்ணங்களிலும் செயல்களிலும் இறைவன் எனக்கு எல்லாமானார். அவரை இலக்காகக் கொண்டு அசைவுறுவது எனக்குப் பேரின்பத்தைப் பெற்றுத் தந்தது."

"நிச்சயமாக எனக்கு அவரைத் தெரியாது" எனப் பேதுரு அப்போஸ்தலர் மும்முறை மறுதலித்தார். இயேசு அவரைப் பார்த்தபொழுது மனம் மாற்றம் பெற்று, மனம் நொந்து பேதுரு கண்ணீரில் தன்னை நனைத்துக் கொண்டார்.

## கடவுள் ஒருவரே நல்லவர்!

கடவுளைப் பற்றிப் பேசும்பொழுது தொடர்ந்து அவரது நன்மைத்தனம் மேலோங்கி நிற்கின்றது, நன்மைத்தனம் கிறிஸ்துவையே சுட்டுகின்றது. இதயத்தின் எல்லா ஆசைகளையும் சந்திக்கும் ஒருவராக, அன்புள்ள கடவுளாக, அன்புள்ள ஆண்டவராக இயூஜின் கண்டுகொண்டார். இந்த அறிவு உலக வாதைகளிலிருந்து விடுதலையையும் தூய அமைதியையும் துல்லியமாகத் தெரியப்படுத்துகின்றது. இதுவே பெரியவெள்ளி அனுப வத்தின் சிறப்பு ஆசீராகும். இது ஆரம்பமும் அல்ல, முடிவும் அல்ல, தொடர் பயணமாகும். ஏற்றமும் இறக்கமும் கொண்ட தொடர் இயக்கச் செயற்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கருணை இயேசுவைப் போல மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் நித்தியத்திற்கும் இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகின்றான். ஒவ்வொரு தனிமனிதனும் உடைக்கப் படுதலை உணருகின்றான். உடைக்கப்படுதல் மூலம் இறைவனின் நிபந்தனையில்லா அன்பினை நாம் கண்டுணரலாம். இவ்வாறு எம்மை நாம் மற்றவர்களுக்குக் கையளித்து நற்கருணையாக நாளாந்தம் மாறிடுவோம்.

எனினும் பல சந்தர்ப்பங்களில் நாம் அத்தகைய அற்புதமான அருளினைப் பெறுபவர்கள் என்பதை உணர்வதில்லை. அப்படி நாம் இயங்கும்பொழுது எமது வாழ்வு புனிதம் நோக்கிய பயணமாகின்றது. ஆரம்பத்தில் பவுல் திருச்சபையைத் துன்புறுத்தியபொழுது கடவுள் தன்னைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்ற எண்ணம் அவரிடம் சிறிதும் இருக்கவில்லை. தான் கடவுளால் உடைக்கப்பட்டுவிட்டதைக் கண்டு ணர்ந்த பின்னரே ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டதை உணர முடிந்தது. "உலகு உருவாகும்முன்னரே அவர் எம்மைக் கிறிஸ்துவுக்குள் தேர்ந்து கொண்டார்" (எபே. 1:4, கலா. 1:15, பிலி. 1:12, உரோ. 8:28). புனித பவுலைப் போன்று இயூஜினும் கிறிஸ்துவின் அருளை நிறை வாகப் பெற்றவராகவே சிறந்துவிளங்கினார். ஆன்மீக அருள் இதயத் தின் ஆழத்தைத் தொட, இயேசு என்ற ஆளை இயுஜின் டீ மசனெட் இறுகப்பிடித்துக் கொண்டார்.

இயூஜினும் பவுலைப் போல இயேசுவினால் ஆட்கொள்ளப்பட்டார். தன்னை அன்பு செய்பவர்களுக்கு இயேசு எல்லாவற்றையும் நன்மை யாக்குகின்றார் என்பதை இயூஜின் உணர்ந்துகொண்டார். தனது மன மாற்றம் நிறைமாற்றம் பெறுவதுபோல தனது வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் ஒவ்வொரு வெற்றியும் ஒவ்வொரு தோல்வியும் ஆண்டவரின் அருளைப் பெறும் அரிய சந்தர்ப்பமாகும். ஒவ்வொரு தோல்வியும் ஆண்டவருடைய அருளைப் பெறுவதற்கான வாய்ப்பாகும். புனித அகுஸ்தீனார் 'ஒவ்வொரு சாவான பாவமும்' என்ற சொற்றொடரைச் சேர்க்கின்றார்.

அமதி இறையியலாளன் கெலி நெமெக் பின்வருமாறு கூறுகின்றார்:

எமது ஆன்மீக பயணத்தில் இறைவன் இரு வழிகளில், அதாவது, மறைந்த இருளின் மூலமாகவும் உருவாக்கும் ஒன்றிப்பின் மூலமாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுகின்றார். அவை எல்லோரையும் அரவணைக்கும் கடவுளின் அன்பை வெளிக்காட்டும் கடவுளின் இரு கரங்களாகும். றெம்பிரான்ட் தீட்டிய ஊதாரிப் பிள்ளையின் உருவம் தந்தையின் இரு வெவ்வேறு கரங்களை வெளிக்காட்டுகின்றது. ஒன்று ஆணினது பரந்த கை. மற்றது பெண்ணினது மென்மையான கை, தாயின் அன்புக் கை. எல்லோரையும் அன்புசெய்யும் கடவுளின் அன்பின் ஆழத்தை அறிந்து கொள்ள இவ் ஓவியம் உதவுகின்றது.

இயூஜின் வாழ்வில் இளைஞனாய் இருந்தபொழுது இருள் இறை அன்பை மறைத்தது. ஆழ்மன முறையில் இயூஜின் உலகிற்குள் நுழைந்தாலும் பெரிய வெள்ளி அனுபவம் மூலம் ஆண்டவருக்குள் வாழ,

புதுப்படைப்பாக மாற எல்லோரையும் அன்பு செய்யும் இறை கரங்களால் இயூஜின் உள்வாங்கப்பட்டார்.

இயூஜின் புனித பவுலைப் போல் பரிவன்பின் பாத்திரமாகவும் பரிவன்பின் அப்போஸ்தலனாகவும் விளங்குகின்றார். குருத்துவத்திற்குத் தன்னை ஆயத்தப்படுத்தியபொழுது இயூஜின் பின்வருமாறு கூறுகின்றார்:

வித்தியாசமான சந்தர்ப்ப சூழல்களில் இறைவன் என்னை விட்டுள்ளார். அவர் தந்த சலுகைகள் எல்லாம் எனது உருவாக்கத்தின் தொடர் முயற்சிகளே! 'நீ என்னை அன்பு செய்வதற்காகவும் எனக்குப் பணி செய்வதற்காகவுமே நான் உன்னைப் படைத்துள்ளேன்' என்று இறைவன் கூறுவதை என்னால் நிறைவாக உணர முடிந்தது. ஆண்டவரே, உமக்காகவே என்னைப் படைத்துள்ளீர். எனக்கு வேண்டியது எல்லாம் என்றும் உமக்கு உரியவனாக இருந்து, உமக்குப் பணி செய்து உமக்காக இறக்கத் தயார்நிலையில் இருப்பதேயாகும்.

நற்கருணை இயேசுவைப் போல மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் நித்தியத்துக்கு தேர்ந்து கொள்ளப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகின்றான். அவன் இறைவனால் உண்டாக்கப்பட்டு இறைவனின் நிபந்தனையில்லா அன்பினைக் கண்டுணருகிறான். எம்மை நாம் மற்றவர்களுக்குக் கையளித்து நற்கருணையாய் நாளாந்தம் மாறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று, இங்கு நடப்பது, நடக்க வேண்டியது

இன்றைய காலகட்டத்தில் எமது பிரதேசங்களில் மாணவர்கள், இளையோர், பெண்கள், முதியோர், சிறைக் கைதிகள், வலுக்குறைந்த நிலையில் உள - சமூக ரீதியாகப் பாதிப்படைந்தவர்கள் சார்பாக மீள் கவனம் செலுத்தப்பட வேண்டும். இன்று நடப்பது என்ன?

- பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கென மது, போதைப்பொருள் போன்றவை அறிமுகப்படுத்தப்படுகின்றன.
- சில பாடசாலைகளில் போதைப் பாவனையால் மாணவர்களில் சிலர் தம்மையே உடல்ரீதியாக, உளரீதியாகக் காயப்படுத்திக்கொள்கின்றனர்.
- இளையோருக்கான தொழில்சார் வழிகாட்டல்கள், ஆன்மீக வழிகாட்டல்கள் அருகிக் காணப்படுகின்றன.
- இளையோர் சார்பாக சிறப்பு அக்கறை எடுக்கும் பெரியோர், நல்வழி காட்டும் பெற்றோர் அருகிக் காணப்படுகின்றனர்.
- இளையோர், பெரியோர், பெற்றோர் தொடர்பாக ஆரோக்கியமான தொடர்பாடல் இடம்பெற ஆவன செய்யவேண்டும்.
- ஏழைமக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்யும் விதமாக பௌதீக வளங்களை மீள்பங்கீடு செய்வதில் ஊக்கம் எடுத்து, அரசியற் தலைவர்களும் சமயத் தலைலவர்களும் இணைந்து செயற்பட வேண்டும்.
- மனிதம் மலர்ந்திட, மனிதநேயம் வளர்ந்திட, மனிதப் பண்புகள் மதிக்கப்பட சமூக வலைப் பின்னல் தோற்றுவிக்கப்பட வேண்டும்.
- எல்லோரும் எல்லாமும் பெற்றிட, இல்லாமை இல்லாதநிலை தோன்றிட நல்லோர்கள் வல்லோராய் வாழ்ந்திட வேண்டும்.
- உள சமூகத் தீமைகளின் வலு குறைக்கப்பட உள சமூக வளப்படுத்தல் நிகழ்வுகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் கிராமியரீதியாகத் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.
- பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே ஆரோக்கியமான, சமச்சீரான உறவு வளர்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூடநம்பிக்கைகள் முறியடிக்கப்பட, தீய சக்திகள் நலிவடைய, மதச் சடங்குகள் நேர்த்தாக்கத்தை மக்கள் மனங்களில் ஏற்படுத்த, அன்றாடப் பிரச்சனைகளுக்கு இறைவார்த்தையின் ஒளியில் விடைகாண, இறை நம்பிக்கை வளர்க்கப்பட வேண்டும்.

- உண்மை, நீதி, தர்மம், தியாகம், பகிர்தல் போன்றவை சமூக மட்டத்தில் வேரூன்ற ஆவன செய்யப்பட வேண்டும்.

- உலகுசார் ஈர்ப்புக்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மனிதன் இறைசார் ஈர்ப்புக்களால் கவரப்பட ஆத்மீக வழிகாட்டல் வலுவடைய வேண்டும்.

- இரவும் பகலும் மற்றவர்களின் நல்வாழ்வை கெடுக்கத் திட்டமிடும் சகுனிகளின் நச்சு வலயத்தை நுட்பமாக முறியடித்து நல்லோர் வாழ்வு பெறும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

- நேர்நோக்கில் வாழ்வில் திட்டம் தீட்டப்பட்டு நுணுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

- ஆளை ஆள் மதிக்கும், ஆளை ஆள் மறுமலர்ச்சிக்குத் தூக்கிவிடும் அன்புக் கலாச்சாரம் அரங்கேற வேண்டும்.

- திட்டமிட்ட கருக்கலைப்பு, சிசுச் சிதைவு, கொலை, களவு, கலாச்சாரச் சிதைவு, வன்முறை, கீழ்ழைப்பு போன்றவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

- இறைவனையே வெளிக்காட்டி வாழும் குழந்தைகளின் வாழ்வாற்றல் வெளிச்சத்திற்கு வர வீட்டுச்சூழல் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

- இல்லறம் இறைவனுக்கு உகந்த நல்லறமாகப் பேணப்பட, குடும்ப உறவு பலப்படுத்தப்பட ஆவன செய்ய வேண்டும்.

- இயற்கையோடு இணைந்த நிலையில் அன்போடும் பண்போடும் மனிதர் மகிழ்வுற்று வாழ வளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. ஏழையருக்கு நற்செய்தி

*1809*ம் ஆண்டு, தனது *26*ம் வயதில் இயூஜின் பரிசிலுள்ள குருமடத்திற்குக் கல்வி கற்கச் சென்றார். பலர்மோவிலுள்ள அவரது தந்தைக்கு ஒரு வருடத்திற்குப் பின்னர்தான் இச்செய்தி தெரியவந்தது. இயூஜின் பேரிதயம் படைத்தவராய் இறைவனை அன்புசெய்வதற்கு முதலிடம் கொடுத்தார். பரிவன்பை இலக்காகக் கொண்ட இயூஜின் அது இறைவனால் இலவசமாகக் கொடுக்கப்பட்டது என்றும் அது இறைவனுக்கே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் புரிந்துகொண்டு செயற்பட்டார். இச்சைகளைத் தூண்டும் அளவிற்கு நட்பு மாறும் பொழுது பெண்களோடுள்ள நட்புறவை இயூஜின் முறித்துக் கொள்வார். காலப்போக்கில் இயூஜின் முதிர்ச்சிபெற்று எல்லா நல்ல நட்புகளும் கடவுளிடமிருந்து வரும் கொடை என ஏற்றுக் கொண்டார். *1845*ல் தனது *63*ம் வயதில் ஒரு பெண்ணிற்குக் கடிதம் எழுதினார்:

"உங்களை நானும் நிறைய அன்பு செய்கின்றேன். இப்படி வெளிப்படையாகச் சொல்வது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. எனினும் எனது இதயம் அவ்வகையில் படைக்கப்பட்டுள்ளது. உங்களது நற்பண்புகள் எனது பாராட்டையும் மதிப்பையும் என்னில் தோற்றுவிக்கின்றன."

இயூஜின் *1811*ம் ஆண்டு மார்கழி மாதம் *21*ம் திகதி எமியென்சில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். *1812*ம் ஆண்டு ஐப்பசி மாதம் வரை குருமடத்தில் தங்கியிருந்த பின்னர். இயூஜின் எக்ஸ் என் புறெவான்சில் பணியாற்ற வந்தார். ஏழையருக்கு நற்பணியாற்றத் தான் இறைவனால் அழைக்கப்பட்டதை உணர்ந்து இறைவனுக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்தார். அழைப்பின் பல்வேறுபட்ட பரிணாமங்களைப் படிப்படியாகக் கண்டுபிடித்து, ஏழையருக்குப் பணியாற்றுவதையே தனது பிரதான தெரிவாக ஏற்று வலிதாகவும் உணர்வு ரீதியாகவும் முன்னெடுத்துச் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தூய ஆவியின் அருள் வழங்கலால் நிறைவாக்கப்படும் சந்தர்ப்பங்கள் அமையும்பொழுது ஒருவரது தெரிவு நிச்சயமானதாகும்" என்று புனித இஞ்ஞாசியார் கருதினார். இந்த நிலைப்பாடே இயூஜினின் வாழ்வில் காணப்பட்டது. மடலினில் பிரசங்கித்தபொழுது இயூஜின் பின்வருமாறு மொழிந்தார்:

**"ஏழையருக்கான குருவும் பணியாளருமாக வாழவே இறைவன் என்னை அழைத்துள்ளார் என நான் உணருகின்றேன். அவர்களது பணிக்காக என்னையே நான் அர்ச்சனையாக்குகின்றேன்."**

1812ல் இயூஜின் எக்ஸ்என் புறொவான்சிற்கு வந்ததும் ஏழையருக்கான பணியிலேயே அவரது முழுக் கவனமும் இருந்தது. அவர் தனது குறிப்பேட்டில் பின்வருமாறு எழுதினார்:

"எக்ஸ்என் புறொவான்சிற்கு நான் வந்ததும் மெற்ஸ் மாவட்ட ஆயர், 'நீர் என்ன பணி செய்யப்போகின்றீர்?' என்று கேட்டார். 'ஏழையருக்கும் சிறுவர்களுக்கும் சிறப்புப் பணியாற்றவே விரும்புகின்றேன்' என்று ஆயருக்குப் பதில் உரைத்தார். "சிறைச்சாலைகளில் பணியாற்றுவதும் என்னைச் சூழவுள்ள ஏழைச் சிறுவர்களுக்கு கல்வி கற்பிப்பதுமே எனது இலக்காகும்."

எக்ஸ்என் புறொவான்சில் இயூஜினின் ஆரம்ப குருத்துவக் காலம் ஆழ்ந்த செபத்திற்கான ஆயத்த காலமாகும். இயுஜின் வீட்டின் ஒரு பகுதியில் இரு சகோதரர்கள் இணைந்து துறவறப் பயிற்சியில் ஈடுபட்டார்கள். கடுமையான நேர அட்டவணை முன்வைக்கப்பட்டது.

4.30 காலை துயில் எழுதல்

5.00 செபம், தியானம், விவிலிய வாசிப்பு

8.00 திருப்பலி, காலைச் செபம், மறைச்சாட்சியரின் வரலாறு வாசிப்பு, விவிலிய வாசிப்பு, கற்றல்

12.00 மதிய உணவு

2.00 மாலை நோவனைச் செபம்

4.30 மாலை ஆராதனை, ஆத்தும சோதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.00 இரவுச் சாப்பாடு

7.00 நற்கருணை சந்திப்பு, ஆன்மீக வாசனை

9.00 இறைபுகழ் வழிபாடு, குழுமத்தில் ஆன்மீக கலந்துரையாடல்

10.00 இராச் செபம், ஓய்வு.

இயூஜினும் இரு சகோதரர்களும் இணைந்து நேர அட்டவணையைக் கடுமையாகக் கடைப்பிடித்து குழும வாழ்விற்கு வித்திட்டார்கள்.

## இயூஜினின் தேர்வுக்கு வழிகாட்டிய தத்துவங்கள்:

**✚ நிகழ்வுகள் ஊடாக இறை அழைத்தலுக்குச் செவிமடுத்தல்**

இயூஜின் சாதாரண நிகழ்வுகள் ஊடாக தனது வாழ்விற்கான இறைத் திட்டத்தை அனுமானித்தார். இயேசு ஆண்டவரே இயூஜினை வழி நடத்தினார். எந்த நேரத்தில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது, திருச் சபைக்காக எப்படிச் செயற்படுவது என்பது ஆன்மாக்களுக்கான ஆர் வத்தை எப்படி உறுதிப்படுத்துவது என்பது, இயேசு - இயூஜின் தொடர் பாடலில் துல்லியமாகத் தெளிவாகியது.

**✚ கைவிடப்பட்டவர்களின் தேவையை நிறைவாக்கத் தியாகம்**

கைவிடப்பட்டவர்களின் தேவையை நிறைவாக்குவதற்கு இயூஜின் தன்னையே விடுதலையாக்கினார். பங்கில் மிகவும் பின்தங்கிய ஏழை மாணவர்களுக்கு மறைக் கல்வி கற்பிக்க இயூஜின் நியமிக்கப்பட்டார். அங்கு கல்வி பயின்ற ஒரு மாணவன் தனது தாய்க்குப் பின்வருமாறு கடிதம் எழுதினான்:

"அவர்கள் பங்கில் வாழ்வோரில் மிகவும் பின்தங்கியோர். குருமட அதிகாரிகள் தளர்ச்சியுற்ற உடலுக்குப் புதுவாழ்வு கொடுப்பதற்காக என்னை மாணவர் தலைவனாக நியமித்தார்கள். கடவுளிடம் அவர்கள் திரும்பிவர என்னாலான உதவிகள் செய்வேன்."

பங்குத்தள கல்வி நிறுவனங்கள் ஏழை மாணவர்களின் ஈடேற்றத்தில் அக்கறை எடுக்காமையை இயுஜின் உன்னிப்பாகக் கவனித்தார். எனவே, இயுஜின் இவ்வாறு கைவிடப்பட்டோரில் கவனத்தைச் செலுத்துவதற் காகத் தன்னைத் தயார்படுத்தலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயூஜின் விடுதலையை அருளாக முன்வைத்து தனது முதற் பலியில் வேண்டுதல் செய்தார்: "எனது பாவங்களுக்கு மன்னிப்பு பெறவும் இறைவனை அன்புசெய்வதை எல்லாவற்றிற்கும் மேலாக மேற்கொள்ளவும் அயலவருக்கு அன்பு காட்டவும் இதயத்திலும் ஆன்மாவிலும் தூய்மையை அனுபவித்து ஆவியின் தூய விடுதலையில் நகரலானார்.

**✚ ஒவ்வொரு ஆன்மாவினது பெறுமதி**

இயூஜின் எல்லா ஆன்மாக்களையும் பெறுமதிமிக்கதாக மதித்தார். பாரபட்சமில்லாது எல்லா ஆன்மாக்களையும் சமமாக எடை போட்டார். இயேசுக் கிறிஸ்து சிந்திய இரத்தம் எல்லா ஆன்மாக்களுக்கும் பயன்பட்டது.

## இயூஜினது இறை அழைப்பின் பரிணாமம்:

***1. மிகவும் மோசமாகக் கைவிடப்பட்டவர்களின் மூலமாக***

***2. குழுமத்தின் மூலமாக***

***3. துறவற வாழ்வின் மூலமாக இயூஜின் இறை அழைப்பின் பரிணாம வளர்ச்சியினை உணர்ந்து கொண்டார்.***

***1. கைவிடப்பட்டவர்களின் மூலமாக***

இயூஜின் பார்வையில் மூவகை மட்டத்தில் கைவிடப்பட்ட ஏழைகள் காணப்படுகிறார்கள்.

*1வது, பாமரர், படைப்பாளிகள், ஏழைகள், ஓரம்கட்டப்பட்டோர்*

*2வது, எக்ஸ்என் புறொவான்ஸ் இளைஞர்கள்*

*3வது, சிறைக் கைதிகள்*

***2. குழுமத்தின் மூலமாக***

***3. துறவற வாழ்வின் மூலமாக.***

***1. கைவிடப்பட்டவர்களின் மூலமாக***

**ஏழைகளாக,** ஓரம்போனவர்களாக, கைவிடப்பட்டவர்களாகக் காணப்படுவோர் இயூஜினின் பார்வையில் பெறுமதிமிக்கவர்களாகவே விளங்குகின்றார்கள். "நீங்கள் கடவுளின் பிள்ளைகள், இயேசுவின் சகோதர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகள், இறை இராட்சியத்தை சுவீகரித்துக் கொள்பவர்கள், புனித பேதுருவின் வார்த்தையில், 'நீங்கள் தூயமரபினர், நீங்கள் அரசர்கள், நீங்கள் குருக்கள், ஒருவகையில் நீங்கள் தெய்வங்கள்!" என்று இயுஜின் விழித்துக் கூறினார். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அது அவர்களுக்குத் தெரிந்த மொழியிலேயே நேரடியாகப் போதிக்கப்பட வேண்டும் என்றும் இயூஜின் பெரிதும் விரும்பினார்.

**இளையோரே** இயூஜினின் அடுத்தகட்ட இலக்குக் குழுவினர் ஆவர். இவர்கள் கல்விசார்பாகவும் தொழில் சார்பாகவும் வழிநடத்தப்பட வேண்டியவர்கள். ஏழை இளையோரின் கல்வி அரசினால் புறக்கணிக்கப்பட்டே காணப்பட்டது. இதனை முறியடிக்கவே இயூஜின் மும்முரமாக ஈடுபட்டார். மிகவும் கைவிடப்பட்டோரை இறை அழைப்பில் இணைப்பதற்காக இளையோர் சபையை இயூஜின் ஸ்தாபித்தார்.

ஆறு இளையோர் இயூஜின் டீ மசனெட் தந்தையோடு 1813ம் ஆண்டில் இளையோர் அணியாக மாசில்லாமல் உற்பவித்த மரியன்னையின் பாதுகாவலின்கீழ் ஒன்றுதிரண்டார்கள். அப்போது அவர்கள் கொடுத்த வாக்குறுதியாவது:

"கீழே கையொப்பமிட்ட, எக்ஸ் என் புறொவான்சில் ஸ்தாபிக்கப்பட்ட இளையோர் சபையின் அங்கத்தவர்களாகிய நாம், மாசில்லாமல் உற்பவித்த மரியன்னையின் பாதுகாவலின்கீழ் பரிசுத்த பரம திருத்துவத்திற்கு மரியன்னையின் கரங்களில் இதயத்தால் இணைந்து நித்தியமும் எம்மை அர்ப்பணிக்கின்றோம்."

இந்த ஆறு பேர் கொண்ட அணியிலிருந்து இருவர் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்கள். வருட இறுதியில் இளையோர் அணியின் எண்ணிக்கை 23ஆக உயர்ந்தது. 1814ம் ஆண்டு இறுதியில் எண்ணிக்கை 60 ஆகவும் 1815ல் 120 ஆகவும் 1816ல் 200 ஆகவும் 1817ல் 300 ஆகவும் உயர்ந்தது.

அடுத்த இலக்குக் குழுவினர் **சிறைக்கைதிகள்** ஆவர். இவர்கள் எல்லா நிலைகளிலும் கைவிடப்பட்டவர்களாகவே துன்புற்றுக் காணப்பட்டார்கள். இயுஜின் நாள்தோறும் சிறைச்சாலைகளில் கரிசனையோடு சிறைக்கைதிகளைச் சந்தித்து, ஆறுதல்கூறி வலுப்படுத்தினார். இளங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவான இயூஜின் சிறைக்கூண்டுகளில் திருப்பலி ஒப்புக்கொடுத்து, நற்கருணை வழங்கலானார். கரிசனையோடு கலந்த அன்புப் பணி சிறைச்சாலைகளில் சிறப்பாக இடம்பெற்றது.

**2. குழுமத்தின் மூலமாக**

அர்ப்பணரீதியாக இயேசுவோடு இணைந்து வாழும் குருக்கள், துறவியரே குழும வாழ்விற்குத் தேவைப்பட்டார்கள். ஒரே ஆன்மாவும் ஒரே இதயமும் கொண்டவர்கள் சேர்ந்து வாழும்பொழுது உண்மையான மகிழ்ச்சி நிறைவாகக் கிடைக்கும். இயூஜின் அமதிகளுக்கு ஆத்மீக வாஞ்சையோடு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"என் அன்பு நண்பனே,
ஆன்மாக்களின் விடுதலைக்காகவும்
இறைவனுடைய மகிமைக்காகவும்
இயைபுபெற்ற மனத்தோடு சிலுவையின் அடியில் கிடந்து இறைவனுக்கு மட்டுமே செவிமடுப்பாய். பேராசையின் சத்தத்தை, ஆடம்பர நாட்டத்தை முறியடித்து விடுங்கள். எமது நாட்டு மக்களின் ஏக்கத்தைக் களையத் தீவிரமாக முயற்சி எடுங்கள். காட்டாற்றுவெள்ளம் போல் கட்டவிழ்க்கப்பட்ட தீமைகளை வெல்லுவதற்கான வாய்ப்புக்கள் எவ்வளவு சொற்பமானவை என எண்ணிப் பாருங்கள். இந்த இடர்பாடுகளை எதிர்கொள்ள உங்கள் இதயத்தையே கேளுங்கள். பின்னர் எனது கடிதத்திற்குப் பதில் எழுதுங்கள்.

எனது அன்புக்குரியவரே, ஆண்டவர் தரும் பணியை முன் எடுப்பதற்கு நீர் கட்டாயமாகத் தேவைப்படுகின்றீர். விசுவாசமின்மை எனும் பிரச்சனைக்கு பிரான்ஸ் நாட்டு மக்கள் சிக்குண்டிருக்கும் இக்கால கட்டத்தில் அவர்களை விடுவிக்க திருச்சபையின் தலைமைப்பீடம் உறுதி பூண்டுள்ளது. பல்வேறுபட்ட மறைமாவட்டத் திருச்சபையிலிருந்து நல்லுள்ளம் கொண்டோர் பலர் எமது நல்லாயன் உயர் தலைவர் இயேசுவின் அழைப்பை ஏற்க முன்வர வேண்டும். அலகையின் சாம்ராட்சியத்தை நிர்மூலமாக்குவதில் ஓயாத அலைகளாய் அவர்கள் செயற்படுவார்கள். புனிதர்களான இக்னேசியஸ், சாள்ஸ், பிலிப்புநேரி, லிகோரி ஆகியோரின் ஒழுங்குகளிலிருந்து எமது வாழ்வியல் சட்டத்தைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்துவோம்."

கையெழுத்துப் போடாமல் கடிதம் அனுப்பப்பட்டது. எனினும் பாதர் தம்பியர் முழு விருப்போடு தனது பங்களிப்பை நல்குவதாகப் பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம் எழுதினார். 33 வயதுள்ள இயூஜின் டீ மசனெட், 26 வயதுடைய கென்றி ரெம்பியர், 26 வயதுடைய டிப்லியு, 25 வயதுடைய அகஸ்ரே லியார்ட், 47 வயதுடைய பியரே நொலாஸ்குவே மீ ஆகியோரே முதற் குழும அங்கத்தவர்கள் ஆவர். தமது இல்லமாக இயூஜின் ஒரு கார்மேல் மடத்தை வாங்கினார். அங்கு 5 அங்கத்தவர்களும் சந்தோசமாகத் தங்கலானார்கள். புறொவான்சின் நற்செய்தி பணியாளர் சபை 1816ம் ஆண்டு தை மாதம் 25ம் திகதி புனித பவுலின் மனமாற்றத் திருநாளன்று ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபை இரு நோக்கங்களைக் கொண்டது:

1வது, மீள் கிறிஸ்தவ உருவாக்கலுக்கான பணியினை முன்னெடுத்தல்.

2வது, ஒழுங்குகளை அடிப்படையாக வைத்து மேற்றாசனத்திற்குப் பணி யாற்றவும் தம்மைத் தூய்மைப்படுத்தவும் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

முதற்குழுமத்தினர் அனுசரிக்க வேண்டிய சிறப்புப் பண்புகள் பின்வரு மாறு:

**1. வறுமை**

ஏழ்மையைக் குழுமத்தினர் வாக்குறுதியாக மேற்கொண்டார்கள். கடவுளே அவர்களை வழிநடத்தினார்.

**2. ஒன்றிப்பு**

நாங்கள் எப்படி இருக்கவேண்டுமோ அப்படியாகவே இருந்தோம் ஒரே இதயமும் ஒரே ஆன்மாவும் கொண்டவர்களாய் வியத்தகு முறை யில் திகழ்ந்தோம்.

**3. பிறர் சிநேகம்**

அப்போஸ்தலர்கள், இயேசுவிற்குப் பணிவிடை செய்வதற்காக அனைத் தையும் துறந்தார்கள். இயேசு அவர்களது ஆன்மாக்களை ஆத்மீக மகிழ்ச்சியினால் நிரப்பினார்.

**4. மகிழ்ச்சி**

ஒரே இதயமும் ஒரே ஆன்மாவும் கொண்டு ஒருங்கே வாழ்வதனால் மகிழ்ச்சியை அவர்கள் அனுபவித்தார்கள்.

**5. செபம்**

இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் அவர்கள் ஒன்றுகூடி செபத்தின் மூலமாகவும் தியானத்தின் மூலமாகவும் ஞான ஒடுக்கம் செய்து தம்மைத் தயார்படுத்திக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. துறவற வாழ்வின் மூலமாக

1845ல் அப்போஸ்தலர்களின் முன்மாதிரியையும் தியாகத்தையும் முன் வைத்து, இயூஜின் டீ மசனெட் மிகவும் பின்தங்கியவர்களுக்குக் கற்பித்து அவர்களை மனம்மாற்றுவதை இலக்காகக் கொண்டு துறவற வாழ் வினை முன்வைத்தார். அவர் குறிப்பேட்டில் எழுதினார்:

"அப்போஸ்தலர்களின் வாழ்வில் நிலவிய பக்தி உணர்வையும் தியாகத் தையும் நோக்காகக் கொண்டு மிகவும் பின்தங்கிய ஆன்மாக்களுக்குக் கற்பிப்பதும் மனமாற்றுவதுமே எனது நோக்காகும்.

எமது போதனையில் நாம் வெல்லுவதற்கு அப்போஸ்தலர்களின் அடிச் சுவட்டில் நடந்து அவர்களது நற்பண்புகளை எமதாக்கிக் கொள்ள வேண்டும்.

வாக்குறுதிகள் மூலமாக எமது சிறிய குடும்பம் கடவுளுக்கும் திருச்சபைப் பணிக்கும் தன்னை அர்ப்பணமாக்கிக் கொள்ள வேண்டும்."

கிறிஸ்துவோடு ஒன்றாவதன்மூலம் அமதிகள் தம்மை வெறுமையாக்கி இயேசுவோடு ஒன்றாவதன் மூலம் அன்புப் பணிக்கு உள்ளாக்கிக் கொள்கின்றார்கள். இறைவனோடு நிறைவான உறவைக் கொண்டிருத் தலே பூரணத்துவம் ஆகும். இயூஜின் டீ மசனெட் இறைவனோடு ஆழ மான உறவை வெளிக்காட்டியது போல நாமும் எமது மட்டுப்படுத் தப்பட்ட பண்புகளை ஏற்றுக்கொண்டு நிறைவழியில் பயணிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏழையரின் புதுமுகங்கள்:**

ஏழைகளின் புதிய முகங்களை, கைவிடப்பட்டு, உரிமைகள் இழந்து தூசாக மதிக்கப்பட்டு வாழ்வோரை இன்றைய சூழலில் எம்மால் இனம்காண முடிகின்றதா? யார் அவர்கள்?

01. கலாச்சாரச் சீர்கேடுகளுக்கும் மது, போதைப் பாவனைக்கும் பழக் கப்பட்ட இளையோர், பெரியோர்கள்

02. வழிகாட்டல், பாதுகாப்பு அருகிய நிலையில் காணப்படும் சிறியோர் கள், இடைவிலகல் மாணவர்கள்

03. வாழ்வாதரம் குறைந்தநிலையில் வாதைப்படும் கைம்பெண்கள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள்

04. பொறுப்புணர்வு குறைந்த பெற்றோர்கள், அரசியல், சமய, சமூகத் தலைவர்கள்

05. அன்புக் கலாச்சாரத்துக்கு எதிராக அடிக்கடி தளம்பலுறுபவர்கள்

06. ஆன்மீக வறுமையில் வாழும் செல்வந்தர்கள்

07. எமது சொந்த வளங்களை ஒழுங்காகப் பயன்படுத்தாது வெளி நாட்டு மோகத்தால் கவரப்படும் எம்மவர்கள்

08. உயிர்காக்க பிறநாடுகளுக்கு ஓடிப்போய் சொந்த மண்ணை, உறவு களை மறந்து வாழும் ஊரவர்கள்

09. உலகபோக்கில் பணஆசை கொண்டு வாழ்வியல் விழுமியங்களை நலிவுறச் செய்பவர்கள்

10. லீசிங் வீச்சுவலையில் வீழ்ந்து அன்றாடம் அவதிப்படும் பெண்கள்

11. தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு, உயிர்பிழைத்து வாழ்வோர்

12. இறைவனில் நம்பிக்கை இழந்து பிறரை துன்புறுத்தி வாழ்பவர்கள்

13. இயற்கையை அழித்து, இயற்கைச் சமநிலைக்குப் பங்கம் விளைவிக் கும் வண்ணம் தான்தோன்றித்தனமாகச் செயற்படுபவர்கள்

14. தவறான நட்பினால் தூய நல்வாழ்வை முடமாக்கி வாழ்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. தவறான தொடர்புச் சாதனப் பயன்பாட்டால் சுகமான சகவாழ்வைச் சிதைவுறுத்தி வாழ்பவர்கள்

16. அடிப்படை வசதிகள் இன்றி அல்லலப்படும் பிச்சைக்காரர்கள், பரதேசிகள், தனியன்கள்.

இவர்கள் சார்பாக எமது பணிகள் திட்டமிட்ட முறையில் எல்லோருக்கும் பயன்படும் வகையில் பரவலாக்கப்பட வேண்டும். மது, போதை அடிமைத்துவத்திலிருந்து மக்களை, குறிப்பாக இளையோரை மீட்டெடுக்க பல்வேறுபட்ட பாசறைகள், விழிப்பூட்டல் நிகழ்வுகள், தியானங்கள், கிராமிய ரீதியான மதுபோதை தடுத்தல் முகாம்கள், மகாஞான ஒடுக்கங்கள், தனியாள், குடும்ப, குழு ஆற்றுப்படுத்தல்கள் போன்ற உள - சமூக - ஆன்மீக வளப்படுத்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தனி மனித மாற்றமே சமூக மாற்றத்திற்கு இட்டுச்செல்லும்.

எல்லோரும் எல்லாமே பெற்ற நிலையில் மனித வளங்கள் பாரபட்சமின்றிப் பகிரப் படவேண்டும்.

துறவுநிலையில் உறவுகள் வளர்க்கப்பட வேண்டும்.

பாரபட்சமற்ற அன்புச் சமூகம் கட்டி எழுப்பப்பட எல்லோரும் முன் நின்று உழைக்க வேண்டும்.

மனவிருப்போடு புதுவாழ்வுப் பயணிகளாய் இணைய இருப்போரை இருகரம் நீட்டி வரவேற்று வாழ்வியற் கல்வியை, விழுமியக் கலாச்சாரத்தைப் புகட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. பாரம்பரிய இரட்சணியப் பணிகள்

*15 ஆண்டுகள் நெப்போலியனது ஆட்சி நீடித்தது. 1814ம் ஆண்டு நெப்போலியன் பிடிபட்டு, எல்பாவிற்கு நாடு கடத்தப்பட்டார் ஓராண் டிற்குள் நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பியோடி 1815ம் ஆண்டு பங்குனி மாதம் 1ம் திகதி கன்னெஸ் அருகே குடியேறினார். 100 நாள் நெப்போலியனது ஆட்சி அவர் வோட்டர்லூவில் தோல்வியைத் தழுவியதும் 1815ம் ஆண்டு ஆனி மாதம் 18ம் திகதி முழுமையாக முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.*

*இயூஜின் டீ மசனெட் எழுதினார்:*

*"எமது நாடு எத்தகைய நாடு! எமது விசுவாசத்தை இழந்தபொழுது எமது நகைச்சுவையுணர்வையும் நம்பிக்கையையும் இணைத்தே இழந்தோம். இயூஜின் திருப்பலியின்பொழுது பேரரசனுக்காகப் பகிரங் கமாகச் செபித்தார். போருக்குப் பின்னர் மக்கள் இறைப்பற்றுக் குறைந் தவர்களாய், குருக்களை மதியாதவர்களாய் காணப்பட்டார்கள். முதலா ளித்துவ வர்க்கத்தினர் அமதிகளின் மகாஞான ஒடுக்கத்தின்பொழுது தொல்லை கொடுத்தார்கள்.*

*போரின் போதும் போரின் பின்னரும் பொதுமக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளானார்கள். மக்கள் புரட்சியில் வெறுப்படைந்தவர்களாய் தொடர்மாற்றத்திற்கு உள்ளாகிவரும் உலகில் நாட்டில் அமைதியையும் நாட்டின் ஸ்திரதன்மையையும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியின் பொழுது காரணத்தை முதன்மைப்படுத்திய அரசினால் மக்களின் ஆழமான மறைசார் சிந்தனைகளுக்கு ஈடுகொடுக்க முடிய வில்லை. மறைசார் புதுப்பித்தலுக்கு மக்கள் தயாரானார்கள். இதுவே இயூஜினதும் அவரது சிறிய குழுவினரதும் இரட்சணியப் பணிவெற்றிக் குச் சான்றாகும். இயூஜின் பாதர் ரெம்பியருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"பிரான்ஸ் நாட்டின் இழந்துபோன விசுவாசத்தை மீள்கொணர்வதற்கு மகாஞான ஒடுங்கங்களே தேவை என்பதை திருச்சபையின் தலைமைப் பீடம் உறுதியாக நம்புகின்றது. எனவே, பல்வேறு மறைமாவட்டங் களிலுள்ள நல்லுள்ளங்கள் உயர் நல்லாயனின் எண்ணங்களுக்கு இசை வாக ஒன்றிணைகின்றார்கள்."

## 1வது மாகாஞான ஒடுக்கம்

*கிரான்ஸ் (மாசி 11 - பங்குனி 17, 1816)*

எக் என் புறொவான்சிற்கு அப்பால் 30 கிலோ மீற்றர் தொலைவி லுள்ள கிரான்சில் முதல் மகாஞான ஒடுக்கம் இடம்பெற்றது. மகா ஞான ஒடுக்கத்தின்பொழுது இயூஜின், பாதர் ரெம்பியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார்:

"எனது நல்ல சகோதரனும் நண்பனுமாகிய உமக்கு எழுதுகின்றேன். உண்பதற்கோ அல்லது உறங்குவதற்கோ எமக்கு நேரமேயில்லை. நான் விபரங்களை விரிவாக எழுதினால் நீர் அழுதிடுவீர். மகாஞான ஒடுக் கம் இன்றேல் இந்நாட்டிலுள்ள மறை அழிந்துவிடும். இது ஒரு வெற்றி யாகும். இது எமது இறப்பாயினும் நான் முறைப்பாடு செய்யவில்லை. எமது பணி இன்றியமையாதது. தேவ அழைத்தலுக்காகத் தொடர்ந்து மன்றாடுங்கள்."

இந்த ஞான ஒடுக்கம் பற்றி பாதர் றம்பேர்ட் பின்னர் எழுதினார்:

"மகாஞான ஒடுக்கம் பற்றி விபரமான அறிக்கை அனுப்பலாம் என எண்ணினோம். ஆனால் முடியவில்லை. இது எமது அருட்தந்தையர் களின் முதல் அனுபவமாகும். **எமக்குப் பல அருள் வழங்கல் புதுமை களும் இறை ஆசீர்வாதங்களும் கிடைக்கப்பெற்றன. என்னே பக்தி! என்னே எதிர்நீச்சல்! என்னே பங்கேற்ற பணியாளர்களின் பணி ஆர்வம்!**"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1818ம் ஒழுங்கு

மகா ஞான ஒடுக்கப் போதனைகளையே இவ்வொழுங்கு வலியுறுத்து கின்றது. போதனை தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளை யும் இவ் அத்தியாயம் விரிவுபடுத்திக் கூறுகின்றது.

கூறு *1:* புரொவான்ஸ் இரட்சணிய சபையின் இலக்கு மறை மாவட்ட குருக்கள் சிலரை ஒருங்கிணைத்து எமது இரட்சகர் இயேசு வின் நற்பண்புகளில் வாழவைத்து, ஏழையருக்கு நற்செய்தி புகட்டு வதாகும்.

கூறு *2:* ஏழையருக்கு ஆன்மீக உதவி நல்க, ஆன்மீகப் பஞ்சம் ஏற் பட்ட கிராமப் பகுதிகளில் ஆன்மீகத்தை நிலைநாட்ட அவர்கள் தம்மை அர்ப்பணிப்பார்கள். போதனைகள், ஞான ஒடுக்கங்கள், மறைக் கல்வி வகுப்புக்கள், இதர ஆன்மீகப் பயிற்சிகள் மூலம் மக்களின் தேவை களை நிறைவு செய்வார்கள்.

கூறு *6:* ஆகக் குறைந்தது இரு பணியாளர்களாவது இணைந்து குழுமமாகச் சாட்சியம் பகரவேண்டும்.

கூறு *7.* இது அப்போஸ்தலிக்க வறுமை பற்றிக் கூறுகின்றது. எமது பணியாளர்கள் பொதுவாக நடந்தே சென்றார்கள். முதல் மகா ஞான ஒடுக்கத்தின்பொழுது எக்ஸ் என் புறொவான்சிலிருந்து பிரான்சிற்கு *30* கிலோ மீற்றர் தொலை நடந்து சென்றார்கள். எமது ஸ்தாபகர் ஒரு முறை *66* கிலோ மீற்றர் மகாஞான ஒடுக்கம் ஒன்றிற்கு நடந்து சென்ற தாகக் கூறப்படுகின்றது.

கூறு *10:* மகா ஞான ஒடுக்கத்தின்பொழுது இடம்பெற்ற நன்மைத் தனங்களை உறுதிப்படுத்துவதற்காக போதகர்கள் குறைந்தது ஒரு வருடத்திற்குள் மீள் தரிசிப்பு செய்யவேண்டும். அவர்கள் அச் சில நாட் களில் ஆன்மீகப் பயிற்சிகளை சிறப்பாக மேற்கொண்டு ஆன்மீக வலு வூட்டுவார்கள்.

கூறு *15 - 17:* ஆடம்பரமான ஊர்வலங்கள் தவிர்க்கப்பட வேண்டும். மிகவும் பின்தங்கியவர்களுக்கான கரிசனைமிகுந்த இச்செயற்பாடு எவ் வகையிலும் முறியடிக்கப்படக் கூடாதது என்பது வலியுறுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா ஞான ஒடுக்கத்திற்கான சில குறிப்புக்கள்:

### *1. பொதுவான ஆயத்தம்*

குழும முதல்வர் மகா ஞான ஒடுக்க முதல்வரை நியமிப்பார். குழு முதல்வர் தன்னோடு இணைந்து பணியாற்றவிருக்கும் குழுவினரைத் தனித்தனியே சந்தித்து ஆலோசனை பெறுவார். தனித்தும் குழுவாகவும் தம்மை ஆயத்தப்படுத்துவார்கள். மகாஞான ஒடுக்கத்திற்கு முதல் நாள் ஒரு நாள் ஞான ஒடுக்கத்தைத் தமக்குள்ளே செய்துகொள்வார்கள். மகா ஞான ஒடுக்கத்திற்குப் புறப்படுகையில் குழும முதல்வர் தியானக் குழுவினரை ஆசீர்வதிப்பார்.

தியானக் குழுவினரை வரவேற்க பங்குத் தந்தை சிலுவை தாங்கியவராய், பங்கு மக்களுடன் இணைந்து காத்து நிற்பார். தியானக்குழு முதல்வரிடம் சிலுவை கையளிக்கப்பட பவனி ஆலயத்தை வந்தடையும்போது பங்குத்தந்தை குழுவினரை ஆசீர்வதிப்பார்.

### *2. இல்லத் தரிசிப்பு*

எல்லாக் குடும்பங்களும் தனித் தனியாக தரிசிக்கப்பட்டன. குடும்பச் சூழல்கள் நேருக்கு நேர் தரிசிக்கப்பட்டு அவர்களது பிரச்சனைகள் மறையுரைகளில் எதிரொலித்தன. இப்படியான போதனைமுறையை எமது ஸ்தாபகரே முதன்முதலாக முன்வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பாதர் இயூஜினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இல்லத் தரிசிப்பு மிகவும் பெறுமதி வாய்ந்தது என்று கருதினால் புபார்ட் குறிப்பிடுகின்றார். பாதர் இயூஜின் தனது ஏட்டில் குறிப்பிடுகின்றார்:

**"இல்லத் தரிசிப்புக்கள் மிகவும் முக்கிமானவை. ஏனெனில், அவை போதிக்கப்பட வேண்டிய மக்களைப் போதகர்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவருகின்றன. எல்லாவற்றையும் எல்லோருக்கும் பகிர்ந்தளித்து தூர நிற்பவர்களின் இதயங்களை வென்றவர்களாய் உள்ளுக்குக் கொணர்வார்கள். தாங்களே தங்களது பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் விதமாக அவர்களை அணுகி இல்லங்களைத் தரிசிப்பது மிகவும் பயனுள்ளதாகவும் பெறுமதி வாய்ந்ததாகவும் இருக்கின்றது."**

### *3. நேர அட்டவணை கடைபிடித்தல்*

*4 மணி அதிகாலை: துயில் எழுதலும் தியானமும்*

*காலை: தனியார் தரிசிப்பு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பலி: கூட்டுத் திருப்பலி இடம்பெறுவதில்லை. 1வது குரு திருப் பலி ஒப்புக் கொடுக்க 2வது குரு திருப்பலிக்கு உதவுவார். பின்னர் 2வது குரு திருப்பலி ஒப்புக்கொடுக்க 1வது குரு திருப்பலிக்கு பக்தி யுடன் உதவுவார்.

மதியம்: பொதுவாக உணவு பரிமாறப்படும். சில நாட்களில் இருவர் இருவராக நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குவர். ஒரு மணித்தி யால ஓய்வு இடம்பெறும்.

மாலை: தியானத்தின் பிரதான பகுதி இடம்பெறும். இதில் எல்லா போதகர்களும் பங்கெடுப்பார்கள்.

இரவு 10 மணி: பொது இராவுணவு.

இரவு 11 மணி: வெளிச்சம் அணைக்கப்படும். ஓய்வு.

### 4. தியானக் குழுக் கூட்டம்

ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் தியானக் குழுத் தலைவர் தலைமையில் தியானக் குழுக்கூட்டம் இடம்பெறும். குழு அங்கத்தவர் கள் தாம் செய்துகொண்ட தவறுகளுக்காக மன்னிப்பு வேண்டுவர். தியானத்தின் பொழுது எழுந்த பிரதான பிரச்சனைகள் பற்றிய கலந் துரையாடல் இடம்பெறும்.

### 5. அறிவித்தல்கள்

நிகழ்ச்சிகள் பற்றிய அறிவித்தல்கள் நாள்தோறும் இடம்பெறும். இது தொடர்பாக மக்கள் விழிப்போடு இயங்கத் தூண்டுவிக்கப்படுவார்கள்.

### 6. இறைவார்த்தை போதித்தல்

ஆழமான முறையில் பிரசங்கிப்பதற்கு போதகர்கள் இறைவார்த்தையில் வாழ்பவர்களாய் செபத்தில் ஊறியிருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் நற்பண்புகளைத் தமது வாழ்வாக்கிக் கொள்ள வேண்டும். அப்போஸ்தலர்களைப் போல் தூய ஆவியை வெளிக் காட்டி அவர்கள் சிலுவையில் அறையுண்ட இயேசுவையே போதிக்க வேண்டும். இறைவனின் மகிமைக்காக ஆன்மாக்களை வெல்லுவதே போதனையின் இலக்காகும். பெருமையின்றித் தம்மையே வெறுமை யாக்கிக் கொள்வது போதகர்களின் சிறப்பான பண்பாகும். 1842ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி இயூஜின் தனது செய்தி ஏட்டில் குறிப்பிட்டார்:

"அருட்பணி பேர்வின் எழுதிய கடிதத்தை அருட்பணி வின்சன்ற் அனுப்பியிருந்தார். கிரேநோபிளில் அருட்பணி பேர்வினும் அருட்பணி லவின்னேயும் மேற்கொண்ட போதனையில் தாம் இறை இரக்கத்தின் கருவிகளாய் அப்பிரதேசங்களில் செயற்பட்டதையிட்டு இறைவனுக்கு நன்றிகூறினார்கள். இறைவனின் திருச்சபையில் அவ்வாறு நன்மைத் தனங்களை வெளிக்கொணரவைத்த இறைவனுக்கு நாம் நன்றிகூறாமல் எப்படி இருக்க முடியும்? இவ்வகையில் எம் சபைக்கு கிடைத்த பெறு பேறு பெருமைக்குரியதே."

### 7. ஒப்புரவு அருட்சாதன நிறைவேற்றல்

அருட்பணி றொபேர்ட் எழுதினார்:

"இரட்சணியப் பணியாளனாக அல்லது பாவசங்கீர்த்தனம் கேட்பவனாக, அல்லது பாவிகளைத் தம் பாவங்களுக்காக அழவைத்து கிறிஸ்துவின் எல்லையில்லா அன்பினைப் பறைசாற்றிய போதகனாக இயூஜின் என்ற மனிதன் அன்போடு, பண்போடு, இரக்கத்தோடு விளங்கினான் என்றால் அது மிகையாகாது. எல்லா மக்களையும் இயேசுவின் பாடுகளோடு இணைப்பதில் இயூஜின் வல்லமையுடையவராய் விளங்கினார். 'பாவசங்கீர்த்தனம் கேட்க எச்சந்தர்ப்பத்திலும் மறுக்க வேண்டாம்' என்று இயூஜின் குழுவினரைக் கேட்டுக்கொண்டார். **இயூஜினும் அவரது சிறு சபையினரும் பாவசங்கீர்த்தன இருக்கைகளில் ஆர்வத்தோடும் ஆத்மீக வாஞ்சையோடும் காத்திருப்பார்கள்."**

1837ம் ஆண்டு தீஸ் எனும் இடத்தில் இடம்பெற்ற மகா ஞான ஒடுக்கத்தின்பொழுது இளம் சமூகத்தினர் சிலர் குழப்பத்தை ஏற்படுத்தினர். பின்னர் பாவசங்கீர்த்தனத்திற்கு வந்தனர். "அவர்களுக்கு நற்கருணை வழங்கலாமா?" என்று அருட்பணி இயூஜின் கிகுஸ் கேள்வி எழுப்பினார். இயூஜின் டீ மசனெட் பதிலாக எழுதினார்:

"பாவிகள் கனிவுடன் வரவேற்கப்படவேண்டும். பாவிகளிடம் அனுப்பப் பட்டுள்ளீர்கள் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். நாங்கள் இரக்கத்தின் பணியாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, எல்லோர் சார்பாகவும் தந்தையின் பரிவன்பை வெளிப் படுத்துவோம். எமது பணியின்பொழுது எழும் சவால்களை, எதிர் பாராத் தடைகளைப் பெருமனத்தோடு பொறுத்துக் கொள்வோம். ஊதாரிமகன் மனம் மாறித் திரும்பி வந்தபொழுது, தந்தை நல்மனத் தோடு வரவேற்று விருந்தில் மகனைப் பங்கெடுக்கவைத்தார். இவ் வாறே நாமும் நம்மை நாடி வரும் பாவிகளை மன்னித்து, அவர்கள் திருவிருந்தில் பங்கெடுக்க வாய்ப்பு வழங்க வேண்டும்."

**8. நிறைவு**

வழிபாட்டுரீதியாக ஈற்றில் மகா ஞான ஒடுக்கச் சிலுவை நடப்படுவதோடு மகாஞான ஒடுக்கம் நிறைவுபெறுகின்றது. மக்கள் தமது அர்ப்பணத்தை நினைவுகூரும் அடையாளமாகவே சிலுவை முன்வைக்கப்படுகின்றது.

## முதல் மகா ஞான ஒடுக்கக் கனிகள்

**1. புதுப்பித்தலின் நேரம்**

கிறிஸ்தவர்கள் நேரம் எடுத்து தங்களை மாற்றிக்கொள்ள முன்வருகின் றார்கள். கிறிஸ்துவோடுள்ள உறவைப் புதுப்பித்து ஒருவர் ஒருவரோடு சேர்ந்து கொள்கின்றார்கள்.

**2. மக்களின் முக்கியத்துவம் உறுதிப்படுத்தப்படல்**

கடவுளின் பிள்ளைகள் என அழைக்கப்படும் மனிதர் பேறுபெற் றோரே. "கிறிஸ்துவையும் அவர்தம் உயிர்த்தெழுதலின் வல்லமையை யும் அறியவும் அவருடைய துன்பங்களில் பங்கேற்று சாவில் அவரை ஒன்றித்திருக்கவும் விரும்புகிறேன்" (பிலி.3:10).

**3. மக்களோடு நெருக்கமாதல்**

மகா ஞான ஒடுக்கத்தின்பொழுது பணியாளர்கள் எல்லா இல்லங்களை யும் பாரபட்சமின்றித் தரிசித்து அருளாசி வழங்கினார்கள். அவர்க ளோடு நெருக்கமாகப் பழகி அவர்கள் தத்தம் பிரச்சனைகளுக்குத் தாமே தீர்வு காண உதவினார்கள்.

**4. நற்செய்திளை நாளாந்த வாழ்வில் நடைமுறைப்படுத்தல்**

அன்றாடம் ஏற்படும் குடும்ப, சமூகப் பிணக்குகளைத் தீர்க்க இரு பொதுநிலையினர், இரு குருக்கள் தீர்ப்புக் குழுவினராக நியமிக்கப் பட்டார்கள். பல்வேறுபட்ட பிரச்சனைகள் அவ்வப்போது சுமூகமாகத் தீர்க்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. வாழ்க்கைச்சூழலில் குழுக்களை வழிகாட்டல்**

ஆண்கள், பெண்கள், இளைஞர், சிறுவர் எனக் குழுக்கள் பிரிக்கப் பட்டு நற்செய்தி ஒளியில் வழிகாட்டப்பட்டனர். பரஸ்பர அன்புணர் வும் புரிந்துகொள்ளும் மனப்பான்மையும் வளமான முறையில் வளர்க் கப்பட்டது.

**6. எளிமை**

"போதனை நன்றாக இருந்தது" என்று பேசப்படுவதிலும் பார்க்க மக்கள் உள்ளம் தொடப்பட்டு. நற்செய்தி கற்ப்பிக்கப்பட்டு வீடு திரும்பு தலே பிரதானமானது.

**7. நற்செய்தி மக்களின் உணர்வலைகளைத் தொடுதல்**

இதயத்தைத் தொடும்விதமாக, எல்லோரும் பங்கேற்கும்விதமாக, வழி பாடுகளும் போதனைகளும் முன்னெடுக்கப்படவேண்டும்.

## ஞான ஒடுக்கத்தின்பொழுது இடம்பெற்ற சடங்குகள்:

1. **சிறுவர்களுக்கான சடங்குகள். இதன்மூலம் பெற்றோரும் உள்வாங் கப்பட்டார்கள்.**
2. **அன்னை மரியாளுக்கான பக்தி முயற்சிகளும் பவனியும்**
3. **இறந்தோரை நினைவுகூரல்**
4. **சட்டத்தை மேம்படுத்தும் சடங்கு**

ஒழுங்கீனத்தை நலிவடையச் செய்து, ஒழுங்கை, அமைதியை நிலை நாட்டும் விதமாக பல குருக்களும் ஊர் மக்களும் நற்கருணைப் பவனி யில் பங்கெடுப்பர். தியாக்கோன் கடவுளின் சட்டத்தை வாசிக்க மக்கள் அனைவரும் சட்டத்தை மீண்டும் கூறி பதிலளிப்பார்கள்.

**5. ஒப்புரவு அருட்சாதனக் கொண்டாட்டம்**

இச்சடங்கு மிகவும் உருக்கமாகவும் மக்கள் அனைவரது இதயங் களைத் தொடுவதாகவும் அமைந்தது. மசிக்னேனில் இடம்பெற்ற ஒரு நிகழ்வு:

'இயூஜின் டீ மசனெட் பாவிகளைப் பிரதிநிதிப்படுத்தினார். தூய்மை யின் அடையாளமான சேர்பிளிசைக் கழுற்றிவிட்டு இயூஜின் பிரசங்கக் கூட்டிலிருந்து கீழிறங்கிவந்தார். பீடத்தின் முன்னால் முழந்தாளிட்டு குருவிடமிருந்து கயிற்றை வாங்கி கழுத்தைச் சுற்றிக் கட்டினார். பின்னர் அவர் சப்பாத்து, மேஸ்களைக் கழற்றிவிட்டு, வெறுங்காலுடன் ஒப்புரவுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவையைச் சுமந்துகொண்டு, மனமாற்றப் பவனியைச் சிறப்பாக வழிநடத்தலானார்.

இப் பவனிகள் நீளமானவை. உள்ளத்தை உருக்குபவை. இறை இரக்கத்தின் அடையாளமாகவே பவனி விளங்கியது. குழு முதல்வர் பவனிக்குத் தலைமை தாங்குவது கிறிஸ்து ஒருவரே எல்லா மக்களது பாவங்களையும் தம்மேல் சுமத்திக் கொண்டார் என்பதை வெளிக்காட்டுகின்றது.

**6. குழுமச் செயற்பாடு**

குழுமச் செயற்பாடே இங்கு பிரதானமானது. சனி மாலைக் கூட்டம், செபம், ஆன்மீகப் பயிற்சிகள், உணவுண்ணல் அனைத்திலும் பணியாளர் தவறாமல் பங்கெடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதுவாழ்விற்கான படிமுறைகள்:**

இன்றைய காலகட்டத்தில் தந்தையர், தாய்மார், வாலிபர், யுவதிகள், சிறியோர், முதியோர் என கட்டம் கட்டமாகப் பிரிக்கப்பட்டு, தியானங்கள், பயிற்சிப் பாசறைகள், வகுப்புக்கள் போன்ற வடிவங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும். தனித்தும் குழுவாகவும் வலுப்படுத்தல்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அவரவர் திறனுக்கேற்ப ஆற்றல்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். நேர்சிந்தனையில் மனித நேயம், மனித மாண்பு வளர்க்கப்பட வேண்டும்.

மது, போதைப்பொருள் பாவனையால், சமூக, கலாச்சாரச் சீர்கேடுகளினால், ஆன்மீக வறுமையினால், உலகுசார் போக்குகளினால், இடாம்பீக மோகத்தினால் பாதிப்படைந்த குடும்பங்களை இனம்கண்டு அவை அடிக்கடி தரிசிக்கப்பட்டு, வழிகாட்டல் இடம்பெற வேண்டும். அவர்கள் புது வாழ்வுப் பயணத்தை மேற்கொள்வதற்கு வேண்டிய வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

1. காணல்,

2. கேட்டல்,

3. அவதானித்தல்,

4. எழுதுதல்,

5. சிந்தித்தல்,

6. மனனம் செய்தல்,

7. பேசுதல்

போன்ற 7 படிமுறைகள் ஒரு மொழியைக் கற்பதற்குத் துணை புரிவது போல அதே படிமுறைகள் நாம் புது வாழ்வுப் பயணிகளாய் பயணிப்பதற்கு உதவுகின்றன. உளி படாத பாறை சிற்பமாக வாய்ப்பில்லை. எம் வாழ்வில் ஏற்படும் கஸ்ட நஸ்டங்கள், சிலுவைகள் போன்றன எம்மைப் புடமிட்டு புனிதர்களின் பாதையில் நடமாடத் தூண்டுகின்றன. ஏற்றமிகு வாழ்வினைத் தோற்றுவிக்க எம்மை ஏணிப் படிகளாக மாற்றிடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. உரோமை அங்கீகாரம்

பிரான்சியப் புரட்சி பிரான்சில் கிறிஸ்தவத்தை இல்லாதொழிக்க முயன்று, ஈற்றில், அராஜகத்திலேயே முடிவடைந்தது. நெப்போலியனின் அரசு சமயத்தை அரசின் வேலையாளாக மாற்ற முனைந்து, கடைசியில் கொடுங்கோலாட்சியில் முடிவு கண்டது. மறுசீரமைப்பின்பொழுது அரச பீடத்திற்கும் ஆலயபீடத்திற்கும் இடையே பாலம் ஏற்பட்டதன் காரணமாக திருச்சபையின் வேலையாளாக அரசு மாறியது. இரு சக்திகளுக்குமிடையே நிலவிய இடைவெளி இல்லாமல் போனது.

## திருத்தந்தை 12ம் சிங்கராயர்

63 வயது நிரம்பிய கருதினால் சேர்மற்ரேய் டெல்லா யென்கா 1823ல் திருந்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் திருத்தந்தை 12ம் சிங்கராயர் என அழைக்கப்படுகின்றார். இவர் 17 தடவைகளுக்கு மேலாக நோய்வாய்ப்பட்டு அவஸ்தைப் பூசுதல் பெற்றவர். எனினும் 6 ஆண்டு கள் திருத்தந்தையாகப் பணியாற்றினார். திருத்தந்தை நேரடியாக அமல மரித் தியாகிகள் சபையை அங்கீகரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண் டார். 1824 வைகாசி மாதம் 5ம் திகதி சுற்றுமடலை வெளியிட்டு அதில் குருக்கள் தலைமையில் இடம்பெறும் ஆன்மீக புதுப்பித்தல் கள் திருச்சபைக்கு அவசியம் தேவை எனத் தெரியப்படுத்தினார். பல கருதினால்கள் எதிர்த்துநிற்க, திருத்தந்தையினால் 1825ம் ஆண்டு யூபிலி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. யூபிலி ஆண்டு வெற்றிகரமாக நடைபயின்றது.

ஆயிரக்கணக்கான திருப்பயணிகள் உரோமையைத் தரிசித்து செபத்தில் ஈடுபட்டார்கள். 1825ம் ஆண்டு மார்கழி மாதம் 9ம் திகதி, “கடவுளுக்கு நன்றி கூறுங்கள். எனது யூபிலியை இன்று பெற்றுக்கொண்டேன்” என்று இயூஜின் டீ மசனெட் ரெம்பியர் பாதருக்கு எழுதிய கடிதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டார். இயூஜின் உரோமையில் ஒழுங்குபடுத்திய பாவப்பரிகாரப் பேரணியில் திருந்தந்தை 12ம் சிங்கராயர் வெறுங்காலோடு நடந்து தனது ஆதரவை நல்கினார். எனினும் புதுப்பித்தல் தொடர்பான திருத்தந்யையின் முயற்சிக்கு குறுகிய கண்ணோட்டமுடைய குருமரபினர் ஒத்துழைப்பு நல்காத நிலையில் திருத்தந்தை 12ம் சிங்கராயர் 1829ம் ஆண்டு இறைவீடு சேர்ந்தார்.

## அபாயத்தை எதிர்கொண்ட அமலமரித் தியாகிகள் சபை

புதிய துறவற சபையில் முதல்வாக்குறுதி எடுத்தோர் பற்றிய விபரத்தை லெவ்லோன் பின்வருமாறு வர்ணிக்கின்றார்:

"ஸ்தாபகர் கற்பு, கீழ்ப்படிதல், தளர்வுறாமை ஆகிய வாக்குறுதிகளை போர்சூன் முன்னிலையில் செய்துகொண்டார். தொடர்ந்து திருப்பலியில் இயூஜின் மௌனியர், மீ, ரெம்பியர், மெகுறோ அருட்தந்தையர்களதும் டுபி, கோர்ட்ரெஸ், சுறேன் அருட்சகோதரர்களதும் வாக்குறுதிகளை ஏற்றுக்கொண்டார். இவ்வாறு புறொவான்சின் இரட்சணியப் பணியாளர்சபை நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டது."

'நிரந்தரமாக' என்ற பதம் ஆரம்பத்தில் கேள்விக்குறியாகவே விளங்கியது. இயூஜினிற்குக் கொடுக்கப்பட்ட குருக்கள் ஆயர்களின் கருணையிலே தங்கியிருந்தார்கள். வாக்குத்தத்தங்கள் எடுக்கும் ஒரு வருடத்திற்கு முன்னதாக இடம்பெற்ற சில தடைகள் சபையின் எதிர்காலத்தை முறியடிப்பதாக இயூஜினிற்குத் தோன்றியது. பேராலயத்தில் உறுதிப்பூசுதல் கொடுக்கையில் இளைஞர்குழாமிற்கு வழங்கப்பட்ட முன்னுரிமை தொடர்பாகவும் இரட்சணியப் பணியக சிற்றாலயத்தில் சிறுவர்களுக்கு முதல்நன்மை கொடுத்தது தொடர்பாகவும் இயூஜினிற்கும் எயிக்ஸின் குருக்களுக்மிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.

ஆரம்பத்தில் எல்லாம் மோசமாகவே தென்பட்டது. எனினும் நிலமை திடீரென மாறியது. ரெம்பியருக்கு இயூஜின் எழுதினார்:

"எவ்வளவோ மேன்மையான நல்ல காரியம் செய்யப்போகின்றோம். புறொவான்ஸ் மீண்டும் வலுவூட்டப்படுகின்றது. மாகாணத்தின் எல்லா ஆயர்களும் ஒரே மனநிலையில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும். நல்ல இறைவன் என்னிடம் ஒப்படைத்த சபை வலிமை பெறுகின்றது. மார்சேல் ஆயருக்கான பணித்திட்டத் தேர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நான் ஆயத்தப்படுத்துகின்றேன். திருச்சபைக்கான ஒளிமயமான எதிர்காலம் அரும்புகின்றது."

பாதர் இயூஜின் டீ மசனெட் புறொவான்ஸின் பேராயருடன் கார்த்திகை மாதத்திலும் மார்கழி மாதத்திலும் இரு சந்திப்புக்களை மேற்கொண்டார். 1ம் சந்திப்பு திருப்திகரமானதாக அமைந்தது. 1ம் சந்திப்பில் பேராயர் இயூஜின் மசனெட்டிடம் இறந்த காலத்தை மறந்துவிடுமாறும் புறொவான்ஸ் மருத்துவசாலையில் குருமனை கட்டி பணியை ஆரம்பிக்குமாறும் கனிவோடு பணித்தார். எனினும் சபையின் ஆட்டம் ஓயவில்லை. 24 அமதிகள் சபையை விட்டு வெளியேறினார்கள். 21 அமதிகள் சபையில் நிலைத்திருந்தார்கள்.

## எகஸ் என்புறெவான்ஸில் அமதிகளின் மகாநாடு

*1824ம் ஆண்டு புட்டாதி மாதம் 30ம் திகதி மகாநாடு கூட்டப்பட்டது.* ஒரு நாள் செபம், பரித்தியாகத்தின் பின்னர், தான் மேற்கொண்ட செயற்பாடுகள் பற்றியும் ரெம்பியரும் தானும் மார்சேலின் குருமுதல்வர்களாகத் தொடர்ந்து இருப்பது பற்றியும் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இரகசிய வாக்கெடுப்பு செய்யுமாறு பணித்தார். ஏக மனதாக இயூஜினின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட சபையின் தந்தைக்கும் பிள்ளைகளுக்குமிடையே உறவு புதுப்பிக்கப்பட்டது.

*1825ம் ஆண்டு ஐப்பசி மாதம் 'புறொவான்சின் இரட்சணியப் பணியாளர்சபை' என்ற பெயர்* ***'புனித சார்ள்ஸின் தியாகிகள் சபை'*** *எனப் பெயர் பெறலாயிற்று.*

## அங்கீகாரத்தை நோக்கி

குறைந்த எண்ணிக்கையுடைய சபையின் அங்கீகாரத்திற்காக உரோமை செல்வது பற்றி இயூஜின் யோசித்துக் கொண்டிருந்தார். அமைதியான சுபாவமும் புனிதத்துவமும் நிறைந்த சார்ள்ஸ் அல்பினி பாதர் உற்சாகத்தோடு பாதர் இயூஜின் தோள்களை இரு கரங்களாலும் இறுகப் பிடித்த வண்ணம் கதறினார்: "உரோமைக்குப் போங்கள், பாதர், போங்கள்." அப்பொழுதே அங்கீகாரம் பெற உரோமை செல்ல இயூஜின் தீர்மானம் எடுத்தார்.

*1825ம் ஆண்டு கார்த்திகை மாதம் உரோமை வந்து, பல கருதினால்களைச் சந்தித்து, திருத்தந்தையை நேரில் சந்திப்பதற்கான வாய்ப்புக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தேடினார். 1825ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி திருத் தந்தையைச் சந்திக்கும் வாய்ப்பு இயூஜினிற்குக் கிடைத்தது.

ஒழுங்குகளையும் தியாகிகளின் அற்புதமான செயற்பாடுகளையும் இயூ ஜின் திருத்தந்தையிடம் எடுத்தியம்பினார். **'புனித சார்ளஸின் தியாகிகள் சபை'**யினை அங்கீகரிக்கும்படி இயூஜின் டீ மசனெட் திருத்தந்தையி டம் வேண்டுகோள் விடுத்தார். திருத்தந்தை தலைமைக்குரு அடிநொல் வியிடம் அங்கீகாரம் வழங்குவதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளுமாறு பணித்தார்.

அடுத்தநாள் மார்கழி 21ம் திகதி தனது குருப்பட்ட நினைவுநாள் அன்று புனித பேதுரு பேராலயத்தில் திருப்பலியை ஒப்புக்கொடுத்து ஒழுங்குக் கோவையை பீடத்தின்மேல் வைத்து செபிக்கலானார். 23ம் திகதி இயுஜின் திருத்தந்தையை மீண்டும் சந்தித்தார். திருத்தந்தை பெரு மகிழ்வோடு, இயூஜினை வரவேற்றார்.

திருத்தந்தையிடம் இயூஜின் டீ மசனெட் பரிந்துரை செய்யும் கருதி னால் குழுவினர் எண்ணிக்கை 7ஐ 3ஆகக் குறைக்குமாறு கேட்டுக் கொண் டார். திருத்தந்தை இயூஜினின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். கருதினால் பக்கா, கருதினால் பெடிச்சிம், கருதினால் பல்லோர ஆகி யோர் பரிந்துரை செய்யும் குழுவில் இடம்பெற்றனர். இவர்கள் மூவரும் இயூஜினிற்குப் பரிச்சயமானவர்கள். தலைமைக்குரு அடிநொல்வி சபை யின் அங்கீகாரம் தொடர்பான அறிக்கையைத் திருத்தந்தையிடம் சமர்ப் பித்தார். **"இந்த சபை எனக்கு மகிழ்வைத் தருகின்றது. இதன் அங்கீகாரத்தை நான் விரும்புகின்றேன்"** என்று திருத்தந்தை சாதகமாகப் பதில் அளித் தார். அமலமரித் தியாகிகள் சபையின் அங்கீகாரத்திற்கு திருத்தந்தை உடன்பட்டார் ஏனெனில் அமலமரித் தியாகிகள் ஏழைகளின் மீட்பிற் காக அர்ப்பணிப்போடு செயற்பட்டார்கள். அத்தோடு தெய்வீகப் பரா மரிப்பு அவர்களை வழிநடத்தியது. சபை அங்கீகாரம் பெறுவது தொடர்பாக இயூஜின் தூய ஆவியானவருக்குப் பிரமாணிக்கமாயிருப் பதில் வெகு ஆர்வத்தோடு காணப்பட்டார். இயூஜின் அங்கீகாரம் பெறுதலை மிகவும் பிரதானமானதாக் கருதினார். ஏனெனில் திருச்சபை யைக் கட்டி எழுப்புவது, இறைவனை மகிமைப்படுத்துவது, ஆன்மாக் களை மீட்பது சபை அங்கீகாரம் பெறுவதன்மூலம் சாத்தியமாகும் என இயூஜின் நம்பினாரார். இதயங்களைத் தொடவும் மனித சித்தத்திற்கு வழி காட்டவும் கடவுளின் சக்தி தேவைப்பட்டதை இயுஜின் உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1826ம் ஆண்டு மாசி மாதம் 17ம் திகதி திருத்தந்தை 12ம் சிங்கராயர் எமது சபைக்கு* **'அமல மரித் தியாகிகள் சபை' எனப் பெயரிட்டு அங்கீகாரம் வழங்கினார். இயேசுக் கிறிஸ்து போற்றப்படுவாராக. அத்தோடு மாசற்ற மரியாளும்கூட** (Laudete Jesus Christu. Et Maria Immaculata) *என்று நாளாந்தம் செபம் சொல்லப்படுவது 1816 இலிருந்து வழமையாயிற்று.*

## அமல உற்பவ மரியா

*இயூஜின் டீ மசனெட்டிற்கு அமல மரித்தியாகிகள் மரியாவின் பாது காவலின்கீழ் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் ஆவர். எமது சபைக்குத் திருத்தந்தை அங்கீகாரம் வழங்கியபொழுது பெயர்சூட்டு கையில் அவர் பயன்படுத்திய சொற்களை இங்கு நினைவுகூருவது சிறப்பாகும். சபை அங்கீகாரத்தின்பொழுது திருத்தந்தையால் அருளப் பட்ட வாக்கு:*

*"முழு மனவிருப்பத்தோடு நாங்கள் இச்சபையை ஸ்தாபிக்கின்றோம். இது* **'அமலமரித் தியாகிகள் சபை'** *எனப் பெயர்பெறுவதாக."*

*இச் சபையின் நோக்கம் மரியன்னைக்குப் புகழாரம் பாடுவது அல்ல. மாறாக,* **மரியன்னையின் பாதுகாவலில் சிலுவையில் அறையப்பட்ட இயேசுக் கிறிஸ்துவின் கண்களினூடாக மிகவும் பின்தங்கியநிலையில் வாழ்வோரைக் காண அனுப்பப்படுவதாகும்.** *இயேசுக் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதே இவ் ஆன்மீகத்தின் வேராகும். அனைத்து அமல மரித் தியாகிகளும் சிலுவை அணியவேண்டும் என்று இயூஜின் வலியுறித்தினார். 1852ம் ஆண்டு ஆடி மாதம் 2ம் திகதி பாதர் சமேரியா விற்கு எழுதிய கடிதத்தில் இயுஜின் குறிப்பிட்டார்:*

*"நாங்கள் நித்திய வாக்குறுதியின்பொழுது வழங்கப்பட்ட சிலுவை யையே எமது பணிக்கு அடையாளமாக அணிகின்றோம்."*

*"அமலமரித் தியாகிகள் ஏழைகளுக்குப் பணியாற்ற கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழ்பவர்கள் ஆவர். மரியன்னையின் பாதுகாவ லில் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களே இவர்கள். திருச் சபையே எமக்கு 'அமலமரித் தியாகிகள்' எனும் அழகிய பெயரை அளித்தது. மதிப்போடும் அன்போடும் நன்றியுணர்வோடும் அதை ஏற்றுக் கொள்கின்றோம்" என்று பாதர் ரெம்பியருக்கு எழுதிய கடிதத் தில் குறிப்பிடுகின்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுக் கிறிஸ்து எனும் ஆளோடு தொடர்பு

பாதர் இயூஜினால் எழுதப்பட்ட கடிதங்கள் ஒருவர் இரட்சணியப் பணியாளராயும் இயேசுவை அன்புசெய்பவராயும் இணைந்து இருப்ப தற்கான இன்றியமையாத் தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும் என் பதை வர்ணிக்கின்றன. 1831ம் ஒழுங்கை விமர்சிக்கும்பொழுது இயூஜின் குறிப்பிடுகின்றார்:

"இயேசுக் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் இன்றியமையாத் தேவையை நிறைவேற்றிவிட்டோம் என்று எம்மில் எவராவது சிந்திக்க முடியுமா? இல்லை. மாறாக அது இரட்சகரே எமது சபையின் ஸ்தாபகர் என்ற உண்மையையே வெளிப்படுத்துகின்றது." முன்னதாக ஒழுங்கு 1818ல் இயூஜின் கூறுகின்றார்:

"அவர்களது ஸ்தாபகர் இயேசுக் கிறிஸ்து, இறைமகன். அவர்களது முதல் தந்தையர் அப்போஸ்தலர்கள். அவர்கள் இரட்சகரின் இணைப் பணியாளர்களாகவும் மனுக்குலத்தின் இணை இரட்சகர்களாகவும் அழைக்கப்படுகின்றர்கள்." இது புனித பவுல் 1 கொரிந்தியர் 3:9யைப் பிரதிபலிக்கின்றது:

"நீங்கள் அவர் எழுப்பும் கட்டிடம்."

"நம் சகோதரரும் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கும் கடவுளின் உடன் உழைப்பாளருமாகிய திமொத்தேயுவை உங்களிடம் அனுப்பினோம். நீங்கள் படும் துன்பங்களால் எவரும் மனம் தளர்ந்து போகாதவாறு, உங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தி, உங்களை ஊக்கப் படுத்த அவரை நாம் அனுப்பினோம்" (1 தெச. 3:2). இயூஜினின் கருத்துப்படி அமலமரித் தியாகிகள் இயேசுவினால் சிறப்பாக அழைக் கப்பட்டவர்களாவர். பெரிய வெள்ளி அனுபவத்தை விசுவாசத்தோடு மீள்வாழுதலும் இயேசுவின் அன்பிற்கு பொருத்தமான பதில் அளித் தலுமே இயூஜினது எதிர்பார்ப்பாகும். இயேசுவை அன்பு செய்வதிலும் இரட்சணியப் பணியாளராக இயங்குவதிலுமே இணையப் பிணைப்பு தெளிவாகிறது.

## அங்கீகாரத்தால் விளையப்பெற்ற அதிசய அருள்

அதிசயமான விளைவாகவே சபை அங்கீகாரம் பெற்றலை இயூஜின் கருதினார். அத்தோடு அருளுக்கு மேல் அருள் சபை அங்கீகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதன் விளைவாக ஏற்பட்டதை இயூஜின் உணர்ந்தார். எல்லா செயற்பாடுகளிலும் கடவுளின் கரம் உடனிருந்ததை அவர் உணர்ந் தார். அமலமரித் தியாகிகள் சபை உலகின் சிறு எல்லைக்குள் முடக் கப்பட்டுக் கிடப்பதை அனுமதிக்க முடியாது. எங்கிருந்தாலும் ஏழை கள் எல்லாரும் எமது பங்காளிகள் ஆவர். 1826ம் ஆண்டு பங்குனி மாதம் 25ம் திகதி இயூஜின் சபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் எழுதினார்:

"என்னுடன் களிகூர்ந்து, உங்களையே பாராட்டுங்கள். ஏனெனில் கடவுள் எம்மை ஆசீர்வதித்து நிறைய நன்மைகள் பொழிந்துள்ளார். எமது திருத்தந்தை 12ம் சிங்கராயர் மூலமாக எமது சபையையும் சபைச் சட்டங்கள், ஒழுங்குகளையும் அங்கீகரித்து, ஆசீர்வதித்துள்ளார். இத்தகைய நன்மைத்தனங்கள் பொழியும் இறைவனுக்கு நாம் எத்தகைய நன்றி சொல்ல வேண்டும்! இது தொடர்பாக திருச்சபைக்கு என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்."

**அமலமரித் தியாகிகள் சபையின் நோக்கம் அமலமரி அன்னையின் பாதுகாவலில் இயேசுக்கிறிஸ்துவின் கண்களின் ஊடாக மிகவும் பின் தங்கிய நிலையில் வாழ்வோரைக் காண அனுப்பப்படுவதாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவின் மனோபாங்கு

இயேசுவையும் ஏழைகளையும் ஒருங்கே மையப்படுத்திய அமைப்பே அமலமரித்தியாகிகள் சபையாகும்.

"கிறிஸ்து இயேசுவின்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள். அவ்வாறெனில் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை: ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" (கலா.3:26-28).

இயேசுவின் மனநிலையில் வாழ்வதே துறவிக்கு அழகாகும். 'நாங்களும் நல்லவர்கள், நீங்களும் நல்லவர்கள்' என்பதே ஆண்டவர் இயேசுவின் மனோபாங்காகும்.

எவரையேனும் தூக்கி எறியாமல் தன்னைத் தேடி வந்த அனைவரையும் தூக்கி எடுத்து, இயேசு நல்வாழ்வு நல்கினார்.

பாரபட்சமில்லா அன்புலகைக் கட்டி எழுப்புவதில் இயேசு ஆர்வம் கொண்டவராய் அல்லும் பகலும் அயராதுழைத்தார்.

ஓயாத அலைகளாய் அவர் பாய்ச்சிய அன்பு எதிரியின் இதயத்தையும் ஊடுருவிப் பாய்ந்தது.

"ஆண்டவரின் ஆவி என்மேலே

ஏனெனில், அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார்.

ஏழையருக்கு நற்செய்தியை அறிவிக்கவும்

சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்

பார்வையற்றோர் பார்வை பெறுவர் என

முழக்கமிடவும்

ஒடுக்கப்பட்டோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைசெய்து அனுப்பவும்

ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை

முழக்கமிட்டு அறிவிக்கவும்

அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக்கா *4:18-19*).

இவ்வாறு நலிந்தோர் மத்தியில் நற்செய்தியினை வலுவுடன் அறிவிக்க அமலமரித் தியாகிகள் அழைக்கப்பட்டுள்ளார்கள். அற்புதங்கள் புரியும் ஆண்டவர் இயேசுவை பாதிப்புற்ற மக்கள் அருகில் கொணர்வதே இவர்களது இலக்காகும். இறையருளை வாரி வழங்குவதே இவர்களது இயல்பாகும். இறைக்க இறைக்க ஊறும் கிணறுபோல இவர்கள் நற்பண்புகளால் நிரம்பி வழிவார்கள்.

**இயேசுவையும் ஏழைகளையும் ஒருங்கே இணைத்து மையப்புள்ளியாக வைத்து வாழப்படும் அமதிகளின் வாழ்க்கைப் பயணம் இனிதானதாகவும் இதயபூர்வமானதாகவும் அமையும் என்பதில் ஐயப்பாடு இல்லை. இதயபூர்வமான தொடர்பாடல்களும் மனிதத்தை மலர்விக்கும் வாழ்வியல் முறைகளும் அமதிகளை வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் மானிடப் பிறவிகளாக மாற்றிடத் துணைபுரியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. அப்போஸ்தலிக்க பணியாளன் எதிர்கொள்ளும் தடைகள்

இந்த அத்தியாயம் ஒரு அப்போஸ்தலிக்க மனிதன் இருட்டு இரவில் அனுபவிக்கும் துன்ப துயரத்தையே விபரிக்கின்றது. ஞானிகளைப் பொறுத்தவரை ஆன்மாவின் இருட்டு இரவு ஓர் உள்ளார்ந்த அனுபவ மாகும். ஆயினும் அப்போஸ்தலிக்க மனிதன் என்ற வகையில் பணி யின்பொழுது பலவிதமான துன்பங்களை, நெருக்கீடுகளை எதிர் கொண்டு எதிர்நீச்சல் போட நேரிடும். துன்பங்கள் அனுபவிப்பதால் அப்போஸ்தலிக்க மனிதன் தூய்மையாக்கப்படுகின்றான். ஆண்டவரது அன்பினால் அவன் முழுமையாக்கப்படுகின்றான். இவ்வாறே அமதி களின் ஸ்தாபகர் இயூஜின் டீ மசனெட்டும் இறை அனுபவத்திற்கு உள்ளாக்கப்பட்டார்.

*1826 - 1836* காலப்பகுதி இயுஜினிற்கு பாரிய நெருக்கீட்டுக் காலமாக அமைந்தது. இதனை விமர்சன வாசல் என பாதர் கெலி நெம்நெக் அமதி வர்ணிக்கின்றார்:

*"மூன்று வகையான விமர்சன வாயில்களை நாம் அவதானிக்கலாம். அவையாவன: 1. தீவிரவாத 2. மீறமுடியாத 3. அடுத்தடுத்து.*

படிப்படியாக, கடவுளில் எமது புது வாழ்வு வீடுபேறடைகின்றது. இறந்த காலத்தில் நிறைவும் நிகழ்காலத்தில் சவால்களை எதிர்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் சமார்த்தியமும் பெறுகின்றோம். இப்புதிய, புனர்வாழ்வில் பய ணிக்கப் பழக்கப்படும்பொழுது ஆவியானவர் கிறிஸ்துவுக்குள் ஆழ மான வாழ்விற்கு வழிநடத்தி, உயர்ரக ஆன்மீக வாயிலுக்குக் கடத் தப்படுகின்றோம். கிறிஸ்துவுக்குள் ஒன்றாதல் சாத்தியமாகின்றது.

## பெரிய திட்டங்களும் பெரிய வெற்றிகளும்

அப்போஸ்தலிக்க மனிதனின் வாழ்க்கையில் பெரிய திட்டங்கள் வரும் போது சவால்கள் கூடவருவது சகயம். இயூஜின் டீ மசனெட் கடந்து வந்த பாதையில் பல வெற்றிப்படிகளே தென்பட்டன. ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க குருக்களுக்கான புதிய சபையை ஸ்தாபித்தார். இச்சிறிய குழுவினைக் கொண்டு இயுஜின் மகாஞான ஒடுக்க முயற்சியின் மூலம் பெரும் வெற்றி ஈட்டினார். மார்சேலின் மறைமாவட்ட முதல் வராக இயுஜின் மறைமாவட்டத்தைப் புதுப்பித்தார். பல புதிய பங்குகளை உருவாக்கினார். புதிய பணிகளை அறிமுகப்படுத்தினார். 25 பேர்கொண்ட சிறிய குழுவிற்கு உரோமை அங்கீகாரம் பெற்ற பின்னர் இயூஜின் தனது தாய்நாடு வந்து கூறிய வார்த்தைகள்:

"எமது சபையின் புதிய சகாப்தத்தின் மகிழ்வான ஆரம்பம் இதுவாகும். கடவுளது மகிமைக்காக நாம் ஒழுங்குபடுத்திய திட்டங்களை அவர் வலுப்படுத்தி எம்மை இணைக்கும் பிணைப்புக்களை ஆசீர்வதித்தார். விண்ணரசிற்கு எதிரான பகைவர்களை எதிர்த்து திருச்சபையின் அளவீடு களைக் கொண்டு போராடுவோம். இதிலிருந்து மாசில்லாமல் உற்பவித்த மரியாமீது வெளிச்சம் வீசப்படும்."

## விசேட அருட்கொடைகள்

தவிர்க்க முடியா உராய்வுகள் மத்தியிலும் இயூஜினின் வாழ்வில் வெற்றிகளே தொடர்ந்தன. அவருக்கான கிறிஸ்துவின் அன்பு வெளிப் படுத்தப்பட்டது. பெரிய வெள்ளி அனுபவம் இயுஜின் சார்பாக வெளிப்படுத்தப்பட்ட இயேசுவின் அன்பையே உறுதிப்படுத்தியது. அன்பிற்காக, அன்பு என்ற வகையில் வாழ்வின் அர்த்தத்தை கிறிஸ்து இயூஜினிற்குப் படிப்படியாகப் புரியவைத்தார். ஒவ்வொரு ஆன்மாவும் கிறிஸ்துவினால் இரட்சிக்கப்படுவதையும் திருச்சபைக்குத் தான் ஊழி யம் புரிவதையும் பெரும்பேறாக இயூஜின் கருதி அதை அருள்நிறை அனுபவமாக மதிப்பிடுகின்றார்.

அடுத்ததாக, சபை ஸ்தாபிக்கப்பட்டமை அருள்வழங்கலின் வெளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடாகும். சாள்ஸ் டீ போர்பின் ஜான்சனுக்கு இயூஜின் டீ மசனெற் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டது:

"இரண்டாவது முறையாக நான் இறையருளால் உந்தப்படுவதை உணருகின்றேன். இதைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது பதகளிப்பு நிலைக்கு நான் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதே இறைவனின் விருப்பம் என உறுதியாக நம்புகின்றேன். இந்த வகையில் அதை நான் உச்சிவரை கடைப்பிடிக்கிறேன். அச் சந்தர்ப்பங்களில் என்னை நான் வேறொரு ஆளாகவே காண்கின்றேன்."

இயூஜின் சபையைச் ஸ்தாபிப்பதற்கான உண்மையான இறையருள் வெளியிலிருந்து வந்த வீச்சாகும்.

இன்னொரு அருள் வெளிப்பாடு சபை அங்கீகாரம் பெறுவதற்கு 3 ஆண்டுகள் முன்னர் நிகழ்ந்தது. எக்ஸ் என் புறொவான்ஸிலுள்ள அமல மரித் தியாகிகளின் பிரதான இல்லத்தில் அமலஉற்பவ மாதா சுரூபத்தடியில் இது நிகழ்ந்தது. சுரூபம் 1822ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டபொழுது இயூஜின் டீ மசனெட் பாதர் ரெம்பியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார்:

"எமது அரசியாம் மரியாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த அழகிய நாளிலே நான் அனுபவித்ததைப் பகிர்ந்து கொள்கின்றேன். எமது தாயார் என்று விசுவாசிகளாக வந்த நாம் எல்லோரும் அந்த அன்னையிடம் கனிவோடு கேட்டதால் தனது திருமகனிடமிருந்து நாம் கேட்டதெல்லாம் பெற்றுத் தந்தார். இன்று எமது சபை சார்பாக பல நன்மைத்தனங்களை அன்னை பெற்றுத் தந்தார் என்று நான் பெரு மகிழ்வடைகின்றேன்."

இயூஜினிற்கு பரிசுத்த கன்னி மரியா வெளிப்படுத்தியது என்னவென்றால், ஏழையருக்கான எமது சபையின் பணியும் அதன் அங்கத்தவர்களின் தூய்மைப்படுத்தலும்தான்.

மேலும், திருத்தந்தை சிங்கராயர் அமல மரித் தியாகிகள் சபையை அங்கீகரித்தது இயூஜினிற்கு கடவுள் அருளிய வரங்களில் ஒன்றாகும். சபை அங்கீகாரம் பெற்ற மகிழ்வோடு, முன் ஒருபோதும் இல்லாதவாறு ஸ்தாபகர் றோமையிலிருந்து மிகவும் உற்சாகத்தோடு திரும்பிவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை வெல்வதற்கான புதிய சபையின் பணியினை இயூஜின் ஆர்வத்தோடும் வலிமையோடும் முன்னெடுத்தார்.

இக்காலப்பகுதி இயூஜினிற்கு நிறைந்த திட்டங்களையும் பல வெற்றிகளையும் கொண்டமைந்ததாகக் காணப்பட்டது. எமது வாழ்விலும் பல வெற்றிகரமான திட்டங்களை நாம் எதிர் கொண்டிருக்கலாம். அவற்றிலெல்லாம் இறைவனின் அரும்கரம் எம்மோடு இருந்ததை உன்னிப்பாக அவதானிக்கலாம்.

## சோதனைகள்

1826 - 1836 காலப்பகுதி மிகவும் மோசமான காலமாக விளங்கியது. 1826ம் ஆண்டு 15 குருக்களும் 15 அருட்சகோதரர்களும் 1831ம் ஆண்டு 22 குருக்களும் 7 அல்லது 8 அட்சகோதரர்களும் அமல மரித் தியாகிகள் சபையில் காணப்பட்டார்கள். 1815 - 1836 காலப் பகுதியில் 205 இளையோர் அமதி நவசந்நியாச இல்லத்தில் இணைந்து கொண்டார்கள், 75 வீதமானோர் விலகிக்கொண்டார்கள். கிட்டத் தட்ட இருவரே வருடாந்தம் சபையில் நிலைத்து நின்றார்கள். இந்த அமதிகளின் இடைவிலகல் அதிகரிப்பு இயூஜினிற்குப் பெரும் வேதனையை அளித்தது. அடுத்த பிரச்சனை நவசந்நியாச இல்லத்தில் பயிற்சி பெற்றோர் இயூஜின் விரும்பியவாறு பயிற்சி பெறவில்லை. அருட்பணி கியுபேர்ட்டும் அவரைத் தொடர்ந்து வந்த உருவாக்குனர்களும் பொறுப்பானமுறையில் உருவாக்குனர்களாகத் திகழவில்லை. 1826ம் ஆண்டு பங்குனி மாதம் 16ம் திகதி இயூஜின் எழுதினார்:

"இங்கு பிரபல்யமான துறவற இல்லங்களைத் தரிசித்துக் கொண்டிருக்கிறேன். மிகவும் அனுபவம்வாய்ந்த ஆட்களை நான் நேர்காணல் கண்டு கொண்டிருக்கிறேன். எனது சபை தொடர்பாக எனது பயணம் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறேன். நான் கண்ட, கேட்ட எல்லாவற்றிலுமிருந்து ஆரம்பத்தில் இருந்தே நாம் நவசந்நியாச இல்லம் தொடர்பாகத் தவறிழைத்து விட்டோம் என்ற முடிவுக்கே வருகிறேன்."

பாதர் ரெம்பியருக்கு இயூஜின் கடிதம் எழுதினார்:

"எம்மைச் சூழவுள்ள எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, இதனை ஒத்த ஏதாவதைக் காண்கிறீர்களா? பிள்ளைகளின் வளர்ச்சிக்காக நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாய் உழைக்கிறோம். அவர்களில் பலர் உயர் இலட்சியங்க ளைத் தரிசிப்பதில்லை. தங்களுக்குள் இருப்பதைக் கொடுக்க முனைவ தில்லை. ஆன்மீக வரட்சிக்கே எம் ஈடுபாடுகள் எல்லாம் இட்டுச் செல்கின்றன."

லெவ்லன் எழுதினார்:

"உள்ளூர் குருக்களுக்கும் இயூஜின் டீ மசனெட் பாதருக்குமிடையே பாரிய முரண்பாடு காணப்பட்டது. பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த தால் அவர் மற்றவர்களையும்விட செல்வாக்குமிக்கவராய் காணப்பட் டார். எனினும் இயுஜின் தனது செல்வாக்குநிலையை ஏனைய பிரபு நிலைக் குருக்கள் போன்று பயன்படுத்தவில்லை. மாறாக, இயூஜின் சுயவிருப்போடு தன்னையே வெறுமையாக்கினார். அவரது கௌரவம் மிக்க ஆளுமையும் பிடிவாதபோக்கும் உறுதியான மனோபாங்கும் அவருக்கும் மறைமாவட்டக் குருக்களுக்குமிடையே இருந்த இடை வெளியைப் பெரிதாக்கியது. எனினும் இராஜதந்திரம், அனுபவம், உளவியல், பாராட்டுதல், புரிந்துகொள்ளல் போன்றவற்றின் மூலம் இடைவெளியைச் சீர்ப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டாலும் இவை இயூஜினில் அருகியே காணப்பட்டன. விளைவாக, பல சிறு குழப்பங்கள் தொடர்ந்து அரும்பின."

இன்னொரு பிரச்சனை இயூஜின் மார்சேலின் குரு முதல்வராகப் பணியாற்றுவதால் ஏற்பட்டது. பிரான்சியப் புரட்சியிலிருந்து **1827**ம் ஆண்டுவரை **34** ஆண்டுகளாக மார்சேலில் ஆயர் இருக்கவில்லை. எனவே குருக்கள் தம்பாட்டில் செயற்பட்டார்கள். எனவே, மறை மாவட்டக் குருக்களை ஒழுங்கிற்குக் கொணர்வதில் மார்சேல் ஆயரும் மருமகன் இயூஜினும் பெரிதும் கஸ்டப்பட்டார்கள். இவ்வாறு கஸ் டங்கள், பிரச்சனைகள் தொடர்ந்தாலும் இயூஜின் மனம் உடைந்து பின்வாங்கவில்லை. மாறாக, அவர் அவற்றினூடாகத் தன்னை வலுப் படுத்தி, வளப்படுத்தினார். **1826 - 1831** காலப்பகுதியில் ஐந்து அமல மரித் தியாகிகள் வான்வீடு சென்றார்கள். இயூஜின் உட்பட ஆறு அமதிகள் **1829, 1830** ஆண்டுகளில் நோய்க்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

ஆரம்பத்தில இயூஜின் உணர்ச்சிவசப்பட்டுக் காணப்பட்டார். பாதர் ஆமொக்ஸ் நோய்வாய்ப்பட்டிருக்கும்பொழுது அறிவிக்கப்படாததை யிட்டுப் பெரிதும் வருந்தினார். பாதர் கூர்ரெஸிற்கு இயூஜின் பதில் எழுதினார்: "அமைதியாக இருக்கவே விரும்பினேன். எனினும் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர நோயாளியின் உடல்நிலையை முன் கூட்டி அறிவிக்காமல் வலுக்கட்டாயமாக அவரை நான் உயிரோடு காணமுடியாமல் செய்து விட்டீர். எனது சகோதரர்கள் ஆபத்தில் சந்திக்கக்கூடிய எல்லைக்குள் இருக்கும்பொழுது அவர்களைச் சந்திப்பது எனது கடமை என்பதை மறந்து விட்டீரா? கடைசிநேர அவரது அசைவுகளையும் அடக்கச் சடங்கையும் பற்றி நீர் வர்ணித்த விபரங்களை நாங்கள் ஆர்வத்தோடு வாசித்தோம். நான் அத்தாள்களை எல்லாம் கண்ணீரால் நனைத்து விட்டேன்."

இயூஜின் டீ மசனெட்டை மார்சேலின் ஆயராக்கும் நோக்கோடு 83 வயதுடைய மார்சேல் ஆயர் போர்சூன் திருத்தந்தை 16ம் கிரகோரிக்கு கடிதம் எழுதினார்:

"திருத்தந்தை அவர்களே, நான் இன்னும் எவ்வளவு காலம் உயிரோடு இருப்பேனோ தெரியாது. கடவுள் என்னைக் கனகாலம் வைத்திருக்க மாட்டார் என்றே தெரிகின்றது. எனது இறப்பு நெருங்கி வருகின்றது என்பது எனக்குக் கவலை இல்லை. ஆனால் எனது சின்ன மறை மாவட்டத்திற்கு என்ன நடக்கப் போகின்றது என்பதே எனக்குக் கவலையாயுள்ளது. எனவே, எனது மறைமாவட்டத்திற்கு ஓர் ஆயரை நியமிக்குமாறு இத்தால் பணிந்து கேட்கின்றேன்."

ஆயர் போர்சூன் இக்கடிதத்தை பாதர் ரெம்பியர் மூலமாக உரோமைக்கு அனுப்பினார். கவனமாக இக்கோரிக்கையை ஆய்வு செய்த பின்னர் ஆயரின் வேண்டுகோளை திருத்தந்தை ஏற்றுக்கொண்டார். இயூஜின் டீ மசனெட் உரோமைக்கு அழைக்கப்பட்டு, 1832ம் ஆண்டு ஆவணி மாதம் 14ம் திகதி ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மூன்று மாதங்களின் பின்னர், இயூஜின் மார்சேல் வந்து சேர்ந்து குரு முதல்வர் பணியைத் தொடர்ந்தார். 1833ம் ஆண்டு ஆடி மாதக் கடைசியில் உரோமைக்கு உடனடியாக வருமாறு திருத்தந்தையால் பணிக்கப்பட்டார். எனினும் ஆயர் இயூஜின் 1833ம் ஆண்டு மார்கழி மாதத்தில் மார்சேலுக்குத் திரும்பிவந்தார். பிரெஞ்சு அரசு ஆயர் இயூஜினோடு கடுமையாக நடந்துகொண்டது. 1834ம் ஆண்டு தை மாதத்தில் அரசிற்கு எதிராகத் தனது உரிமை கோரி கோட்டில் வழக்குத் தாக்கல் செய்தார். வழக்கு சாதகமாக அமையவில்லை. திருத்தந்தையின் விருப்பத்தை ஏற்று வழக்கை வாபஸ் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் வளர்ச்சியிலும் சபை தொடர்பான காரியங்களிலும் ஈடு பட்டு, அமைதியானார். 1834ல் நிலமை சாதகமாக மாறியது. அரசு குருக்களுக்கு எதிரான கொள்கையை மாற்றியது. மகா ஞான ஒடுக்கங் களை முன்னெடுக்கும் வாய்ப்பு மீண்டும் கிடைத்தது.

எமது ஸ்தாபகர் இயூஜின் எழுதினார்:

கோர்சிகாவின் குருக்களதும் மக்கள் எல்லோரதும் உருவாக்கத்திற்கான புதிய உதயம் ஆரம்பித்து விட்டது. குருமடத்தை வழிப்படுத்தவும் மறைமாவட்டப் பணிகளை முன்னெடுக்கவும் வேண்டும் என ஆயர் விரும்புகின்றார். நாம் ஒன்றில் முன்னெடுக்க வேண்டும் அல்லது கைவிட வேண்டும். கைவிடுவது எமக்கு அழகல்ல. எமக்குத் தரப்படும் அழைப்பினை நாம் உதாசீனப்படுத்தினால் எம் மகிழ்வினையே நாம் கெடுக்கின்றோம். ஒரு கடிதத்தில் எல்லாவற்றையும் என்னால் விளக்கமுடியாது. எல்லாத் தடைகளையும் என்னுள் போட்டு விட் டேன். நாம் ஒத்துழைப்பு நல்காவிட்டால் எமக்காகத் திறக்கப்பட்ட முன்னுணர்வுக் கதவை மூடியதாகவே அமையும்.

1835ம் ஆண்டில் புறொவான்ஸ் முழுவதும் கூடுதலாக மார்சேலையும் எக்ஸ் என்புறொவான்சையும் கொலரா பாதிப்பிற்கு உள்ளாக்கியது. அமதிகளின் இணைப்பாளராக பாதர் டானியல் அன்றே இரவு பகலாக வாங்கில் இருந்து கொண்டு பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரண உதவி நல்கினார். இது தொடர்பாக மார்சேயில் இயூஜின் டீ மசனெட்டின் செயற்பாடுகள் அளப்பரியவை. எனினும் இயூஜினது செயற்பாடுகள் எல்லாம் கொள்கையளவில் சட்டத்திற்கு எதிரானவையாகவே கருதப் பட்டன. பாதர் கஸ்மிர் ஒவ்பேர்ட் புறொவான்சிற்கு வருமாறு இயூஜினிற்கு அழைப்பு விடுத்தார். 1835ம் ஆண்டு பங்குனி மாதம் 10ம் திகதி இயூஜின் கடிதம் எழுதினார்:

"எனது அன்பு மகனே, எனது பணிக்கான கேள்வி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. நேற்று நள்ளிரவு இரு மணித் தியாலங்கள் பின்னரே என்னால் நித்திரை கொள்ளமுடிந்தது. இந்த அபாயகரமான நோய் எமது நகரத்தில் மீண்டும் மீண்டும் வருவதால் நாங்கள் கடினமாக செயற்பட வேண்டியுள்ளது. மிகவும் கடுமை யானவர்களுக்கு உடனடி நிவாரணம் கொடுக்க வேண்டியுள்ளது. சில பங்குகளில் குருக்கள் தமது பொறுமையின் எல்லையைத் தாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார்கள். தேவை ஏற்படும்பொழுது மக்கள் அமதிகளையே விரும்புகின்றார்கள். ஒவ்வொரு பகுதியிலும் உறுதிப்பூசுதல் பெறா தோருக்கு நான் உறுதிப்பூசுதல் கொடுக்க வேண்டியுள்ளது. இப் பொழுதுதான் நான் மருத்துவசாலையிலிருந்து வந்துள்ளேன். இதோ இந்த நேரத்தில் இன்று மட்டும் வாழப்போகும் ஓர் ஏழைப் பெண் ணிடமிருந்து அழைப்பு வந்துள்ளது.

உமது அழைப்பை நிறைவேற்ற முடியாமைக்கு வருந்துகிறேன். இத்த கைய அபாயநிலையில் தப்பியோடாமல் இருப்பதற்கு துணிச்சல் வேண்டும். எனது அம்மாவிற்கு கடிதம் எழுத நேரம் இல்லை. தயவு செய்து சில வார்த்தைகள் அம்மாவிற்கு எழுதவும். நிகழ்கால நிலைப் பாட்டை அல்ல. எங்களுக்காக மன்றாடுங்கள். சகோதரர் கொற்றரர் சார்பாக அக்கறை எடுங்கள். ஞான ஒடுக்கத்தின்பொழுது **துறவறவாழ் வின் மேலான தத்துவங்கள், பற்றற்றநிலை, சுயமறுப்பு, கீழ்ப்படிதல், எமது திருச்சபைக்கும் எமது குழும சகோதரர்களுக்குமான அர்ப்பணம்** போன்றவற்றை அவருக்குள் புகுத்துங்கள். எனது இதயத்து அருகே வைத்து, உமக்கு எனது ஆசீர் அருளுகின்றேன்."

இக்கட்டான, இருளான வேளைகளிலும் இயூஜின் அமதிகளுக்குத் தனிப்பட்ட கரிசனை காட்டப் பின்வாங்கவில்லை என்பது இதிலி ருந்து தெளிவாகின்றது. நீண்ட காலமாகத் தனது துறவற வாழ்வில் அனுபவித்த தத்துவங்களை இயூஜின் உறுதிப்படுத்துகின்றார்.

எமது ஸ்தாபகர் இறைநம்பிக்கையில் கொண்ட விசுவாசம் உயிருள்ள தாய் அமைந்தது. இறைச் சித்தத்திற்குத் தன்னை அர்ப்பணிப்பதும் அமைதியை விரும்புவதும் இயூஜினிற்கும் பாதர் ரெம்பியருக்கும் இடையே இடம்பெற்ற கடிதத் தொடர்பிலிருந்து தெளிவாகின்றது. 1833ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ம் திகதி இயூஜின் ரெம்பியருக்கு உரோமையிலிருந்து கடிதம் எழுதினார்:

"ஒருவர் தனது திறனுக்கேற்ப செயற்படும்பொழுது வருந்துவதற்கு வாய்ப்பில்லை. இறைவன் தனது இலக்கை அடைய மனித பலவீனங் களைக்கூடப் பயன்படுத்துகின்றார். என்னிடமிருந்து அவர் என்ன எதிர்பார்க்கிறார் என்பது எனக்குத் தெரியாது. அவர் தனது ஞானத் தால் தன்னை மகிமைப்படுத்தும் அனைவரையும் தனது ஆளுகைக் குள் வைத்திருக்கிறார் என்பதே எனக்குப் புரிகின்றது. அமைதிக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை என்னைக் கவருகின்றது. அநீதத்தை எதிர்த்து எனது ஆன்மா வின் நன்மைத்தனம் சார்பாகவே நான் செயற்பட வேண்டும்.

இறைச் சித்தத்திற்குக் கீழ்ப்படிதலை ஒத்ததாக திருத்தந்தைக்குக் கீழ்ப் படிதல் அமைகின்றது. உரோமையிலிருந்து இயூஜின் 1833ம் ஆண்டு புரட்டாதி மாதம் 13ம் திகதி பாதர் ரெம்பியருக்கு கடிதம் எழுதினார்: "ஒருவன் நற்பண்புகளைக் கொண்டிருந்தும் அவன் கடவுளுக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவன் ஒன்றுமில்லாதவன்." சிறிது காலத்தில் கூற்றெஸ் பாதருக்கு இயூஜின் எழுதினார்:

"திருச்சபையின் நன்மைத்தனத்தை முன்னிட்டு திருத்தந்தை பேசுகின் றார் எனின் எந்த விதத்திலும் ஆயர் கட்டாயம் கீழ்ப்படிய வேண்டும். என் சார்பாக உங்கள் செபங்களை இரட்டிப்பாக்குங்கள்."

திருத்தந்தை 6ம் பவுல் கூறிய வார்த்தைகள் இயூஜின் டீ மசனெட்டிற் குப் பொருந்தும்: "ஒரு புனிதரைப் பற்றி எமக்கு என்ன தெரிய வேண்டும்? நாம் மேலெழுந்தவாரியாக நோக்கும்பொழுது புனிதர் புதுமை செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் இன்று அத்தகைய எதிர்பார்ப்புக்கள் குறைந்து விட்டன. எனவே கேள்விக்குப் பதில் இலகுவாகக் கிடைத்துவிட்டது.

நாம் ஒரு புனிதரிடமிருந்து எதை அறிய விரும்புகின்றோம்? மறை பொருட்தன்மையைவிட அவரது மனித பக்கத்தையே நாம் பெரிதும் விரும்புகின்றோம். புனிதர்களோடு எவை எவை எம்மை அவர்களோடு நெருக்கமாகக் கொணர்கின்றனவோ அவற்றையே கண்டுபிடிக்க முனை கின்றோம். எமது சுமையான பொது அனுபவங்களின்பொழுது அவர் களோடு பங்கெடுக்க முடிவதனால் அவர்களில் நம்பிக்கை வைப்பது சாத்தியமாகின்றது."

**இறைவனோடும் மனிதரோடும் இரண்டறக் கலந்து வாழ்ந்தோரே புனிதராவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலட்சிய தாகம்**

காலத்தின் தேவைக்கேற்ப கரிசனையோடு செயற்படுவதே எமது குறிக்கோளாகட்டும்! நாளை என்பது நிட்சயமல்ல. இன்றைக்கான இலட்சியங்களை இனங்கண்டு, அவற்றிற்கு நியவடிவம் கொடுக்க நாளும் பொழுதும் முனைந்திடுவோம்!

இறைமனித உறவை வலுப்படுத்தி, மனிதத்தை நேசிக்கும் இறைத்தொண்டர்களே இன்று தேவைப்படுகின்றார்கள். 'போதனையில் புள்ளிகள் நூறு, சாதனையில் புள்ளி பூச்சியம்' என்ற நிலை மாறி போதனையிலும் சாதனையிலும் புள்ளிகள் நூறு என்ற நிலை வர எல்லோரும் முயற்சிப்போம்.

உறவுப் பாலத்தை உருவாக்குவதற்கு ஆரம்பக் கட்டமாக பிரிவினைச் சுவர்களை உடைத்து எறிவோம்.

வானத்தைப் பார்த்துக்கொண்டு பாதையைத் தவறவிடாமல் உணர்வுகள் மரத்துப்போனநிலையில் பிறர் சார்பாக அரக்கத்தனமாக வாழும் வாழ்க்கை முறைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

ஆளுக்கொரு நீதி, ஆள்பார்த்து தர்மம் செய்வது, ஒருவரின் ஆள்தன்மையை மதியாது பக்கசார்பில் நடந்துகொள்வது போன்ற அநாகரிகப் போக்குகளைக் கடந்து, மனிதநேயத்தோடு வாழ்ந்திடுவோம்.

**'ஆட்கள் அன்புசெய்யப்படுவதற்கு, பொருட்கள் பாவனைக்கு'**

என்ற நிலைப்பாடு உறுதிப்படுத்தப்பட,

**அன்பு வலைப்பின்னல் வலுப்படுத்தப்பட முயற்சிப்போம்.**

உதவி செய்யாவிடினும் உபத்திரவம் கொடுக்காதிருக்க நாளாந்தம் கற்றுக் கொள்ளுவோம்.

**எல்லையில்லா அன்புசெய்யும் இறைவனோடு இணைந்திடுவோம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. மார்சேல் ஆயர்

## ஒரு புதிய சமூக ஒழுங்கு

*1789*ற்கும் *1848*ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஐரோப்பா பாரிய மாற்றத்திற்கு, மறுமலர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டது. பிரெஞ்சியப் புரட்சியும் அதைத் தொடர்ந்து வந்த காலப்பகுதிகளும் (நெப்போலியனது ஆட்சிக்காலம், மறுமலர்ச்சிக் காலம், *1820*, *1830*, *1848* புரட்சிக் காலப்பகுதிகள்) பொருளாதார, சமூக வளர்ச்சியையே கோடிட்டுக் காட்டி நிற்கின்றன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற பண்புகளை உள்வாங்கி, அவை புதிய சமஉடைமை வாதத்திற்கு வித்திட்டன.

எனினும், பிரெஞ்சியப் புரட்சியின் பயனாக, பிரபுக்கள் குலத்தினர், ஏழைகள், குறிப்பாக உழைக்கும் வர்க்கத்தினர் பொருளாதாரரீதியாக பெரும் பாதிப்பிற்கு உள்ளாகினர். புரட்சி பிரெஞ்சியப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்தது. இங்கிலாந்தோடுள்ள கைத்தொழிற் போட்டி பிரான்சின் உணவுப் பொருட்களின் விலையை அதிகரித்தது. பெண்களும் சிறுவர்களும் ஒரு நாளுக்குப் பதினெட்டு மணித்தியாலங்கள் தொழில்செய்தே தங்களைத் தக்கவைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். வறுமை மக்களை வருத்தத்தில் ஆழ்த்தியது. பாட்டாளி வர்க்கத்தினர் முதலாளித்துவ வர்க்கத்தினருக்குத் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் உரிமையை விற்கவேண்டிய துர்பாக்கிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

## பாட்டாளி வர்க்கமும் திருச்சபையும்

தொழிலாளர் சங்கங்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தினரின் உரிமைகள் நிலைநாட்டக் குரல்கொடுக்கப்பட்டது. அவதானிகளின் கருத்துப்படி, நகர்வாழ் தொழிலாளரின் நலன் பற்றி திருச்சபை அக்கறை எடுக்கவில்லை எனச் சொல்லப்பட்டது. ஐரோப்பாவின் புதிய கைத்தொழில் நாகரீகத்தின் உதயத்தில் திருச்சபை அரசியல் பொருளாதாரம் தனது ஆளுகைக்கு அப்பால் கைவிடப்பட்டுக் கிடப்பதைக் கண்டதோடு புதிய சமூக ஒழுங்கமைப்பின் பிறப்பைக் கண்டுணரத் தவறியது.

## மார்சேல்

*1837ல் இயூஜின் டீ மசனெட் மார்சேலின் ஆயரானபொழுது பிரான்சின் பிராந்தியங்களில் சனத்தொகை தொடர்பாக இரண்டாம் இடத்தில் விளங்கியது. மார்சேல் ஆண்டுதோறும் 3360 கப்பல்கள் துறைமுகத்தில் தங்கிப்போகும் பெரிய கப்பல்துறைமுகத்தைக் கொண்டதாய் மார்சேல் அமைந்தது குறிப்பிடத்தக்கது. மார்சேல் ஆயராய் இருந்து கொண்டே தனது முதிர்வயதிலும் இல்லங்களைத் தரிசித்துக் கொண்டு நோயாளிகளைக் கரிசனையோடு கவனித்தார்.*

## திருத்தந்தை 9ம் பத்திநாதர்

*1646ல் 9ம் பத்திநாதர் திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டார். இத்தாலிய தேசியம் சார்பாகத் தனது கருத்துக்களை வெளியிட்டார். திருத்தந்தை 9ம் பத்திநாதரின் சிறப்பு பின்வரும் மூன்று அம்சங்களில் தெளிவு:*

*1. கன்னி மரியாவின் மாசில்லா உற்பவக் கோட்பாட்டை 1854ம் ஆண்டு மார்கழி மாதம் 8ம் திகதி பிரகடனப்படுத்தினார்.*

*2. **Quanta cura** எனும் சுற்றுமடலை வெளியிட்டு இன்றைய காலத்தின் பிரதானமான தவறுகளைப் புறநீக்கம் செய்தார்.*

*3. 1ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தை ஸ்தாபித்து திருவெளிப்பாடு தொடர்பான கோட்பாட்டை உறுதிப்படுத்தினார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயூஜின் டீ மசனெட் மார்சேல் ஆயர்

"ஓர் ஆயன் மிகவும் சிறந்த இரட்சணியப் பணியாளன் ஆவார். எனது கடமை பற்றி எனக்குத் தெரியும். நான் செய்யவேண்டியதை நிறைவாக்குவதே எனது பணியாகும்" என மொழிந்தார் இயூஜின். ஆயராக இருந்து கொண்டே இயூஜின் டீ மசனெட் நல்லதொரு இரட்சணியப் பணியாளனாகவே திகழ்ந்தார். மக்களுக்கான அவரது அன்பும் அர்ப்பணிப்பும் அவரது வாழ்வில் தெளிவாக விளங்கியது. காலாண்டு காலமாக அவரது மறைமாவட்ட ஆட்சியில் காணப்பட்ட சிறப்பு அம்சங்களை அவதானிப்போம்:

## எல்லோரையும் அறிந்தவராய் அனைவரையும் வரவேற்றார்

ஆயர் இயூஜின் பணிமனை நாள்தோறும் காலை 10 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரை திறக்கப்பட்டேயிருக்கும். அவரைச் சந்திப்பதற்காக, செல்வந்தர் முதல் வறியோர் வரை வருவார்கள். கூடுதலாக வறியோரே அவரிடம் வருவார்கள். எல்லோரையும் சந்திப்பதை இலகுபடுத்துவதற்காக அவரது பணிமனை கீழ்மாடியிலேயே இருந்தது. கடைசிக்கட்ட சில வருடங்களில் மேல்மாடிக்கு மாறினார். ஆயரைச் சந்திக்கும் பலர் தாம் சந்திக்கும் வாய்ப்பை இழந்து விடாதிருப்பதற்காக மதிய உணவுப் பார்சலோடு வந்து காத்திருப்பார்கள் என்று எக்ஸ் என் புறொவான்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் பேர்னாட் குசின் குறிப்பிடுகின்றார். றம்பேர்ட் பாதர் பின்வருமாறு கூறுகின்றார்:

"ஆயர் மசனெட் தனது வாழ்வில் அனுபவித்த ஏழ்மை ஏழையருக்கு பரிவை வெளிக்காட்டத் தூண்டுவித்தது. ஏழையர்பால் இவர் கூடுதலான கரிசனை காட்டியதால் இவரை முதலாளித்துவ வர்க்கம் புறக்கணித்தது. அவர்களால் இவர் விரும்பப்படாதவராகவும் அணுக முடியாதவராவும் காணப்பட்டார். **இவரது உதவி நாடி வந்த ஏழைகளுக்கு இவரது இல்லக் கதவு திறந்தேயிருந்தது. இவரது இதயத்திற்கும் காசுப் பையிற்கும் ஏழைகளை நன்றாகத் தெரியும்."**

ஒருமுறை ஓர் இளைஞன் தான் ஒரு பெயர் குறிப்பிட்ட ஆயரின் மருமகன் தான் என்று தன்னை அறிமுகப்படுத்தினான். 'எனது மாமனாரைச் சந்திக்கப் பணம் தேவைப்படுகின்றது' என்று கோரிக்கை விடுத்தான். உடனே இயூஜின் புன்னகைத்தவண்ணம், "உமது மாமா இன்னும் சில நிமிடங்களில் இங்கு வந்துவிடுவார் என் அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவனே" என்று விழித்தார். இளைஞன் மேலே எதுவும் பேசாது, மெதுவாக நகர்ந்து மறைந்து விட்டான்.

## அவர் ஏழைகளைத் தரிசித்தார்

அவர் ஏழைகளால் நற்செய்தி அறிவிக்கப்பட்டார் என்பது இயூஜின் வெளியிட்ட சஞ்சிகையிலிருந்து தெளிவாகின்றது. இயூஜின் ஏழைகளது ஒருங்கிணைவால் பெரிதும் கவரப்பட்டார்.

ஒருமுறை ஓர் ஏழை இளம்யுவதி நம்பிக்கை முற்றாக இழந்தநிலையில் சாவை எதிர்பார்த்த வண்ணம் காத்துக் கிடந்தாள். அப்பொழுது மிம் இறன் பல வழிகளில் அவளைக் கரிசனையோடு கவனித்தபின், ஆயர் இயூஜினிடம் அந்த இளம் யுவதியை அனுப்பி ஆயர் காண விரும்புவதாகக் கூறினாள். உடனே அந்த இளம்யுவதி,

"ஆயர் என்னைச் சந்திக்க விரும்புகின்றாரா?" என்று கேட்டாள். பதிலாக மிம் இறன்,

"ஆம், நிட்சயமாக" என்றாள்.

அந்த இளம் பெண் இயூஜினோடு உரையாடி கலந்துரையாடுவதற்கான இடத்தையும் நேரத்தையும் அறிந்துகொண்டாள். இயூஜினும் நீதியோடு கூடிய பிறர்சிநேகச் செயற்பாடு இது என ஒப்புக்கொண்டார். ஆரம்பத்தில் அவள் மன இறுக்கத்தோடும் எரிச்சலோடும் வெறுப்போடும் காணப்பட்டாள். ஆயினும் இயூஜின் மனம் தளராது கரிசனையோடு செயற்பட்டார். கரங்களை அவள் தலைமேல் வைத்து உருக்கமாகச் செபித்தார். அவளும் மனம் மாறி, இரு கரங்களையும் கூப்பிய வண்ணம் வான்நோக்கிச் செபித்தாள். முதன்முதலாக இறைவனோடு பேச ஆரம்பித்தாள். காயப்பட்ட அவளைக் கடைசிநேரத்தில், கடவுள் தன்னோடு அணைத்துக்கொண்டார். ஆயர் அவளை ஆசீர்வதித்து விட்டுச் சென்றார். அவள் சிறிது நேரத்தில் நோயில் பூசுதல் பெற்றபின்னர் இறையடி சேர்ந்தாள்.

## மக்களின் கல்விப்பணியாளர்

ஆயராகப் பொறுப்பேற்றதும் வழிகாட்டற் தத்துவங்களை இயூஜின் எழுதினார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைவா, நீர் ஒருவரே எனது ஆன்மாவிற்கு வலு கொடுக்கமுடியும். உமது அன்பின் தூய சுவாலையாலும் நீர் என்னிடம் கையளித்துள்ள ஆன்மாக்களுக்கு அச்சுவாலையினைப் பரப்புவதாலும் நீர் என்னைப் புதுப்பிக்க வேண்டுகிறேன். ஆரம்பத்திலிருந்தே நான் ஒரு நல்ல ஆய னாகச் செயற்பட விரும்புகிறேன். சுருக்கமாகச் சொல்லின், நான் மந்தை யின் இரட்சிப்பிற்காக திறனுடன் பணியாற்றவும் அதனூடாக நான் நிறைவாக இரட்சிக்கப்படவும் வேண்டுகிறேன்."

இயூஜினின் சிந்தனைப்படி, நல்லாயனாக நம்பிக்கையோடு பணிபுரி வதே தூய்மைக்கான வழியாகும். இயுஜின் செபத்திற்கும் பணிக்கும் இடையே தபோதனத்திற்கும் அப்போஸ்தலிக்கத்திற்கும் இடையே ஒருங்கிணைவைக் கண்டார். பணியின் தூய்மைப்படுத்தும் அர்ப்பண மாகவே இயூஜின் தனது வாழ்வினை இனம்கண்டார்.

திருச்சபையின் பணிக்கும் ஆன்மாக்களின் இரட்சிப்பிற்கும் தம்மை அர்ப்பணிக்கும் மனிதர்களே அமலமரித் தியாகிகள் ஆவர். 'முதலில் மனிதராக மக்கள் செயற்படுவதற்கு நாம் அவர்களை வழிநடத்த வேண்டும். அடுத்து அவர்கள் கிறிஸ்தவர்களாகவும் ஈற்றில் புனிதர் களாகவும் மலர்வதற்கு நாம் உதவவேண்டும்" என்று ஆயர் இயூஜின் மொழிந்தார்.

*1859ம் ஆண்டு மாசி மாதம் 20ம் திகதி சாவதற்கு இரு வருடங்களுக்கு முன்னர் இயூஜின் கூறினார்: "இறைவனின் முன்னால் எம் இதயத்தில் எழும் உணர்வு உங்களின் இரட்சிப்பிற்காக உழைப்பதேயாகும். ஆழமான இக்கரிசனைக்கான காரணம் எமது தந்தைக்குரிய கரிசனையாகும்." "கிறிஸ்துவிற்கான அன்பு எம்மை ஆட்கொள்கின்றது" (2 கொரி. 5:4). "நீங்கள் தூய்மையில் வளருவது கடவுளின் விருப்பமாகும்" (1 தெச. 4:3).*

## இயூஜின் டீ மசனெட்டால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள்

### கைவிடப்பட்ட சிறுவர்களுக்கான இல்லம் (1835)

*அனாதைப் பிள்ளைகளுக்கும் கைவிடப்பட்டவர்களுக்குமான இல் லம் 1835ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கொலொராவினால் பாதிப் பிற்கு உள்ளாகித் தப்பித்த பல பிள்ளைகள் தம்மைத் தாமே காப்பாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அவ்வாறே இன்று பல இளைஞர் கூட்டங்கள் நேபிள்ஸ், சாவோ பவோலோ, மெக்சிகோ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரம், மனிலா போன்ற அதிகப்படியான ஏழை மக்கள் உள்ள இடங்களில் காணப்படுகின்றார்கள்.

**காப்பகம் (1835)**

ஒரு துறைமுகநகரத்தில் ஏழ்மை பல கைவிடப்பட்டவர்களையும் இளம்பெண்களையும் பரபரப்பான விபச்சாரத் தொழிலுக்கு இட்டுச் சென்றது. விசிற்ரைன் அருட்சகோதரிகளிடம் இத்தகைய பெண்கள் ஆயர் இயூஜினால் கையளிக்கப்பட்டு புனர்வாழ்விற்கு இட்டுச் செல்லப் பட்டார்கள். நகரத்திலுள்ள பணக்கார மக்களால் இப்பணிக்கு நிதி வழங்கப்பட்டது.

**தொழிலாளப் பையன்களுக்கான இல்லம் (1835)**

மத்திய தர வருமானம்பெறும் தொழிலாள வாலிபர்களுக்காக பாதர் ஜீன் ஜோசப் அலமான்ட்டால் இவ் இல்லம் ஸ்தாபிக்கப்பட்டது.

**வேலைசெய்யும் பையன்களுக்கான புனித றப்பாயேல் இல்லம் (1835)**

பாதர் கயிர் ஆயர் இயூஜின் டீ மசனெட்டின் அனுமதியுடன் சமூக அப்போஸ்தலிக்க பணியை ஆரம்பித்தார். வாலிபர்கள் தங்குவதற்கான வசதிகளும் தொழிற் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

**ஒழுக்கக்குறைவான யுவதிகளுக்கான காப்பகம் (1839)**

பாதிப்புற்ற இளம்பெண்களுக்கான காப்பகம் சிறியமுறையில் பெண்கள் குழுவினரால் 1820ல் ஸ்தாபிக்கப்பட்டது. 1839ல் இதனை ஆயர் இயூஜின் பொறுப்பேற்று நல்லாயன் கன்னியரிடம் கையளிப்பு செய்தார்.

**காவல்தூதர் இல்லம் (1839)**

அதிகாரம்மிக்க முதலாளித்துவ வர்க்கத்தினரோடு ஆயர் இயூஜின் அடிக்கடி முரண்பட்டுநின்றார். அக்குடும்பங்களிலிருந்து கைவிடப்பட்டோருக்கு ஆயர் இயூஜின் கரிசனை காட்டி இல்லம் அமைத்தார்.

**மாற்றாற்றல் உள்ளோருக்கான இல்லம் (1839)**

இரு கன்னியர்களின் உதவியுடன் தபோதனர் பிசியாசுஸ் அவர்களினால் இவ் இல்லம் ஸ்தாபிக்கப்பட்டது.

**கைத்தொழில், விவசாய மறுமலர்ச்சிக் கல்லூரி (1839)**

இளம் குற்றவாளிகளுக்கும் சிறையிலிருந்து தப்பியோடியவர்களுக்குமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வுமையமாக இது தபோதனர் பிசியாசுஸ் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது இது ஆரம்பமான ஒரு வருடத்தில் கிழமைதோறும் பயனாளிகள் கடும் குழப்பத்தை ஏற்படுத்திவந்தார்கள். கொலை விழும் அளவிற்கு குற்றச் செயல்கள் அதிகரித்தே வந்தன. இந்த நன்முயற்சியை முறியடிக்கும் நோக்குடனே இளையோர் இவ்வாறு செயற்பட்டதாகப் பின்னர் தெரியவந்தது. 1840ம் ஆண்டு தன்னிறைவுபெற்ற கட்டிடம் கட்டப்பட்டு திட்டம் துரிதமான வளர்ச்சி கண்டது. மாணவர்கள் பயிற்சியில் ஆர்வத்தோடு ஈடுபட்டு பயனடைந்தார்கள்.

ஆயர் டீ மசனெட் இக்கல்லூரியை அடிக்கடி தரிசித்து மகிழ்வடைந் தார். 18பேர் கொண்ட முதற் பட்டதாரிக் குழுவினரில் மூவர் மட்டுமே குற்றசெயல்களில் மீளவும் ஈடுபட்டார்கள். 1839ற்கும் 1842ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 255 பையன்கள் இக்கல்லூரியில் கல்வி கற்றார்கள். அவர்களுள் 13 பேர் 13 வயதிற்கு உட்பட்டவர்கள். 209 பேர் 13 வயதிற்கும் 16 வயதிற்கும் உட்பட்டவர்கள். 33 பேர் 16 வயதிற்கு மேற்பட்டவர்கள். இச் சிறப்புப் பணியை முன்னெடுத்துச் செயற்படு வதற்கு புதிய சபையைத் தொடங்குமாறு ஆயர் ஊக்கப்படுத்தினார். சங்கிலியில் புனித பேதுரு எனும் சபை தோற்றுவிக்கப்பட்டது. முதல் இளம் துறவியருக்கான ஆடையை ஆயர் இயூஜின் டீ மசனெட் அணிவித்தார்.

### லெஸ் பெற்றிற்ஸ் சவோயாட்ஸ் அமைப்பு (1841)

இயூஜின் 19ம் நூற்றாண்டில் பிரான்சில் சிறுவர்கள் புகைக்கூடு துப்பர வாக்கும் வேலையில் ஈடுபட்டு வந்தார்கள். அவர்களுக்கு ஓர் இல்லம் அமைத்து, அவர்களுக்கு நல்ல உணவு கொடுத்துக் கரிசனையோடு கவனித்தார். நகர மக்களிடமிருந்து அன்பளிப்புப் பெற்று, கயீர் பாதரி டம் இல்லப் பொறுப்பைக் கையளித்தார்.

### சமையல்காரிகளுக்கான அமைப்பு (1841)

சமூக சேவைக்காக போர்டோவிலுள்ள நம்பிக்கைக் கன்னியர் சபை யினர் பணிக்கப்பட்டார்கள். முதலாளிமாரால் கைவிடப்பட்ட நிலை யில் வீடு இல்லாமல் மலைப்பகுதிக் கிராமங்களிலிருந்து மார்சேல் வீதிகளுக்கு வந்த யுவதிகளுக்கு பௌதீகரீதியாகவும் ஒழுக்கரீதியாவும் பாதுகாப்பான சூழலில் வேலை வழங்கிப் புகலிடம் வழங்க இந்த அமைப்பு முன்வந்தது. 1845ம் ஆண்டு இப்பணியினை பரிவன்புக் கன்னியர்சபை பொறுப்பெடுத்தது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புச் சகோதரிகள் சபை (24 தை, 1843)**

மார்சேல் பிரதேச சபை தர்மத்திற்கான நிதி குறைவடைந்ததும் புனித வின்சென்ற் டீ போல் அன்புச் சகோதரிகள் சபையை ஆயர் இயூஜின் டீ மசனெட் மார்சேலுக்கு வரவழைத்தார். அவர்கள் நோயாளரின் இல்லங்கள் சென்று அவர்களுக்கு இலவச மருத்துவ உதவி வழங்கி நற்பணியாற்றினார்கள். ஆரம்பத்தில் நகரப் பங்குத் தந்தையர்கள் ஒத்துழைப்பு நல்கப் பின்வாங்கினார்கள். காலப்போக்கில் அவர்கள் அன்புச் சகோதரிகளின் சிறப்பான பணிகளைப் பாராட்டியதோடு சமூகப் பணி நிதியத்தை அன்புச் சகோதரிகளிடம் ஒப்படைத்தார்கள்.

**புனித மார்த்தாவின் திருத்துவ சபை (1845)**

மார்கலன் பெராட் இப்புதிய சபையை ஸ்தாபித்து கிராமியம் வாழ் நோயாளருக்கான மருத்துவ வசதியை இலகுவாக்கினார்.

**திருக்குடும்ப சகோதரிகள் சபை (1845)**

கிராமங்களில் திருத்துவ சபையினர் மேற்கொண்ட அதே பணியை திருக்குடும்ப சகோதரிகள் மார்சேல் நகரில் ஆற்றலானார்கள்.

**புனித ஆனாளின் அமைப்பு (1845)**

மதிப்புமிக்க பாபியோவால் மீனவப் பெண்களுக்காக இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. 1858ம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி மீனவப் பெண்களோடு புனித ஆனாளின் திருநாளைக் கொண்டாடிய பின்னர் ஆயர் இயுஜின் அவர்களது பக்தியைப் பாராட்டினார். இயூஜின் தனது 77ம் பிறந்த நாளை அவர்களோடு கொண்டாடியபொழுது "நூறாண்டு காலம் வாழ்க" என்று சபையினர் வாழ்த்துப் பாடினார்கள். அவர்கள் நோயாளிகளையும் சேரியில் வருந்துவோரையும் கரிசனையோடு கவனித்தார்கள்.

**புனித வளனாரின் அமைப்பு (1846)**

ஆயர் இயூஜின் ஆசீருடன் பாபியோ புனித வளனாரின் அமைப்பை ஸ்தாபித்தார். ஒவ்வொரு ஞாயிறும் தொழிலாளர் ஆண்கள் ஒன்றுகூடிச் செபித்தார்கள். திருப்பாடல்கள் பாடினார்கள். ஒவ்வொரு முதல்ஞாயிறு தினத்திலும் பொதுவிருந்தில் பங்கெடுத்தார்கள். 1847ம் ஆண்டு எண் ணிக்கை 1000 மாக அதிகரித்தது. 1865ம் ஆண்டு ஸ்தாபகரின் இறப்பின் நான்கு ஆண்டுகளின் பின்னர் எண்ணிக்கை இரணடு மடங்காக அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளம் கிறிஸ்தவ தொழிலாளர்களுக்கான அப்போஸ்தலிக்க பணி (1847)**
தனது குருப்பட்டநாளில் அருட்பணி யோசப் மாறி ரிமன் டேவிட் தொழிலாளர் வகுப்பிற்காக வாழ்நாள்பூராகவும் உழைப்பதாக தனிப் பட்ட வாக்குறுதி எடுத்துக்கொண்டார். மார்சேலின் இளம் மறை மாவட்டக் குருவாக இருந்தபொழுது பாட்டாளி வர்க்கத்தினர் தமது உரிமைக்குரலை வெளிப்படுத்த எவ்வாறு அவதிப்படுகின்றார்கள் என்பதை உணர்ந்தார். இந்நிலைப்பாட்டை நன்கு உணர்ந்தவராய் ஆர்வமுள்ள அக்குருவானவர் இளம்தொழிலாளரின் நலனுக்காக அப்போஸ்தலிக்க பணியாற்ற முன்வந்தார். ஆயர் இயூஜின் டீ மசனெட் இப்புதிய சூழலைப் புரிந்துகொண்டு அக்குருவானவருக்கு அனுமதியை யும் சுதந்திரத்தையும் பெரும்மகிழ்வோடு வழங்கினார். ஆயர் இவரை பங்குப் பணிகளிலிருந்து விடுவித்து இவர் இப்புதிய அப்போஸ்த லிக்க பணியில் முழுமையாக ஈடுபட ஊக்குவிப்பு வழங்கினார். ஞாயிறு தோறும் 300ற்கு மேற்பட்ட இளம் தொழிலாளர்கள் இவரது வழிகாட்டலுக்காக ஒன்றுகூடுவார்கள். 100ற்கு மேற்பட்ட ஞான ஒடுக்கங்களும் கருத்தரங்குகளும் நடாத்தினார். 200ற்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதி வெளியிட்டார். 1891ம் ஆண்டு தனது 69ம் வயதில் மாரடைப்பு காரணமாக இறைவீடு சேர்ந்தார்.

இயூஜின் டீ மசனெட் ஆன்மாக்களை இரட்சிக்கும் மீட்புப் பணியில் எப்பொழுதும் மிகுந்த ஆர்வத்தோடு காணப்பட்டார். அவர் கைவிடப் பட்டவர்களை அன்புசெய்தார். கைவிடப்பட்டவர்கள் அவரை அன்பு செய்தார்கள். அவர்கள் இயூஜினைப் புரிந்துகொண்டார்கள். இயூஜினும் தனது பணியை வலிமையான முறையில் இயேசுவை மையப்படுத்தி முன்னெடுத்து வெற்றிகண்டார். ஆயர் இயூஜின் தனது மறைமாவட்டச் சுற்று மடலில் குறிப்பிட்டார்:

"பிறரன்பு வாய்ப்பு ஏற்படும்பொழுது எல்லாவற்றையும் புதிய தேவை களையும் உள்ளடக்குகின்றது. அது புதிய நுட்பங்களையும் உரு வாக்குகின்றது. அது இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் ஆன்மீக உதவி களையும் பொருளாதார உதவிகளையும் தாராளமாக அள்ளி அள்ளிக் கொடுக்கவைக்கின்றது."

## ஆழ்துயர் சரிவு

1861ம் ஆண்டு வைகாசி மாதம் 21ம் திகதி ஆயர் இயூஜின் டீ மசனெட் இறைவீடு எய்தினார். வரலாறு படைத்த வள்ளலாக இயூஜின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவோடு இணைந்துகொண்டார். **"நீங்கள் எரிவதை, வெப்பம் கொடுப்பதை, வெளிச்சம் கொடுப்பதை விரும்புகிறேன். இல்லையேல் வெளியேறுங்கள்."**

மார்சேலின் புதிய ஆயர் பற்றிஸ் குறுஸ் மிகவும் மோசமான முறையில் அமலமரித்தியாகிகளைப் பழிவாங்கி அனைத்தையும் தலை கீழாக்கினார். அவரது ஆட்சி 4 வருடங்களுக்குக் குறைவாயினும் அவரால் ஏற்பட்ட பாதிப்புக்கள் அளப்பரியவை. பெரிய குருமடமும் பலதரப்பட்ட மறைமாமாவட்டப் பொறுப்புக்களும் காணிகளும் சொத்துக்களும் அமலமரித்தியாகிகளிடமிருந்து அத்துமீறிப் பறிக்கப் பட்டன. மார்சேல் மறைமாவட்டத்திலிருந்து அமலமரித் தியாகிகள் துரத்தப்பட்டார்கள் என்றால் அது மிகையாகாது. ஆயர் டீ மசனெட் ஆரம்பித்துவைத்த பல அப்போஸ்தலிக்க பணிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன. ஒளிமயமான நிகழ்காலம் இருள்மயமானது. எனினும், "ஆயர் பற்றிஸ் குறுஸ் ஒரு மனநோயாளி" என முத்திரை குத்தப்பட்டு 1866ம் ஆண்டு தை மாதம் 10ம் திகதி பதவி இறக்கப்பட்டார்.

**இயூஜினது இல்லக்கதவு உதவிநாடி வந்த ஏழைகளுக்கு என்றும் திறந்தே இருந்தது. இவரது இதயத்திற்கும் பணப்பையிற்கும் ஏழைகளை நன்றாகத் தெரியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயூஜின் டீ மசனெட்

அஞ்ஞா நெஞ்சுடன் ஆண்டவனின் அன்புப் பணிக்காக அர்ப்பணம் செய்தவர்.

ஆதரவு அற்றோருக்கு புதுவாழ்வு வழங்கத் தன்னையே தினமும் தாரை வார்த்துக் கொடுப்பதில் இன்பம் கண்டவர்.

இனிய நல்வாழ்வை இதயப்பூர்வமாப் பகிர்ந்து அளித்தவர்.

ஈகை என்ற சொல்லுக்கு விளக்கமாக வாழ்ந்தவர்.

உவகையோடு உத்தமன் இயேசுவின் பாதச் சுவடுகளில் பாதம் பதித்தவர்.

ஊர், உலகு எங்கும் நற்செய்தி அறிவித்தவர்.

எங்கு சென்றாலும் இயேசுவை மையப்படுத்தியவர்.

ஏனென்று கேட்டு எல்லோரையும் புரட்சிக்கழைத்தவர்.

ஐயமின்றி அனைவருக்கும் இயேசுவே வாழ்வு என எண்பித்தவர்.

ஒன்றிப்பின் அடிப்படையில் அமதிகளை உருவாக்கியவர்.

ஓதி வாழும் சமூகமதைக் கட்டி எழுப்பியவர்.

ஔடதமாக தன்னையே தாரை வார்த்துக்கொடுத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. உயர் தலைவர்

இயூஜின் டீ மசனெட் சிறிய இச்சபையின் ஆரம்பத்திலேயே உயர் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆவியூக்கத்தின் அடிப்படையில் சபையைக் கட்டி எழுப்புவதையே இலக்காகக் கொண்டு இயூஜின் வாழ்நாள்பூராகவும் இயங்கினார். சபையை வளர்ப்பதையே நோக்காகக் கொண்டு அவரைத் தேடிவந்த உயர் பதவிகளையும் நிராகரித்தார். சபையின் நன்மைத்தனத்தை முன்னிட்டு தனது மாமனார் போர்சூன் டீ மசனெட் ஆயராவதை இயூஜின் டீ மசனெட் விரும்பினார். பாதர் ரெம்பியருக்கு இயுஜின் 1817ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ம் திகதி கடிதம் எழுதினார்:

"எனது சகோதரர்கள், எனது நண்பர்கள், இன்னும் மேலாக கைவிடப் பட்ட இளையோரின் ஆன்மாக்கள் தொடர்பான எனது அன்பின் வலிமையையும் ஆழத்தையும் தெரிந்திருந்தால் பங்குத் தந்தையர்கள் என்னைப்போல கடவுளின் அருளால் மிகவும் சிறப்பாக கரிசனையோடு செயற்பட்டிருப்பார்கள். நான் நேசிக்கும் அமலமரித் தியாகிகளின் குடும்பத்திற்காக எனக்குக் கிடைத்த சில சலுகைகளைக் கைவிட்டு ஏழ்மைக்குருவாக நான் இயங்க ஆரம்பித்துவிட்டேன். ஒருவர் உலகிற்குப் பதிலாக நித்தியத்தையும் செல்வத்திற்குப் பதிலாக வறுமையையும் ஓய்விற்குப் பதிலாகப் பணியையும் உலக ஆட்சிக்குப் பதிலாக ஆன்மாக் களின் இரட்சிப்பையும் தேர்ந்தெடுத்து இயங்க ஆரம்பித்தால் அமைதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிப்பு, மகிழ்ச்சி, நற்பண்புகளின் ஆட்சி போன்றவை குழும வாழ்வில் மேலோங்கிநிற்கும் நிலைப்பாடு காணப்படும்.

பின்னர் 1825ம் ஆண்டு மார்சேலை விட்டு பாப்பரசரின் அனுமதி பெற உரோமைக்குப் புறப்படுகையில் இயுஜின் அருட்பணி பியரே மீ அடிகளாருக்கு எழுதினார்:

"திருத்தூதர்களின் கல்லறையில் நான் உம்மை மறக்க மாட்டேன். எனது சபையை நேசித்து நான் மேற்கொள்ளும் எனது பயணத்திற் காகவும் எனக்காகவும் மன்றாட மறக்க வேண்டாம்."

## சபையின் நாளாந்த செயற்பாடுகளில் இயூஜின்

ஆயராயிருந்து கொண்டே இயூஜின் சபையின் அனைத்து நடவ டிக்கைகளிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டார். 1837ம் ஆண்டு ஐப்பசி மாதம் 2ம் திகதி மகாஞானவொடுக்க முதல்வர் அருட்பணி மில்லே அடிகளாருக்கு கடிதம் எழுதினார்.

'எனது அன்புக்குரிய மில்லே அடிகளாருக்கு,

மகாஞானவொடுக்கம் பாதி முடிவடைந்தபோதும் உம்மிடமிருந்து ஒரு கடிதம் மட்டுமே கிடைத்துள்ளது. உமக்கு வருத்தம் எனின் மற்றொரு பணியாளர் மூலமாகத் தொடர்புகொண்டிருக்கலாம் அல்லவா? உமது மௌனத்தையிட்டுப் பரபரப்படைந்தே இதை எழுதுகிறேன். அருட் பணி றிச்சாட்டின் இறப்பு பற்றிய செய்தியை அனுப்பியிருந்தேன். அது கிடைத்ததா?"

70 வயதில் ஆயர் இயூஜின் டீ மசனெட் 1852ம் ஆண்டு அமலமரித் தியாகிகள் சபை ஏழைகளுக்கும் மிகவும் கைவிடப்பட்டவர்களுக்கும் நற்செய்தி அறிவிப்பதையே இலக்காகக் கொண்டது என்பதை மீள் வலியுறுத்தினார். பேராலயங்களிலும் உயர்குடிமக்களின் ஆலயங்களி லும் தவக்காலப் போதனைகளைத் தவிர்க்குமாறு ஆயர் கேட்டுக் கொண்டார். அருட்பணி கெக்டர் லுயிஸ் மேர்லின் அடிகளாருக்குக் கடிதம் எழுதினார்:

"இரெயின் பங்கில் பிரசங்கம் செய்யவேண்டிய தேவையில்லை. ஏனெனில் அப்பங்குத் தந்தை யேசு சபையினர், டோமினிக்கன் சபை யினர், இரட்சணிய சபையினர் போன்றோரிடமிருந்து நிறைய உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பெற்றுவிட்டார். ஏன் அங்கு போய் அச்சபையினரோடு மோத வேண்டும்? நாம் மிகவும் பின்தங்கிய பகுதிகளுக்கே செல்லுவோம். அந்தப் பங்குத்தந்தையரிடம் தவக்காலப் பிரசங்கம் செய்ய இயலாது எனச் சொல்லுங்கள். பங்குத் தந்தையரின் இயல்பு இப்படித்தான். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் தங்கள் பங்கில் தவக்காலம் ஒழுங் காக அனுசரிக்கப்படவேண்டியது என்பதுதான். ஆனால் எனது பார்வை வித்தியாசமானதுதான்.

பெரிய போதனையாளர் என்று பெயர்பெறுவது அல்ல. மாறாக, நற்பண்பு, ஒழுங்கு, நல் நடத்தை, முன்னுதாரணம் போன்றவற்றை முதன்மைப்படுத்துங்கள். கடவுளால் உங்களுக்கு அருளப்பட்டதை ஏற்று செயற்படுங்கள். அகந்தைக்கு இடம் கொடுக்க வேண்டாம். அகந்தை அலகையிடமே உங்களை இட்டுச்செல்லும்."

ஆயர் இயூஜின் டீ மசனெட் அருட்பணி பறெற் அடிகளாருக்கு பிரான்சிலுள்ள பேராலயங்களில் திருவருகைக் கால, தவக்காலப் போத னைகளை மேற்கொள்ளவேண்டாம் என்று நினைவூட்டினார்:

**"ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்போம். அதுவே மிகவும் பெறுமதி வாய்ந்தது. அதுவே எமது அழைப்போடும் அத்தகைய பணிக்காக ஸ்தாபிக்கப்பட்ட சபையோடும் ஒத்துப்போகின்றது."**

## கடல்கடந்த பணிகள்

கடல் கடந்து இரட்சணியப் பணியாற்றுவதை இயூஜின் டீ மசனெட் பெரிதும் விரும்பினார். மொன்றியாலிலிருந்து உரோமைக்குப் போகை யில் மார்சேலிற்குப் செல்லும் வாய்ப்பு மொன்றியல் ஆயர் இக்னேஸ் பூர்கேயிற்குக் கிட்டியது. அருட்பணி ரெம்பியரோடு ஆரம்பித்த இத்தொடர்பு அமல மரித்தியாகிகள் சபையின் வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. 1841ம் ஆண்டு அமலமரித் தியாகிகள் முதன்முதலாக கனடாவில் கால்பதித்தனர். அமலமரித் தியாகிகள் சபையின் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஆரம்பமானது. 1844ல் ஒட்டாவாவிலும் சகுயினேயிலும் 1845ல் வின்னிபெக்கிலும் பிரெயி ரெஸ்ஸிலும் 1846ல் இலேலோ குறொஸிலும் வடமேற்கிலும் 1847ல் யேம்ஸ்றேயிலும் பசிபிக்கிலும் இலங்கையிலும் தென் ஆபிரிக்காவி லும் 1848ல் நியூயோர்க்கிலுள்ள போர்ட் அல்போனியிலும் மெக்சிகோ விலும் 1849ல் புறொன்விலேயிலும் ரெக்சாவலிலும் 1851ல் நியூயோர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலுள்ள பவலோவிலும் தொடர்ந்து நிறுயோர்க்கிலுள்ள பிளட்ஸ் பேர்க்கிலும் பென்சிலிவெனியாவிலும் இரட்சணியப் பணிக்காக அமல மரித் தியாகிகள் கால் பதித்தார்கள்.

ஆயர் பெற்றக்கினி யாழ்ப்பாணமிருந்து பிரான்சிலுள்ள துள்பேயின் ஆயர் பேர்ட்ரெண்டை சந்தித்து குருக்களுக்கான தேவையை முன் வைத்தார். அப்பொழுது பேர்ட்ரெண்ட் பெற்றக்கினியிடம் கூறினார்:

"மாசேலுக்குப் போய் அங்கு இயூஜின் ஆயரைக் காணுங்கள். அவரது சபையோ சிறியது. ஆனால் அவரது இதயமோ புனித பவுலைப் போன்று, உலகைப் போன்று மிகவும் பெரியது. ஏழை ஆன்மாக்கள் என்பதை அழுத்தமாகச் சொல்லுங்கள். அதைக் கேட்டால் அவர் எதிர்மறையாகச் செயற்படமாட்டார்."

1850ல் ஆயர் இயூஜின் அருட்பணி சமேரியாவிற்கு எழுதினார்:

"உங்கள் கடிதங்களை ஆய்வுசெய்தேன். இன்றுவரை அங்கு ஒரு மன மாற்றமும் நிகழவில்லை என அறிகிறேன். ஆன்மாக்களை இரட்சிப் பதற்காக இலங்கைக்கு பணியாளரை அனுப்பினேன். இத்தாலிய, ஸ்பானிய நாட்டுப் பணியாளர்கள் தமது அன்றாட உணவிற்காகப் பங்குத் தளங்களில் பணியாற்றுகிறார்கள் போலும். ஆனால் அமல மரித் தியாகிகளின் பணி வித்தியாசமானது." மீண்டும் இயூஜின் சமேரியாவிற்கு 1850ம் ஆண்டு சித்திரை மாதம் 2ம் திகதி எழுதினார்:

"அதிகப்படியான இறைநம்பிக்கையில்லா மக்கள் உள்ள உங்கள் தீவில் இரட்சணியப் பணியை நாம் ஆரம்பிக்க மாட்டோமா? நீண்ட காலமாக அமைதியாக இருக்கும் அந்த நாட்டில் மாற்றத்தைத் தோற்று விக்கத் துணியுங்கள். இது சார்பாக உங்களது நம்பிக்கைகளையும் கருத்துக்களையும் எனக்கு எழுதுங்கள். தப்பாய் வாழும் கிறிஸ்தவர் கள் மத்தியில் ஒப்பற்ற பணியாற்றுகிறீர்கள். ஆயினும் இறைநம்பிக்கை யில்லாதோரின் மன மாற்றத்திற்காகவே நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்."

1851ம் பங்குனி மாதம் 12ம் திகதி இயுஜின் சமேரியாவிற்கு மீண்டும் எழுதினார்: "இந்த ஆண்டு எமது எல்லா இரட்சணியப் பணிகளையும் எல்லா இடங்களிலும் சிறப்பாகச் செய்து விட்டோம். இலங்கையில் சிலைவழிபாடு, நம்பிக்கையீனம் போன்றவற்றை தீவிரமாக முறியடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். புதிய வடிவத்தில் புதிய கிறிஸ்தவர்கள் உருவாக்கப்படு வதையே நான் விரும்புகிறேன்."

இயூஜின் தனது 69ம் வயதில் இலங்கைப் பணியாளர்களுக்கு எழுதினார்:

"உங்களது நற்பணிகளைப் பற்றி நான் கேள்விப்படுகிறேன். ஒருநாள் வரும். அப்பொழுது விக்கிரக ஆராதனையையும் நம்பிக்கையீனத்தை யும் எதிர்த்து உக்கிரமாகப் போராடுங்கள். சாகும்முன் அதைக் காண் பேனோ தெரியாது. எனினும் நான் தொடர்ந்து நம்பிக்கையோடு பயணிக்கின்றேன்."

1851ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ம் திகதி இயூஜின் சமேரியாவிற்கு எழுதினார்: "அதிகமான பணியாளர்களை அனுப்புவது இலகுவானது. எனினும் அது நல்லது அல்ல. அது பல பிரான்சிஸ் சவேரியார்களாக மாறுவது அல்லது ஒன்றும் செய்யாமல் இருப்பதாகும். பொறுமையா யிருங்கள். விக்கிரக ஆராதனையை எதிர்த்துப் போராடுங்கள். அப் பொழுது உங்கள் துன்பம் இலகுவாகும். உங்களது உற்சாகத்தைக் குறைக்கும் ஆர்வமில்லாக் கிறிஸ்தவர்களோடு போராடுவதைவிட இது மேலானது,

ஆயர் இயூஜின் ஆயர் சமேரியாவிற்கு 1857ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதி எழுதினார்:

"அருட்பணி சுணாவெலின் கடிதம் எனக்கு பெரும் மகிழ்வு தருகின் றது. நான் எதிர்பார்த்த கனவு நனவாகி வருகின்றது. இலங்கைத் தீவின் நடுவிலிருந்து பல மக்கள் மனம் மாறுவதையிட்டு நான் பெரும் மகிழ்வடைகின்றேன். பிரிவினைவாதத்தை வளர்க்கும் தப்பான கத் தோலிக்கரைவிட புதிய கத்தோலிக்கரது நல்வளர்ச்சியை இட்டு நான் பூரிப்படைகின்றேன்.

ஆயர் இயூஜின் தனது இறப்பிற்கு இரு வருடங்கள் முன்னால் 1859ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி இலங்கையிலுள்ள அருட்பணி கிறிஸ்தோப்பர் பொன்சீன் அடிகளாருக்கு எழுதினார்:

"நம்பிக்கையில்லா மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பதில் விசுவாசிகள் ஆர்வம்காட்ட பெருமளவில் முன்வராததையிட்டு வருந்துகிறேன். புதிய கிறிஸ்தவர்கள் விசுவாசக் குறைவான பாரம்பரியக் கிறிஸ்தவர்களை விட மேலானவர்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலமரித் தியாகிகளோடு முரண்பட்டு நின்ற கொழும்பு ஆயர் பிராவி ஆண்டகைக்கு ஆயர் இயூஜின் 1852 சித்திரை மாதம் 27ம் திகதி எழுதினார்:

"அமலமரித் தியாகிகள் சார்பாகத் தாங்கள் காட்டும் தந்தைக்குரிய கரிசனைக்கு நன்றி. அவர்கள் நாட்டு அனுபவத்தைப் பெற வாய்ப்பு வழங்குங்கள். அவர்கள் ஆற்றலும் நற்பண்பும் உடையவர்கள். ஆங்கிலேயர்கள் மாறிச் சிந்தித்தால் அதை நான் பெரிதுபடுத்த மாட்டேன். அமலமரித் தியாகிகள் விசுவாசமில்லாதோரையும் செயலளவிலன்றி பெயரளவில் வாழும் கத்தோலிக்கரையும் மனம்மாற்றி நல் வாழ்விற்கு உட்படுத்தவே வந்தவர்கள்."

## தென் ஆபிரிக்கா

ஆபிரிக்காவில் மனமாற்றம் மிகவும் மெதுவாகவே இடம்பெற்றது. நாத்தாலின் ஆயர் ஜீன் அலார்ட் மிகவும் நுணுக்கமானமுறையில் நிறைவுகாண் விரும்பியாக விளங்கினார். ஒருமுறை ஓர் ஏழைப் பெண்ணின் திராட்சைத் தோட்டத்தில் சில முந்திரிகைப் பழங்களைப் பறித்து உண்டார். பின்னர் இதைப் பெரிய குற்றமாகக் கருதி பல ஆண்டுகள் குற்ற உணர்வுடன் வாழ்ந்தார்.

இவர் தென் ஆபிரிக்காவில் பணியாற்ற வந்த அமலமரித் தியாகிகளுடன் கடினமாக நடந்து கொண்டார். குதிரைகள் இருந்தும்கூட 1000 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பனிப் பிரதேசங்களுக்கு அமலமரித் தியாகிகள் நடந்துபோகக் கட்டாயப்படுத்தினார். விளைவாக பலர் ஆபிரிக்காவை விட்டு அல்லது குருத்துவத்தை விட்டு வெளியேறினார்கள். எமது ஸ்தாபகர் வேதனையோடு எழுதினார்:

"கபீர்களுக்கான பணிகளின் வெற்றிக்குறைவிற்கான காரணிகளைக் கண்டுபிடியுங்கள். அவர்களில் ஒருவரேனும் நீங்கள் எடுத்துச் சென்ற விசுவாசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பட்டணத்து நாஸ்திகர்களுக் கல்ல மாறாக, கபீர்களுடைய மனமாற்றத்திற்காகவே அனுப்பப்பட்டீர்கள். உங்களது எல்லா சிந்தனைகளையும் முயற்சிகளையும் அவர்கள் சார்பாக முன்னெடுங்கள். எல்லாப் பணியாளர்களும் இதனைக் கருத்தில் கொள்ளுங்கள்."

அருட்பணி யோசப் யெராட் அடிகளாருக்கும் சோதோ அரசின் மொசுசோ அரசனுக்குமிடையே நல்லுறவு நிலவியது. மொசொத்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் தலைநகர் பசொத்தோ அமலமரித் தியாகிகளை வரவேற்றது, ஆபிரிக்காவில் நற்செய்தியை அறிவிக்கும் பணி வெற்றியளித்தது.

ஆபிரிக்காவில் அமலமரித் தியாகிகளுக்கும் திருக்குடும்ப சகோதரி களுக்கும் ஆயர் அலாட்டின் கடின போக்கு பல பிரச்சினைகளைத் தோற்றுவித்தது, *1874ல்* அலாட் முன்கூட்டியே ஆயர்பதவியிலிருந்து விலக்கப்பட்டார். *1889ல்* சிற்றாலயத்தில் அலாட் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

## இயூஜினின் அணுகுமுறை

புனித இயூஜின் டீ மசனெட்டின் கடிதங்களும் அவரது நடத்தைக் கோலங்களும் அவரது வாழ்வியற் சிறப்புக்களையும் எதிர்கால அமல மரித்தியாகிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளையும் வெளிக் காட்டி நிற்கின்றன.

### 1. விசுவாசக் கண்களால் சூழலை ஆய்வு செய்யுங்கள்

அமலமரித் தியாகிகள் சபையின் ஸ்தாபகர் ஆன்மீக தாகம் மிக்கவ ராய், திட்டமிட்டவராய் ஒழுங்குடன் வாழ்ந்துகாட்டினார். இவர் விசுவாசக் கண்களுடன் இறைத்திட்டத்தை உன்னிப்பாகக் கவனித்துச் செயற்பட்டார். அமதி ஒழுங்குநூலின் அறிமுகத்தில்:

"இரட்சகராம் இயேசுக் கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்ட விலை மதிக்கப்பெறாத திருச்சபை இன்று கோரமாகத் தாக்கப்பட்டு வருகின்றது, **விசுவாசத்தின் தூய சேமிப்பு** இறுதிவரை காக்கப்பட வேண்டும். இந்தத் தீமைகளின் காட்சி சில குருக்களின் இதயங்களைத் தொட்டதால் அவர்கள் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக தம்மையே இறைமகிமைக்கு அர்ப்பணிக்க சுய விருப்போடு முன்வருகின்றார்கள்."

### 2. விருந்தோம்பலோடு பதிலளியுங்கள்

அமதி ஒழுங்குநூலின் அறிமுகம் டீ மசனெட்டின் பதிலையும் அமல மரித் தியாகிகளின் பொருத்தமான பதிலையும் தருகின்றது.

**"மக்களின் மீட்பிற்காக சுவாலை விட்டு எரிய குருக்கள் உருவாக்கப் பட்டால், தம்மை மீட்டு பிறரையும் மீட்கும் அப்போஸ்தலிக்க மக்க ளாக உணர்வூட்டம்பெற்றால் தொலைந்து போனவர்கள் அவர்களால் இலகுவில் இரட்சிக்கப்படுவார்கள்."**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமதி குருமாணவர்களின் ஆர்வக் குறைவை நிவிர்த்திசெய்ய அருட் பணி சார்லஸ் பெலன் அடிகளாருக்கு இயூஜின் எழுதினார்:

"எமது உருவாக்கற் பயிற்சி முழுவதும் புனிதமாயிருக்கட்டும்! இயேசுக் கிறிஸ்துவின் ஆவியில் ஊறியவர்களாய், அலகையின் தீய சக்தியை வெல்லும் ஆற்றல்மிக்கவர்களாய், **உண்மை சார்பாக உலகைக் கட்டி எழுப்புவர்களாய்,** திருச்சபையின் உயர் அப்போஸ்தலிக்கத்தில் பணி யாற்றுபவர்களாய் அவர்கள் உருவாக்கப்பட வேண்டும். சுயநலமிக்க வர்களில், துணிச்சலில்லாதவர்களில், சோரம்போனவர்களில் அத்தகைய விளைச்சலைப் பெறமுடியுமா? இயேசுவின் பாரபட்சமற்ற பண்பினால் கவரப்பட்டு இணைக்கப்படாதவன் இரட்சிப்பை அடைய மாட்டான்.

"நெரிந்த நாணலை முறியார்
மங்கி எரியும் திரியை அணையார்" (எசாயா 42:3).

எமது ஸ்தாபகர் குறிப்பிடுகின்றார்:

"இந்த சமூகத்தில் மங்கி எரியும் திரிகளை அணைப்பதில் பயனில்லை. **நீங்கள் எரிவதை, வெப்பம் கொடுப்பதை, வெளிச்சம் கொடுப்பதை விரும்புகிறேன். இல்லையேல் வெளியேறுங்கள்."**

### 3. தரிசனத்துடனும் துணிச்சலுடனும் நற்செய்தி நவிலல்

இயூஜின் டீ மசனெட்டிற்கு பரிவன்பில் தோய்த்தெடுத்த துணிச்சல், திறமை, கண்டுபிடிப்பு போன்றவை பிரதாமானவை. இயூஜின் டீ மசனெட் மிகவும் ஆர்வத்தோடு ஆன்மாக்களை இரட்சிக்கும் பணி யில் ஈடுபட்டார். ஏனோதானோநிலையில் உயிர்பிழைக்கும் ஒருவராக அவர் வாழ விரும்பவில்லை. **உணர்வுரீதியாக ஏழையருக்கான அன்புப் பணியில்** கடவுளுக்குத் தன்னை அர்ப்பணிக்கவே அவர் விரும்பினார். "நான் உறக்கத்திலிருப்பதால் நீங்கள் மோசமான நிலைக்குத் தள்ளப் பட்டு விட்டீர்கள் என உணர்ந்தால் உடனே தாமதியாது என்னை எழுப்பி விடுங்கள்."

### 4. உள்ளார்ந்த சுதந்திரத்துடன் செயற்படுதல்

உள்ளார்ந்த விடுதலையின் அவசியத்தை இயூஜின் தனது பன்னி ரெண்டு வயதிலேயே உணர்ந்தார். தூய ஆவியின் வல்லமையினால் காலத்தின் தேவைக்கேற்ப விடுதலையுணர்வோடு இயூஜின் பணியாற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கப்பட்டார். வாழ்க்கைபூராகவும் இயூஜினின் வாழ்வில் **விடுதலை** பிரதானமான அம்சமாகக் கருதப்பட்டது. தனது சொந்த வெற்றிகளால் பரவசப்படாமல் இறைவனை மகிமைப்படுத்துவதையே மேம்படுத்தினார். பல பெரிய பணித் திட்டங்களை வெற்றிகரமாக முடிப்பதோடு திருச்சபையின் புதிய தேவைகளையும் இயூஜின் நிறைவு செய்தார்.

**5. தனக்கே நற்செய்தி நவிலப்படல்**

*தனது சுற்றுமடலில் 1838ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12ம் திகதி இயூஜின் குறிப்பிடுகின்றார்:*

*"ஒரு நகரத்தின் மிகவும் மோசமான பகுதியில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்க 3வது தடவையாக நான் சென்றேன். முன்னுதாரணமான முறையில் அந்த மோசமான சூழலில் சிலர் பரிவன்போடு செயற்படுவதைப் பார்த்து நான் ஊக்கமடைகின்றேன். அங்கு பல நல்ல உள்ளங்கள் நோயாளிகளைத் தாமாகவே கரிசனையோடு கவனிப்பது பாராட்டுதற்குரியது."*

**இயூஜின் டீ மசனெட் இரட்சணியப்பணியில் இயேசுவையே கண்டார். ஆர்வமுள்ள ஒவ்வொரு அப்போஸ்தலிக்க பணியிலும் ஊழியர்கள் ஏழைகளில் இயேசுவைக் காணமுற்படும்பொழுது அவர்களில், அவர்கள் ஊடாக இயேசுவையே காண்பார்கள்.**

*கனடாவிலுள்ள அருட்பணி கென்றி பராவுட் அடிகளாருக்கு இயூஜின் கடிதம் 1857ம் ஆண்டு வைகாசி மாதம் 28ம் திகதி எழுதினார்:*

*"உங்களது மகா ஞானவொடுக்கக் குழுவினரின் இரட்சணியப் பணி பற்றிய விபரங்களை நான் ஆர்வத்தோடு படித்தேன். எனது ஆன்மாவில் அவை எழுப்பிய உணர்வுகளை எவ்வாறு வார்த்தையில் வடிக்க முடியும்? கடவுள் உங்களுக்கு அருளிய உதவியையும் உங்கள் பணிகளின்மூலம் அவர் வடிவமைத்த புதுமைகளையும் நினைந்து முதலில் கடவுளுக்கு நான் நன்றி கூறுகின்றேன். அடுத்து ஆன்மாக்களை இரட்சிப்பதற்காக நீங்கள் எதிர்கொண்ட சிலுவைகளையும் சிந்திய கண்ணீர்களையும் என் இதயத்தில் பதித்து உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இந்த நன்மைத்தனத்திற்காக கடவுள் தரப்போகும் வெகுமதி மிகப் பெரிது. இதை ஒத்த ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கு ஒருவர் புனித பேதுருவின் முதற்போதனைக்குச் செல்ல வேண்டும்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6. தனது பணியாளரின் அபிப்பிராயங்களை ஏற்றார்

கடல்கடந்து பணிசெய்து வந்த அமதிகளின் அபிப்பிராயங்களை இயூஜின் கரிசனையோடு செவிமடுத்தார். ஒன்பது வருட அனுபவ அறிக்கைகளைப் படித்து ஆய்வுசெய்த பின்னரே கடல்கடந்து பணி செய்வோருக்கான வழிகாட்டல்களை இயூஜின் 1853ல் வடித்தார். கோவைக் கத்தோலிக்கரின் பழமைவாதத்தை விட்டு, புதிய கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட இலங்கைப் பணியாளர் களுக்கு இயூஜின் நினைவூட்டினார்.

கனடாவிலுள்ள அருட்பணி கொனொறாட் அடிகளாருக்கு இயூஜின் 1843ம் ஆண்டு தை மாதம் 17ம் திகதி கடிதம் எழுதினார்: "எனது தீர் மானம் உங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துவதாக நீங்கள் கருதினால் என்னைக் கேள்வி கேட்கத் தயங்கவேண்டாம். ஏனெனில் எனக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கான ஆதாரம் குறைவாயிருக்கலாம்."

இயூஜின் 1852ம் ஆண்டு தை மாதம் இருபத்தொராம் திகதி அருட்பணி சமேரியாவிற்கு எழுதினார்: "உங்களது தகவற் தொடர்பாடல் பெரிதும் அற்புதமானது! உங்களது நுட்பமான அறிவுத் திறன் எனக்குப் பெரு மகிழ்வு அளிக்கின்றது. உங்களது கடிதங்களை நான் மீண்டும் மீண்டும் வாசிக்கின்றேன்."

## திருச்சபையின் அருளில் ஊன்றப் பெற்ற சபை

அமலமரித் தியாகிகள் சபையினை திருச்சபையின் அருளில் ஊன்றப் பெற்ற ஊடகமாவே இயூஜின் கருதுகின்றார். கடவுளிடமிருந்து வந்த கொடையாகவும் திருச்சபைக்காக இயங்கும் ஸ்தாபகமாகவும் அமல மரித் தியாகிகள் சபை விளங்குகின்றது. உரோமை விசுவாசத்தைப் பரப் பும் குழுவிடமிருந்து 1833 புரட்டாதி 14ம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தில் கூறப்படுவதாவது:

"பன்னிரெண்டாம் சிங்கராய பாப்பரசரால் அங்கீகாரம்பெற்ற அமல மரித் தியாகிகளின் சபையானது ஒழுங்கான தன்னடக்கத்திற்குப் பெயர் போனது. இறைவா, உமக்கு நன்றி! பணிக்காகத் தெரிவு செய்யப்பட் டோரின் நற்பண்புமிக்க, முன்மாதிரியான வாழ்க்கையின் பொருட்டு பரிசுத்த தந்தையின் ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைவதாக!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமலமரித் தியாகிகள் சபை** தனக்காக அல்ல, **திருச்சபையின் பணிக் காவே** உருவாக்கப்பட்டது 1850 ஐப்பசி 29ம் திகதி இயூஜின் அருட் பணி பாஸ்கல் றிச்சார்ட் அடிகளாருக்கு எழுதினார்:

"நான் அறுபத்தொன்பது வயதை அடைந்துவிட்டேன். இன்று நான் சாக நேரிட்டாலும் ஆறுதலடைவேன். ஏனெனில், ஆன்மாக்களின் இரட்சிப்பிற்காகவும் திருச்சபையை நேசிப்பதற்காகவும் பல தொண் டர்கள் கொண்ட குடும்பத்தை கடவுளின் திருச்சபைக்கு விட்டுச் செல்கின்றேன் என்பதனாலாகும்."

ஆயர் இயூஜின் சாகும் கட்டத்தில் படுக்கையிலிருந்துகொண்டு கூறிய இறுதி வார்த்தைகள்: "அமலமரித் தியாகிகள் சபையை திருச்சபையில் ஸ்தாபித்ததையிட்டு நான் சந்தோசமாகச் சாகின்றேன். உங்கள் மத்தி யில் கடைப்பிடிக்க வேண்டியதோ **வீட்டில் பரிவு, பரிவு, பரிவு. வெளியிலோ ஆன்மாக்களை இரட்சிப்பதற்கான தாகம்."**

## தனித்துவ நட்புறவு

ஆயர் இயூஜினின் நெருங்கிய நண்பர்களாக ரெம்பியர், கியுபேர்ட், கூர்ரெஸ் போன்றோர் விளங்கினார்கள். சபை அங்கத்தவர்கள் எல் லோரோடும் இயூஜின் கரிசனையோடும் உற்சாக உணர்வோடும் வாழ்ந் தார். கருதினால் வர்ணபோ ஆண்டகைக்கு ஆயர் இயூஜின் 1860ல் எழு தினார்:

"வடபிராந்திய மறைமாவட்டத்தில் ஆரோக்கியமற்ற சூழல் காணப்படு கின்றது. பல பணியாளர்கள் நோயுற்றுள்ளார்கள். எனவே, பாதிப்புற் றோர் சார்பாக கரிசனையோடு எழுதுகின்றேன். ஆராக்கியமான கொழும்பு மறைமாவட்டத்தில் பணியாளர்களை ஏற்று, நிலமையைச் சாதகமான நிலைக்குத் திருப்புமாறு இத்தால் கேட்டுநிற்கிறேன்."

## திறந்த வரவேற்பு

ஒருவர் தனது வாழ்வில் அன்பு கடவுளின் கொடை என்பதை உணர்வு ரீதியாக அறிந்து வெளிப்படுத்துவதே திறந்த வரவேற்பாகும். திறந்த மனத்தோடு இறைவனின் கொடைகளை உள்வாங்குவது இதன் சிறப் பாகும். இறைவனுக்கே உரித்தான இப்பண்பு மனிதரால் அனுபவிக்கப் படும்பொழுது அது மனித வாழ்வில் அர்த்தம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயூஜின் டீ மசனெட் தனது ஏட்டில் 1837, புரட்டாதி 4ம் திகதி குறிப்பிடுகின்றார்:

"மனிதரை அன்பு செய்யாதவர்கள் கடவுளை அன்பு செய்ய முடியாது. எனக்குள் இருக்கும் உணர்வுகளை மறைப்பது அல்லது அவை என்னில் இல்லை என மறுதலிப்பது பொருத்தமற்றது. எனக்கு ஓர் இதயத்தைத் தந்த இறைவனுக்கு நான் நன்றி நவிலுகின்றேன். ஏனெனில் அந்த இதயம் என்னைப் படைத்து. உணர்வூட்டும் என் எசமான் இயேசுக் கிறிஸ்துவின் இதயத்தைப் புரிந்துகொள்கின்றது, இதயத்திற்குப் பதிலாக மூளையைப் பயன்படுத்துபவர்கள் தம்மை மட்டுமே அன்பு செய்கின்றார்கள்."

குரு மாணவர்களின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி அன்ரனி முச்செற் அடிகளாருக்கு 1855, சித்திரை 24ம் திகதி எழுதினார்:

"மற்றவர்கள் அன்பு செய்வதிலும் பார்க்க நான் என் பிள்ளைகளை அன்பு செய்கின்றேன். இந்த அன்பு செய்யும் ஆற்றல் எனக்குக் கடவுள் அருளிய சிறப்பான கொடையாகும். இதற்காக நான் கடவுளுக்கு எந்நேரமும் நன்றி செலுத்துகின்றேன். அந்த அன்பு என்னில் ஆறாய் பெருக்கெடுத்து ஓடுகின்றது,"

அருட்பணி அன்ரனி முச்செற் அடிகளாருக்கு 1859, பங்குனி 22ம் திகதி ஆயர் இயூஜின் எழுதினார்:

"ஆண்டவர் எனக்குத் தாயின் இதயத்தைத் தந்துள்ளார் என்றும் எனது பிள்ளைகள் எனது அன்புக்கு உரியவர்கள் என்றும் அடிக்கடி நான் சொல்லியிருக்கின்றேன். இதனை நான் மனப்பூர்வமாகச் செய்கின்றேன். உம்மைப் போன்று ஒருவரை நான் அன்புசெய்யும்பொழுது எமது பரஸ்பர அன்புக்கு ஆதாரமாயுள்ள இறைவனை அன்புசெய்கின்றேன். இந்த இயல்பு என்னில் நிரந்தரமாக உள்ளது. நான் எங்கு சென்றாலும் இதனை என்னில் தாங்கியுள்ளேன்."

இலங்கையிலுள்ள அருட்பணி கிறிஸ்தோப்பர் பொன்சின் அடிகளாருக்கு 1852, கார்த்திகை 9ம் திகதி எழுதினார்:

"அருட்தந்தை அவர்களே!

நாம் இன்னும் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்கவில்லை. எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கிடையே இருக்கும் அன்பை நான் உணருகின்றேன். இறைவன் இயல்பாக எனக்குத் தந்த உணர்விற்காக நாள்தோறும் நன்றி நவிலு கின்றேன். இறைவன் தனது பிள்ளைகளுக்குத் தாராளமாக அன்பு பொழிவதுபோல எனது இதயம் எனக்குரித்தானவர்கள் அனைவருக் கும் அன்பைக் கொடுக்கின்றது."

இளங்குரு ரிமன் டேவிட் இரண்டாம் மாடிக்குப் படியேறி இரவில் ஆயர் இயூஜினைச் சந்திக்க முனைந்தார். திறக்கப்பட்ட கதவின் ஓரத்தில் மெதுவாகச் சென்று நின்றார். அப்பொழுது பெரும் சத்தம் கேட்டது.

"யார் அங்கே?"

மெதுவாக அவரை நோக்கி நகர்ந்தவண்ணம்,

"நான், ஆண்டகை அவர்களே." என்றார் இளங்குரு.

"நான் இங்கே இருக்கிறேன் என்று யார் சொன்னது? ஆயர் ஒரு நிமிட அமைதியை அனுபவிக்க முடியாதா?"

எந்தப் பக்கம் போவது என்று எனக்குத் தெரியவில்லை. முழந்தாட் படியிட்ட வண்ணம்,

"தயவுசெய்து மன்னிக்கனும் ஆண்டகை அவர்களே, நான் போய் வருகின்றேன்."

'இல்லை. எனக்காகக் கொஞ்சம் காத்திருங்கள்."

சிறிது நேரத்தின் பின்னர், "வாருங்கள்" என்று சத்தம் கேட்டது, நடு நடுங்கியபடி நான் வந்த காரணத்தை வெளிப்படுத்தினேன். அவரது இதயம் இலகுவானது. புயல் மெதுவாக மறைந்தது. மீண்டும் அவரை இரக்கம் ஆட்கொண்டது. பரிவு பரிணமித்தது. தந்தைக்குரிய தன்மை யில் வலுவானார்.

"எனது குழந்தையே, இப்படிப் பிரச்சனைகள் எழுந்தால் என்னிடம் சொல்லப் பின்வாங்க வேண்டாம். நான் உமது தந்தையில்லையா?"

இவ்வாறு வார்த்தைகள் பேசியபடி என்னை அணைத்துக் கொண்டார். அவரது கண்ணீர் எனது கன்னங்களை நனைத்தது. இவ்வாறு எவராலும் என்னை உணர்வூட்டம் செய்ய இயலாது என்பதை உணரலானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலமரித் தியாகிகளுக்கு ஆயர் இயூஜின் வெளிக்காட்டிய பரிவில் அவர் இயேசுவையும் எசமான் இயேசு ஏழைகள், ஓரம்கட்டப்பட்டோர், பாவிகள், பரதேசிகள் போன்றோரை அன்பு செய்ததுபோல தான் அன்பு செய்ய அழைக்கப்பட்டதையும் கண்டுகொண்டார். அவரது பெரும் இதயம் என்றும் எல்லோர் சார்பாகவும் அன்பு அமுதத்தைப் பொழிகின்றது.

**இறைமக்களின் மீட்பிற்காகச் சுவாலைவிட்டு எரியும் குருக்கள், பணியாளர்கள் உருவாக்கப்பட்டால் தம்மை மீட்டு, பிறரையும் மீட்டு அப்போஸ்தலிக்க மக்கள் உணர்வூட்டம் பெற்றால் அவர்களால், தொலைந்து போனவர்கள் இலகுவில் இரட்சிக்கப்படுவார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. இரட்சணியப் பணியாளன்

பிரான்சிய ஆன்மீகத்தினைப் பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்:

1. இறைவனின் மறையுண்மையை ஆராதித்தல். தந்தையை நிறைவாக வழிபடுபவரே இயேசுக் கிறிஸ்து.

2. இயேசுவினதும் மரியாவினதும் மனோபாங்கிற்கு வணக்கம் செலுத்துதல். மரியாவுக்குள் இயேசு வாழ்வதை உணருதல்.

மரியாவில் வாழும் இயேசுவே, உமது அடியானில் வந்து வாழ்ந்தருளும். உமது தூய்மையின் ஆவியில், உமது வல்லமையின் முழுமையில், உமது நற்பண்புகளின் யதார்த்தத்தில், உமது வழிகளின் நிறைவில், இறைத்தந்தையின் மகிமைக்காக தீமையின் வல்லமையை வென்றிட உமது ஆவியில் வந்தருளும்.

12ம் லூயிஸ் மன்னனும் அவரது தாய் புனித யோாண் இயுடெசும் விபச்சாரத்தை எதிர்த்துப் போராடியதோடு குருமாணவர்களின் எழுச்சிக்கும் வித்திட்டார்கள். ஆதரவற்றோருக்கு புதுவாழ்வு நல்கியதோடு புரட்சிகரமான வாழ்க்கைமுறைக்குப் புனித வின்சன் டீ போல் அழைப்பு விடுத்தார். புனித வின்சன் டீ போல் கூறினார்:

"திருச்சபையின் பிரதானமான பகைவர்கள் குருக்களேயாவர். அவர்களிடமிருந்து தப்பான கொள்கைகள் வெளிவந்துள்ளன. தீமை ஆட்சி செய்ய, அறியாமை ஏழைகள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது. ஒழுங்கற்ற வாழ்க்கைமுறை, தப்பான கொள்கை, தீமை, அறியாமை ஆகிய நான்கையும் எதிர்க்க மறுத்தலும் மண்ணக மக்களை நலிவிற்கே இட்டுச் செல்லும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுக் கிறிஸ்து தந்தையை முழுமையாக ஆராதிப்பவராக விளங்கினார். இறைவனுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர். வாழுகின்ற கிறிஸ்துவாகவே குரு திருச்சபையில் செயற்படுகின்றார். கொடை, பலிப்பொருள், விருந்து, தியாகம் போன்ற சொற்களே குருத்துவத்தோடு தொடர்புடையவை. தியாகம் என்ற பதத்தை ஆயர் இயூஜின் தனது வாழ்விலும் தான் ஸ்தாபித்த அமலமரித் தியாகிகள் துறவற சபையிலும் முதன்மைப்படுத்தினார்.

## இயூஜினின் ஆன்மீகம்

இயூஜினின் ஆன்மீக வாழ்வு பரந்தும் விரிந்தும் செழிப்புற்றும் காணப்பட்டது. ஏழைகளிற்கு அர்ப்பணமாதலே இயூஜினிற்குப் பிரதானமான அம்சமாகும். இறைவனை அறியாது பல மக்கள் காணப்பட்டது இயூஜினைக் கைவிடப்பட்டோர் சார்பாகத் தொண்டு புரியத் தூண்டு வித்தது. முழு உலகத்தின் இரட்சகராம் இயேசுக் கிறிஸ்துவை நிபந்தனையில்லாமல் பின்பற்ற இயூஜின் முனைந்தார்.

இயேசுக் கிறிஸ்து குரு என்பதைவிட இயேசுக் கிறிஸ்து இரட்சகர் என்பதையே இயூஜின் டீ மசனெட் வலியுறுத்தினார். எமது சிறப்பான அழைப்பு **மனிதத்துவத்தின் இரட்சணியத்தோடு** தொடர்புடையதாய் விளங்குகின்றது.

இயூஜின் டீ மசனெட் வெனிசில் குமரப் புருவத்தில் இக்னேசிய வழிமுறைப் பயிற்சியிலும் பலர்மோவில் பிந்திய குமரப் பருவத்தில் புனித அலோசியசின் படிமுறைகளிலும் பிரான்சில் மீண்டும் இக்னேசிய வழிமுறைப் பயிற்சியிலும் ஒழுங்காக வழிநடந்து தனது ஆன்மீகத்தைப் பலப்படுத்தினார்.

இயூஜின் டீ மசனெட் ஆழ்ந்த செபஉணர்வுடையவராய் இறைமனித உறவிலே நிறைவுபெற்று விளங்கினார். இயேசுக் கிறிஸ்துவோடு எவ்வளவு அன்புறவு கொண்டவர் என்பதை தனது பெரியவெள்ளி அனுபவம் மூலம் தெரியவைத்தார். அவரது தணியாத தாகம் இயேசுவோடு இணைந்திருந்து ஏழைகளுக்கு நச்செய்தி சொல்லவும் இறைத்தந்தையின் சித்தத்தை அவர்கள் நிறைவேற்றவும் உதவிபுரிவதாகும். புனித யோவான் நற்செய்தியில் இயேசு சொன்னதை இயூஜின் டீ மசனெட் வாழ்ந்துகாட்டி வரலாறு படைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவர் என்மீது அன்பு கொண்டுள்ளார். என்மீது அன்பு கொள்பவர்மீது தந்தையும் அன்பு கொள்வார். நானும் அவர்மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன்” (யோவான் *14:21*).

ஆர்வத்தோடு தம்மைத் தேடுவோருக்கு இயேசு தம்மை வெளிப்படுத்துவார். எம்மை அல்ல இயேசுவையே ஆதாரமாகக் கொள்வோம் எனின் புனித பவுல் கூறியவாறு இயேசு ஆவியின் கனிகளை எமக்குத் தாராளமாகத் தருவார்.

இதுவே இயூஜின் டீ மசனெட்டினது செபமாகும். இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றும் விசுவாசமுள்ள ஊழியனாகவும் இரட்சணியப் பயணியாகவும் தன்னை அடையாளம் கண்டார். காலையில் நீண்ட நேரம் அவர் செபத்திலும் தியானத்திலும் செலவிட்டதை அவரது குறிப்பேட்டிலிருந்து தெரிந்துகொள்ளலாம். கால் மணித்தியாலம் வழமையான செபங்களைச் சொல்வதிலும் முக்கால் மணித்தியாலம் தனித் தியானத்திலும் ஈடுபடுவார். மாலையில் அவர் குழுமத்தோடு சேர்ந்து திவ்விய நற்கருணை முன்னால் அரை மணித்தியாலம் செபிப்பார்.

ஆயர் ஆனபின் இரவு 11 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணி வரை பொதுவாக நற்கருணைநாதர் முன்னால் தனித்திருந்து செபிப்பார். அத்தோடு திருப்பலி, செபமாலை, அடிக்கடி திவ்விய நற்கருணை சந்திப்பு, தேவதாயாருக்கான பக்தி முயற்சிகள் இவரது செபவாழ்விற்குச் சான்றாக அமைந்தன. வழக்கமான வேலைப் பழுவின் மத்தியிலும் செபிப்பதற்கு நேரம் ஒதுக்கிச் செபவீரனாய் செயற்பட்டார்.

## அப்போஸ்தலிக்கத்திற்கும் தியானத்திற்கும் இடையே ஒத்திசைவு

குருத்துவத்தின் பின்னர் குருத்துவம் என்ன வடிவம் எடுக்க வேண்டும் என கிறிஸ்து விரும்புகிறார் என்பதைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டினார். ஆரம்ப காலத்தில் அப்போஸ்தலிக்கத்திற்கும் தியானத்திற்கும் இடையே நிலவவேண்டிய ஒத்திசைவு பற்றி அறியத் தேடலில் ஈடுபட்டார். இறைவனுடைய சித்தத்தோடு இணைந்திருப்பதையே சவாலாகக் கருதினார். அவர் காலம் போகப் போக இலகுவில் மாறும் தன்மை கொண்டவராய் சூழல் இயைபாக்கம் பெற்றுக் காணப்பட்டார். ஆண்டவரில் அவர் வளர்ந்தபொழுது இறைச் சித்தத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயபூர்வமாக இணைந்தார். 1815ல் அப்போஸ்தலிக்க பணியையும் தியானத்தையும் ஒருங்கிணைக்கும் நேர அட்டவணையைத் தயாரித்து நடைமுறைப்படுத்தினார். குழுமத்திற்கு அப்பாலுள்ளவர்களோடு எனது உறவு பின்வருமாறு:

- முதல்வருக்குரிய கடமைகளுக்கு உட்பட்டதாகவே அவ்வுறவுகள் இருக்க வேண்டும்.
- முதலில் எனது சகோதரர்களுக்கும் அடுத்து இளைஞர்களுக்கும் ஈற்றில் நான் எல்லோருக்கும் ஊழியனாக இருக்கவேண்டும்.
- பாசங்கீர்த்தனம் கேட்பதில் நான் சலிப்படையாதிருக்கவேண்டும். பெண்களுக்கு பாவசங்கீர்த்தனம் தேவையில்லையா? அவர்களுடைய நலனில் நான் அக்கறை எடுக்கக்கூடாதா?
- இளைஞர்களுக்குப் போதிய அளவு கவனம் செலுத்தாததால் அவர் களை வருத்தத்திற்கு உள்ளாக்குகிறேன்.
- திங்கட்கிழமைகளில் அப்போஸ்தலிக்க பணி
- செவ்வாய்க் கிழமைகளில் வீட்டுவேலை
- புதன்கிழமைகளில் பெண்களுக்கான பாவசங்கீர்த்தனம்
- வியாழக் கிழமைகளில் இளையோருக்கான பாவசங்கீர்த்தனம்
- வெள்ளிக் கிழமைகளில் கடிதத் தொடர்பு
- சனிக் கிழமை காலைகளில் பெண்களுக்கான பாவசங்கீர்த்தனம்
- சனிக் கிழமை மாலைகளில் இளையோருக்கான பாவசங்கீர்த்தனம்
- ஞாயிறு காலைகளில் பாவசங்கீர்த்தனம், ஆலயத்தில் ஆராதனை.

## ஆன்மீகப் பண்புகள்

### 1. இயேசுக் கிறிஸ்துவிற்கான ஆழ்ந்த அன்பு

புனித சிலுவை அருளப்பர் கூறுகின்றார்: "தூய்மையின் அளவீடு ஆளுமையின் அளவீடாகும்." புனித இயூஜின் டீ மசனெட் தூய்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாகக் கொண்டவராய் இயேசுக்கிறிஸ்துவுடன் ஆழ்ந்த அன்புச் செறிவுடன் வாழ்ந்தார். அருட்பணி ரெம்பியர் அடிகளாருக்கு இயூஜின் டீ மசனெட் *1817*, ஆவணி *22*ம் திகதி எழுதினார்:

"எமது முன்னுதாரணத்தாலும் வார்த்தைகளாலும் எமது செபங்களாலும் ஒருவர் ஒருவவருக்கு உதவி நல்கவும் எம்மைத் தூய்மைப்படுத்தவுமே நாம் இவ்வுலகில் உள்ளோம். மனுக்குலத்தை இரட்சிக்கும் பாரிய பணியினை இயேசு எம்மிடம் ஒப்படைத்துள்ளார். இந்தத் தனித்துவமான இலக்கு நோக்கியே எமது செயற்பாடுகள் அனைத்தும் திசை திருப்பப்படவேண்டும். இறைவனின் மகிமைக்காக, திருச்சபையின் சேவைக்காக, ஆன்மாக்களின் இரட்சிப்பிற்காக நாம் எம்மை முழுமையாக அர்ப்பணித்து வாழுதலே எமது சபையின் ஆவிக்குரிய செயற்பாடாகும்."

இயூஜின் தனது தியானக் குறிப்பேட்டில் *1831*ல் எழுதினார்:

"நான் முன்நோக்கிப் பயணிக்கும்பொழுது எனது தூய்மையான இலக்கு பற்றி மேலும் உற்சாகப்படுத்தப்படுகின்றேன். மீட்பராம் இயேசுக் கிறிஸ்துவையும் அவரது அடிச்சுவட்டில் நடந்த அப்போஸ்தலர்களையும் ஸ்தாபகராக எமது சபை கொண்டது."

### 2. ஆண்டவரின் ஆவி என் மேலே

"ஆண்டவரின் ஆவி என் மேலே" (லூக்கா *4:18*) என்ற வார்த்தைகள் புனித இயூஜின் டீ மசனெட்டின் இதயத்தில் பதியப்பட்டுக் காணப்பட்டன. இயேசுவின் வாழ்வைச் சுவைத்து இயூஜின் ஏழைகளின் அன்பை அனுபவித்தார்.

இயேசுவின் இலக்கில் பங்கீடுசெய்து இயூஜின் எங்கும் எல்லோருக்கும் நற்செய்தி சொல்லும் ஆற்றலைப் பெற்றார். இயூஜின் டீ மசனெட் தனது முழு வாழ்வு தனது பணியினதும் அமல மரித் தியாகிகளின் எதிர்கால, நிகழ்காலப் பணிகளதும் வற்றாத ஊற்றாக விளங்கவேண்டும் என்றே விரும்பினார்.

### 3. ஒவ்வொரு ஆன்மாவினதும் மதிப்பீட்டைக் காணல்

திருச்சபையின் அன்பு தொடர்பாக இயூஜின் டீ மசனெட் கொண்டிருந்த தாகத்தை உற்று நோக்குகையில் அவர் ஆன்மாக்களுக்கான இரட்சணியப் பயணத்தையே முதன்மைப்படுத்தினார். திருச்சபை பாதிப்படைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் இக் காலகட்டத்தில் திருச்சபைக்கான அன்புப் பணி இன்று அவசியமானது.

**4. திருச்சபைக்கான ஆழ்ந்த அன்பு**

இயூஜின் டீ மசனெட்டின் திருச்சபைக்கான ஆழ்ந்த அன்பு பற்றிய தகவல் அமலமரித் தியாகிகளின் ஒழுங்குநூலின் முன்னுரையில் தரப்பட்டுள்ளது. இரட்சகராம் இயேசுவிற்குத் தன்னை அர்ப்பணிப் பதன் மூலமாக இயூஜின் டீ மசனெட் தனது வாழ்வில் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

**5. திருச்சபைக்கான அன்பும் கிறிஸ்துவிற்கான அன்பும் பிரிக்க முடியாதவை**

இயேசுக் கிறிஸ்துவின் இரத்தத்தால் வெற்றிகொள்ளப்பட்ட பரிசாகத் திருச்சபை விளங்குகின்றது. அது எல்லோருக்குமான அளவிட முடியாத அன்பின் அடையாளமாகத் துலங்குகின்றது. திருச்சபையின் அங்கத்தவர்கள் எல்லோரும் கடவுளின் ஆன்மீக இல்லத்தில் குடியிருக்கிறார்கள். அவர்கள் வாழும் கற்களால் ஆக்கப்பட்ட ஆலயமாகத் திகழ்கின்றார்கள். மணவாளன் இயேசு தனது மணவாட்டியாகிய திருச்சபைக்குச் செல்வங்களை வாரி வழங்குகின்றார். கடவுள் தனது தெய்வீக சீமெந்தினால் இவ்வில்லத்தைக் கட்டி எழுப்புகின்றார். இறைவனுடைய இரக்கம், அன்பு, வல்லமை போன்றவை இவ்வில்லத்தில் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

**6. தெய்வீகத் தன்மையிலிருந்து உலகுசார் தன்மையைப் பிரித்தெடுத்தல்**

எரியும் அன்புச்சுவாலையுடன் இயூஜின் டீ மசனெட் திருச்சபையை எதிர்கொண்டாலும் அவர் தெய்வீகத் தன்மையிலிருந்து உலகுசார் தன்மையைப் பிரித்தெடுக்கத் தவறவில்லை. அவரது திருச்சபைக் கான அன்பு எப்பொழுதும் நிறைவாகவே இருந்தது. ஒருமுறை ஆயர் கியுபேர்ட் பத்திரிகைக்குக் கொடுத்த செய்தி திருப்தியில்லாததால் அவரை ஆயர் இயூஜின் டீ மசனெட் மென்மையாகக் கடிந்து கொண்டார். நல்லெண்ணத்தோடும் ஞானத்தோடும் திருச்சபைக்காக ஆயர் கியுபேர்ட் புரிந்துவரும் நன்மைத்தனங்களை ஆயர் இயூஜின் சாதுரியமாக நினைவூட்டினார்.

**7. திருச்சபை ஒரு தெய்வீக யதார்த்தம்**

இயூஜின் டீ மசனெட்டிற்கு திருச்சபை தெய்வீக யதார்த்தமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலங்குகின்றது. இறைமகன் கிறிஸ்து மூலமாக இறைவன் உலகிலுள்ள ஆண்களிடமும் பெண்களிடமும் வருகின்றார். அது திருச்சபையை ஒரு குடும்பமாக்குகின்றது, புனித இயூஜின் புதிய ஏற்பாட்டு உருவகங் களைப் பயன்படுத்தி திருச்சபையின் விசுவாசத்தை வெளிக்காட்டும் பொருத்தமான மொழியை உருவாக்கினார். அவ்வுருவங்கள் பின்வரு மாறு: மணவாட்டி, குடும்பம், மந்தை, மறைபொருள். இவ்வுருவங் களையே 100 ஆண்டுகளின் பின்னர் 2ம் வத்திக்கான் சங்கம் பயன் படுத்தியது. திருச்சபை எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகாண அவரது பெருந்தன்மையும் துணிச்சலும் துணைபுரிந்தது என்பதை இயூஜினது அன்பு வெளிக்காட்டியது. திருச்சபைக்கான இயுஜினது அன்பு தூய ஆவியினால் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் ஔடதமாகும். மிகவும் இக்கட்டான சூழலிலும் எரியும் பெருங்சுடராக விளங்குவது இயேசுவுடன் அன்போடும் நம்பிக்கையோடும் நடக்கும் கல்வாரிப் பயணமாகும். பாதர் ரெம்பியருக்கு இயூஜின் டீ மசனெட் 1815ம் ஆண்டு எழுதினார்:

"எனது அன்புக்குரிய நண்பரே,

இக்கடிதத்தை சிலுவையின் அடியில் வாசிக்கவும். சுயநலத்தின் குரலை முறியடியும். ஏழை மக்களின் சூழமைவைப் பற்றிக் கடுமையாகச் சிந்தி யும். எளிமையான கருவிகளைப் பயன்படுத்தும். உமது இதயத்தைக் கேட்டு எனது கடிதத்திற்குப் பதிலளியும். திருச்சபையின் நன்மைத் தனத்திற்காக நீர் ஆற்றும் சேவைகளை ஒருபோதும் மறுக்காதே."

**8. இறை மகிமையைக் காணல் - விடுதலைக்கான ஆதாரம்**

இயேசு ஒரு சுதந்திரமான ஆளாகவே இருக்கின்றார். "மனிதப் புகழ்ச் சியை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. தந்தையின் பெயரால் நான் வந்துள்ளேன்" (யோவான் 5:42, 43). இயேசுவின் வாழ்வில் இன்றிய மையாத உறவு தந்தையுடனேயே உள்ளது, வெளிப்படையாக இயேசு பேசுவதற்கு, மலைப்பொழிவுப் போதனைகளை வழங்குவதற்கு, பாவம் தொடர்பாக ஏழைகளைக் கூட கேள்வி கேட்பதற்கு, பிறரோடு உறவு கொள்வதற்கு, இறைவன் அவருக்குச் சுதந்திரம் அருளினார்.

**9. இறை மகிமையைக் காணல் - அமைதிக்கான ஆதாரம்**

தந்தையை மகிமைப்படுத்தும் ஆற்றலை இயேசு கொண்டிருந்தபடியால் இயேசு எப்பொழுதும் அமைதியாக இருந்தார். இயேசுவைப் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கர்களில் சிலர் வந்தபொழுது இயேசு தனது பாடுகள், மரணம் நெருங்கி விட்டதை முன்கூட்டியே அறிவித்தார்.

மேலும் இயேசு. "இப்போது என் உள்ளம் கலக்கமுற்று உள்ளது, நான் என்ன சொல்வேன்? தந்தையே இந்த நேரத்தில் என்னைக் காப்பாற்றும் என்பேனா? இல்லை. இதற்காகத்தானே இந்நேரம்வரை வாழ்ந்திருக்கிறேன். தந்தையே, உமது பெயரை மாட்சிப்படுத்தும்" என்றார் (யோவான் 12: 27-28).

இயேசு உண்மையாகவே மனிதனாய் இருந்ததால் வரவிருக்கும் வன்முறையான சாவு பற்றிய சிந்தனை அவரை உலுப்பியது. தந்தையிடம் வேண்டுதல் செய்தார். ஆறுதல் அடைந்தார். ஆற்றல் பெற்றார். வெற்றி பற்றிய எண்ணம் மேலோங்கிட அமைதியடைந்தார். "நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் பொழுது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்" (யோவான் 12:32) என்று இயேசு நம்பிக்கையுடன் உறுதிமொழி கூறினார்.

இயூஜின் டீ மசனெட் பல இன்னல்கள், நெருக்கடிகள் மத்தியில் இறைவனை மகிமைப்படுத்தியதன் பயனாக அமைதியடைந்தார். அவர் தனது சுற்றுமடலில் குறிப்பிடுகின்றார்:

"இறைவன் மகிமைப்படுத்தப்படும்பொழுது நான் கேவலப்படுத்தப் பட்டால் என்ன? எல்லோராலும் நான் கைவிடப்பட்டால் என்ன? மனித கண்களின் பார்வையில் நான் சிறிதாகவே இருக்கட்டும்."

**10. இறை மகிமையைக் காணல் - சுயமறுப்பு**

இயேசு எப்பொழுதும் எமது மாதிரியாக விளங்குகின்றார். அவர் அறைகூவல் விடுக்கின்றார்:

"மகன் தாமாக எதையும் செய்ய இயலாது. தந்தையிடம் தாம் காணும் செயல்களையே செய்ய இயலும். தந்தை செய்பவற்றை மகனும் அவ்வாறே செய்கின்றார்" (யோவான் 5:19).

'எளிய மனத்தோர் பேறுபெற்றோர்' என்று மொழிவதற்கு முன்னால் நீண்ட காலமாக அவர் தன்னில் வாழ்ந்துகாட்டினார். அவர் எளிய மனத்தவராய் இருந்தபடியால் இறைச் சித்தத்தையே தனது வாழ்வாக்கி, தற்சார்பற்றவராய் எல்லோரையும் தன்பால் ஈர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயூஜின் டீ மசனெட்டும் இரட்சகர் இயேசுவின் நிபந்தனையில்லா அன்பினால் நிரப்பியவராய், இறைவனை மகிமைப்படுத்திய வண்ணம் தன்னை மறுத்துச் செயற்பட்டார். அன்பின் அடிப்படையில் சுய மறுப்புடன் அவர் நாள்தோறும் சிலுவையைச் சுமந்தார். அனைத்து அமலமரித் தியாகிகளும் அதே அழைப்பிற்கு உன்னிப்பாகச் செவி மடுக்கவேண்டும் என்று விரும்பினார். அவர்கள் தம்மையே மறந்து இறைவனுடைய மகிமைக்காகவும் ஏழைகளின் ஈடேற்றத்திற்காகவும் அயராது உழைக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

### 11. இறை மகிமையைக் காணல் - மீட்புப் பணி ஆர்வத்திற்கான ஆதாரம்

இறைவனை மகிமைப்படுத்தல் என்பது எல்லா மனிதரையும் பாரபட்ச மின்றி அன்புசெய்தலாகும். "என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவருடைய விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கிவந்தேன். அவர் என்னிடம் ஒப்படைக் கும் எவரையும் நான் அழியவிடாமல் இறுதிநாளில் அனைரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும்" *(யோவான் 6: 38-39)*.

இறைவனின் விருப்பத்தை நிறைவேற்ற முயல்பவர் அவரது நிறைவான அன்பையே கண்டுபிடித்து நடைமுறைப்படுத்த முயற்சிப்பார். "எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார்" *(1 திமொத்தேயு 2:4)* என்ற தீவிரமான ஆசையில் சீடர் பங்கெடுப்பார்.

இயேசுவை புனித இயூஜின் டீ மசனெட் அன்பு செய்தபடியால் அவர் எப்பொழுதும் இறைவனுடைய மகிமையையும் ஆன்மாக்களின் இரட் சிப்பையும் இணைப்பதிலேயே இன்பம் கண்டார். 1858ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16ம் திகதி ஆயர் இயூஜின் இலங்கை அமலமரித் தியாகிகளுக்கு எழுதிய கடிதத்தில் இந்த இணைப்பை வெளிப்படுத்தி, அவர்களது பணி ஆர்வத்தைப் பாராட்டி, இறைவனை மகிமைப்படுத்த வும் ஏழை ஆன்மாக்களின் இரட்சிப்பிற்காக உழைக்கவும் தொடரு மாறு வலியுறுத்தினார். மேலும், இயூஜின் "நீங்கள் இல்லை என்றால் அந்த ஏழைகள் இரட்சிக்கப்பட மாட்டார்கள்" என்று கூறிப் பணியா ளரை ஊக்கப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12. ஏழையருக்கான மீட்புப் பணி**

ஏழைகளுக்காகவும் மிகவும் கைவிடப்பட்டவர்களுக்காகவும் ஆயர் இயூஜினது தேர்வு அவரது ஆன்மீகத்தையே புலப்படுத்துகின்றது. இது கடவுளின் மகிமையை, திருச்சபையின் நன்மைத்தனத்தை, ஆன்மாக் களின் இரட்சிப்பைத் தொடர்புபடுத்தும் இயூஜினின் ஆசையைத் தெளிவுபடுத்துகின்றது. தனது குருத்துவத்தின் ஆரம்பத்திலேயே அவரது தேர்வு இதனை உறுதிப்படுத்துகின்றது. குருத்துவத்தின் பின்னர் எக்ஸ் என் புறொவான்சிற்குத் திரும்பியபொழுது தனது மறை மாவட்ட ஆயருக்குக் கூறிய வார்த்தைகள்: "எனது வாழ்வின் இலட்சியம் ஏழை களுக்கும் சிறுவர்களுக்கும் பணியாற்ற என்னை அர்ப்பணிப்பதாகும். சிறைக் கைதிகளுக்காகப் பணியாற்றுவதே எனது முதற் போராட்டமா கும்." ஏழையருக்கான மீட்புப் பணி அமலமரித் தியாகிகள் சபையின் இதயத்தைத் தொடுவதாக அமைகின்றது.

**13. குழுமத்தில்**

ஒஸ்றிய யுத்த கைதிகளுக்கான பணியினைத் தனித்து முன்னெடுப்பது இலகுவானதல்ல என்பதை இயூஜின் உணர்ந்தார். ஆர்வமுள்ள, ஒத்து ணர்வுள்ள துணைப் பணியாளர்களின் தேவையைப் புரிந்தவராய் அவர் களைக் குழும வாழ்விற்கு ஆயத்தப்படுத்தினார். கடவுளின் மகிமையை, திருச்சபையின் நன்மைத்தனத்தை, ஆன்மாக்களின் இரட்சிப்பை இலக்கா கக் கொண்டு அவர்களைப் பயிற்றுவித்தார்.

**14. திருத்தூதர்களைப் பின்பற்றல் - வாக்குறுதிகள்**

இயேசுக் கிறிஸ்துவையும் திருத்தூதர்களையும் மாதிரியாகக் கொண்டே இயூஜின் அமல மரித் தியாகிகள் சபையை ஸ்தாபித்தார். "இயேசுவே எமது ஸ்தாபகர். திருத்தூதர்கள் எமது முன்னோடிகள். திருத்தந்தை சிங்கராயர் மூலமாக திருத்தூதர் பேதுரு இதை மொழிகின்றார். எனவே, எமது மேலான இந்த அழைப்பிற்குப் பிரமாணிக்கமாக ஒழுகுவோம்" என்று இயூஜின் இயம்பினார்.

1951ம் ஆண்டு அமல மரித் தியாகிகள் சபையின் உயர் தலைவர் அருட்பணி லியோ டெசாவெலெற் எழுதினார்:

"பாதர் இயூஜின் டீ மசனெட்டின் மாதிரியில் பணியாளனாக உருவாக் கப்படுவது புனித பவுலின் வார்த்தைகளை எதிரொலிப்பதாகும். 'நற் செய்தியை நான் அறிவிக்காவிட்டால் எனக்கு ஐயோ கேடு! ஆன்மாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்காக என்னை முழுமையாக அர்ப்பணிக்கிறேன்.' ஒன்று மட்டும் நிச்சயம், அரைகுறை மனதோடு நற்பணியாளனாக இயங்க இயலாது. வார்த்தையினாலும் முன்மாதிரியாலும் வரும் வலுவினால் அவர்கள் தங்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள்."

### 15. எசமானுடன் பயணிக்க அழைக்கப்படல்

இயேசு தனது அப்போஸ்தலர்களை நடைமுறை உதாரணங்கள் மூல மாகவும் நேரடியாகக் கற்பித்தல் மூலமாகவும் பயிற்றுவித்தார். எனி னும் ஒத்தமை நற்செய்தியாளர்கள் இயேசுவோடு பயணித்தலையே இயேசுவின் அழைப்பை ஏற்ற சீடர்களின் மாதிரியாக முன்வைத்தார்கள். "இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்தபொழுது" (மத்தேயு 4:18) பேதுருவையும் அந்திரேயாவையும் தனது சீடராகப் பயணிக்க அழைத் தார். பலஸ்தீனத் தூசு நிறைந்த பாதைகளில் அவர்களை நடப்பித்தார். அப்போஸ்தலரின் வாழ்வு என்பது கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகும். இயேசுவின் பாதச் சுவடுகளில் பயணிப்பது என்பதைப் பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்: "தம் சிலுவையைச் சுமத்தல்" (மத்தேயு 10:38), "தன்னலம் துறத்தல்" (மாற்கு 8:34), "உள்ள எல்லாவற்றையும் விற்று விடுதல்" (லூக்கா 18:22).

### 16. ஆண்டவருக்கு அர்ப்பணமாதல்

ஏழையருக்கு நற்செய்தி அறிவிப்பதற்காகவும் ஆன்மாக்களின் மனமாற் றத்திற்காகவும் அனுப்பப்படுதலே அமலமரித் தியாகிகளுக்கான அழைப் பாகும். விபரிக்கமுடியா மகிழ்வுடன் நாம் வாக்குறுதிகளை மேற்கொள் கின்றோம். இறைவனது திருச்சித்தத்திற்கு எம்மைக் கையளிக்கின்றோம். எமது முழு வாழ்வையும் இறைவனுக்கே அர்ப்பணமாக்குகின்றோம்.

### 17. குருத்துவத்தினூடாக தன்னை முழுமையாகக் கையளித்தல்

இயேசுவைப் போல, இயேசுவுடன் இறைத் தந்தையை முழுமையாக ஆராதிப்பவராக இயூஜின் டீ மசனெட் வாழ்ந்து காட்டினார். புனித இக்னேசியஸின் செபத்தோடு சேர்த்து தனது செபத்தை புனித இயூஜின் தருகின்றார்: "எனது முழு விருப்பத்தையும் எனது நினைவுகளையும் எனது புரிந்துணர்வையும் எனக்குரிய எல்லாவற்றையும் உமது கரங்க ளில், ஆண்டவரே, ஒப்படைக்கின்றேன். உமது அன்பையும் அருளை யும் எனக்குத் தந்தருளும். அது ஒன்றே போதும். நான் மேலதிகமாக எதையும் கேட்கவில்லை."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை முழுவதும் இயூஜின் தனது குருத்துவ நினைவுநாளை பெரு நாளாக ஏற்று இறைவனுக்கு நன்றி கூறலானார்.

### 18. அமலமரித் தியாகிகள்

அமலமரித் தியாகிகள் அருட்சகோதரர்கள் உட்பட அனைவரும் எதுவித பாரபட்சமுமின்றி இயேசுக் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கெடுக்கின்றார்கள்.

### 19. குருக்களும் அருட்சகோதரர்களும்

குருக்கள் இயேசுவின் பணிக் குருத்துவத்தில் பங்கெடுக்கின்றார்கள். அருட்சகோதரர்கள் இயேசுவின் பொதுக்குருத்துவத்தில் பங்கெடுக்கின் றார்கள். அனைவரும் சபையின் ஒழுங்குகள், நியதிகளைக் கடைப் பிடிப்பதன் மூலமாக தம்மைத் தூய்மைப்படுத்துவதோடு ஆன்மாக்க ளின் இரட்சிப்பிற்காக அயராது உழைக்கின்றார்கள்.

### 20. அன்னை மரியாவுடன்

ஆயர் இயூஜின் டீ மசனெட் குழந்தைப் பருவம் முதல் முதுமைவரை மாசற்ற அன்னை மரியாவிற்கு சிறந்த பக்தி வணக்கம் செலுத்திவந்தார். இளங்குரவராக இருந்தபொழுது நான்கு மாதங்கள் கடும் வருத்தத்திற்கு உள்ளாகியிருந்தார். அப்பொழுது இளைஞர் பக்திச் சபையினர் மாதா பெயரில் விசேட வணக்கம் செய்து இயூஜினிற்குக் குணப்படுத்தலை பெற்றுக் கொடுத்தார்கள். இயூஜின் டீ மசனெட் தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் மரியன்னையைச் சிலுவையின் அடியில் இரட்ச ணியத்தோடு நெருங்கிய உறவுகொண்ட நிலையில் கண்டார்.

## அருட்பணி மைக்கல் றொட்றிக்கோவின் அர்ப்பணம்

உரோமையில் கல்வி கற்ற அதி நுண்ணறிவுடைய மாணவன் 1953ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அவர் இலங்கை திரும்பியதும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அம்பிட்டி தேசிய குருமடத்தில் விரிவுரை யாளராக நியமிக்கப்பட்டார். அவர் தேசியரீதியாகக் குருக்களை உரு வாக்குவதில் பிரபல்யம் பெற்றார்.

2ம் வத்திக்கான் சங்கம் மைக்கின் இதயத்தில் சுவாலையை மூட்டி யது. ஏழையருக்கான சிறப்புப் பணி இவரது வாழ்வில் முன்னுரிமை பெற்றது. இவர் பல பங்குகளைத் தரிசித்து பொதுநிலையினருக்குப் பயிற்சி அளித்து அவர்களைத் திருவழிபாட்டில் பங்கெடுக்கச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுளை மறைமாவட்டத்திலுள்ள பாமர விவசாயிகளுக்கும் கரும்பு பயிரிடுபவர்களுக்கும் பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள் வைத்து அவர்களைச் சமூக மேம்பாட்டிற்கு இட்டுச் சென்றார். இரு கன்னி யாஸ்தரிகளுடனும் சில பொதுநிலையினருடனும் இடைவிலகல் மாணவர்களுக்கு கல்வி புகட்டினார். பௌத்த ஏழை விவசாயிகளுக்கு திரு யாத்திரைகளை ஒழுங்குபடுத்தினார். பதின்நான்கு நடமாடும் தாதிப் பெண்களுக்கு பயிற்சி அளித்து சமூக சேவைகளுக்கு வித்திட்டார். தாய்மார் ஒன்றியத்தை உருவாக்கினார். இயற்கை கூட்டுப் பசளை தயாரிப்பை ஊக்குவித்தார். இஸ்லாமிய கிறிஸ்தவ உரையாடலைத் தோற்றுவித்தார். கட்டுரைகள் எழுதி வெளியிட்டு உலக பார்வையைத் தன்பக்கம் ஈர்த்தார்.

அநீதத்தை எதிர்த்த இவரது தனித்துவமான போராட்டம் புதிய வடிவம் எடுத்தது. ஏழைகளை வலுப்படுத்தியதன் விளைவாக எதிரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 1987ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி எதிரியினால் திறக்கப்பட்ட யன்னலின் ஊடாக கைத் துப்பாக்கியினால் சுடப்பட்டு மைக்கல் தனது 60 வயதில் சிற்றாலத்தில் கொல்லப்பட்டார். திருப்பலியின் இறுதிக்கட்டத்தில் குரவர் நற் கருணையையும் இயேசுவின் திரு இரத்தத்தையும் உட்கொண்டபின் கதிரையில் உட்கார்ந்து இறைவனுக்கு நன்றிசொல்லிக் கொண்டிருந்த வேளையில் இவரது இரத்தத் துளிகள் பூசைப்பாத்திரத்தில் இடம் பிடித்தன. இவரது வெற்று உடல் கொழும்பிற்குக் கொண்டுசெல்லப் பட்டு அமலமரித் தியாகிகளுக்கான சேமக்காலையில் புதைக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள் இவரது இறுதி யாத்திரையில் பங்கெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் இயூஜின் டீ மசனெட்டின் அர்ப்பணக் கனவு இங்கு நனவாகி யது. பாதர் மைக்கலால் பொறிக்கப்பட்ட வார்த்தைகள்:

**ஆண்டவராகிய இயேசுவே, உமது பணிக்காக எனது இரு கரங்களைக் கொடுக்கிறேன்.**

**உமது வழியில் நடப்பதற்காக எனது கால்களைக் கொடுக்கிறேன்.**

**எனது கண்களை உமக்குக் கொடுக்கிறேன் நீர் செய்வதை நான் பார்ப்பதற்காக.**

**எனது வாயினை உமக்குக் கொடுக்கிறேன் உமது வார்த்தைகளைப் பேசுவதற்காக.**

**எனது ஆன்மாவை உம்மிடம் கொடுக்கிறேன் என்னில் நீர் செபிப் பதற்காக.**

**எல்லாவற்றிற்கும் மேலாக என் இதயத்தை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறேன். விளைவாக என்மூலம் உம் தந்தையையும் மனுக்குலம் முழுவதையும் நீர் அன்பு செய்தற்காக.**

**என்னில் நீர் வளருவதற்காக என்னை முழுவதும் உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறேன். விளைவாக ஆண்டவராகிய இயேசுவே, நீர் என்னில் வாழவும், நீர் என்னில் செயற்படவும் நீர் என்னில் செபிக்கவும் செய்தருள்வீராக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. அமலமரித்தியாகி

### அமல உற்பவம்

இயூஜின் டீ மசனெட்டின் வாரிசுகள் அமலமரித்தியாகிகள் ஆவர். அமல உற்பவ அன்னையை இவர்கள் தம் பாதுகாவலியாக ஏற்று வணக்கம் செலுத்துகிறார்கள். இரட்சகராம் இயேசுக் கிறிஸ்துவைப் பெற்றெடுப்பதற்காக, இறைவனால் விசேட சலுகை பெற்று, மரியா சென்ம பாவமின்றி உற்பவித்தார்.

1854ம் ஆண்டு மார்கழி மாதம் 8ம் திகதி உரோமைக்கு இயூஜின் டீ மசனெட் சென்று வைபவரீதியான அமல உற்பவப் பிரகடனத்தில் பங்கெடுத்தார். இறைவனின் தாயும் எம் எல்லோரதும் அன்பு அன்னையுமான மரியா மாசில்லாமல் உற்பவித்ததை மறுக்கக் கூடாத கொள்கையாகத் திருச்சபை பிரகடனப்படுத்தியது வரவேற்கத்தக்கது. அமல உற்பவ அன்னையின் மகத்துவத்தை இவ்வாறு பிரகடனப்படுத் தியது மரியா மீது விசுவாசம், இறை பக்தி, இதய அன்பு, திருச்சபைக் கான எல்லையில்லாப் பக்தி போன்றவற்றை உறுதிப்படுத்துவதாகும்.

### இக்கொள்கையின் வரலாற்றுப் பின்னணி

மறுக்கப்படாத கொள்கையாக மரியா மாசில்லாமல் உற்பவித்ததைத் திருச்சபை பிரகடனப்படுத்தியது அமலமரித் தியாகிகளின் ஸ்தாபகருக்கு மிகவும் முக்கியமானது.

"உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்திற்கும் அவள் வித்திற்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்" (தொடக்கநூல் 3:15), "அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" (லூக்கா 1:28), "பெண்களுக்குள் நீர் ஆசிபெற்றவர்: உமது வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே!" (லூக்கா 1:42) போன்ற இறைவார்த்தை கள் மரியாவின் மகத்துவத்தை வெளிக்காட்டி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 4ம் நூற்றாண்டிலிருந்தே மரியா பற்றிய பதிவு வரலாற்றில் இடம் பெற்றது. "உண்மையாகவே நீரும் உமது தாயாரும் எல்லா வகையிலும் பெறுமதிவாய்ந்தவர்கள். ஏனெனில், என் ஆண்டவரே நீர் தூய்மையானவர், உமது அன்னையும் மாசற்றவர்" என்று புனித எபிரெம் மொழிகின்றார்.

"சாராவிடமல்ல மரியாவிடம் என்னைத் தத்தெடுத்தருளும். ஏனெனில் மரியா மாசற்றவர், எல்லாப் பாவங்களிருந்தும் அருளினால் விடுவிக்கப் பட்டுள்ளார்" என்று புனித அம்புறோஸ் மொழிகின்றார். புனித மக்சிமஸ் 'நித்திய அருள்' பற்றி எடுத்தியம்பி கிறிஸ்துவின் பொருத் தமான இருப்பிடமாக மரியா இருப்பதனை வர்ணிக்கின்றார். லெவியஸ் தெயொரெக்னஸ் மரியாவைத் தூய்மையானவராகவும் மாசற்ற வராகவும் ஏற்றுக் கொள்கின்றார். கீழைத் தேசத் திருச்சபையில் அமல உற்பவத்திருநாளும் மரியன்னையின் பிறப்புவிழாவும் கி.பி. 5ம் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடப்பட்டு வருகின்றது. கி.பி. 7ம் நூற்றாண்டில் அமல உற்பவ விழா மேற்கத்தேய திருச்சபையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இங்கிலாந்தில் 1050லும் தொடர்ந்து பிரான்ஸ், யெர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் அமல உற்பவ விழா ஆரம்பமானது.

மத்திய காலப் பகுதியில் மரியாவின் அமல உற்பவம் தொடர்பாகப் பிரச்சனைகள் எழுந்தன. புனித அன்செலம் மரியாவின் தூய்மையை வலியுறுத்தினார். எனினும் அவர் மரியாவின் அமல உற்பவக் கோட் பாட்டை மறுத்தார். புனித அல்பேர்ட்டும் புனித தோமாஸ் அக்வைனஸ் ஆகியோரும் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. திரிதெந் தின் பொதுச்சங்கம் இக்கோட்பாட்டை ஏற்று உறுதிப்படுத்தியது.

திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1854ம் ஆண்டு மார்கழி மாதம் மரியா வின் அமல உற்பவக் கோட்பாட்டிற்கு மீள்வடிவம் கொடுத்தார்:

"கத்தோலிக்க விசுவாசத்தையும் கத்தோலிக்க திருச்சபையையும் பேணிக் காக்கும் நோக்கோடு, பரிசுத்த ஆவியானவரின் ஊக்க சக்தியினால், எமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவினால், புனித பேதுரு, பாவிலு அப்போஸ்தலர்களால், எமது பரிபாலக திருப்பீடத்தினால் இறைவனின் கன்னித் தாயாரின் மகிமைமையையும் வணக்கத்தையும் அங்கீகரிக்கின்றோம். மனுக்குல மீட்பராம் இயேசுக் கிறிஸ்துவைப் பெற்றெடுப்பதற்காக மரியா சென்ம பாவமின்றி இறையருளால் தேர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெடுக்கப்பட்டார் என்ற கோட்பாட்டை எல்லா விசுவாசிகளும் நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளுமாறு இத்தால் வரையறை செய்து உறுதிப்படுத்துகின்றோம்."

## இளைஞர் ஒன்றியத்தில் கன்னிகையும் தாயுமான மரியா

எக்ஸ் என்புறொவான்சில் கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியத்தில் கன்னிகையும் தாயுமான மரியா சிறப்பிடம் பெறுகின்றார். இயூஜின் டீ மசனெட் கிறிஸ்தவ இளைஞர் ஒன்றியத்தை ஸ்தாபித்தபொழுது பாதுகாவலியாம் அமல உற்பவ அன்னைக்கு பாடல் பாடப்பட்டது.

இயூஜின் டீ மசனெட் 1814ம் ஆண்டு தனது தியானக் குறிப்பேட்டில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"எனது பாதுகாவலர்கள் காவல்தூதர், கன்னி மரியா முன்னிலையில் என்னைத் திருப்பீடத்தில் அர்ப்பணிக்கிறேன். சாபத்தின் மத்தியிலும் நான் செய்யும் காரியங்கள் எனது ஆன்மாவிலும் முழுத் திருச்சபையிலும் நல்விளைச்சலை ஏற்படுத்த எம் மீட்பராம் இயேசுக் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுத் தந்தருள வேண்டுகின்றேன்."

இச் செபம் எக்ஸ் என் புறொவான்சில் சாகும் நிலையிலுள்ள ஒஸ்ரிய நாட்டு சிறைக் கைதிகளுக்கு ஓராண்டு சேவை செய்தபின்னர் எழுதப்பட்டது. இயூஜினின் நற்சுகத்திற்காக அன்னை மரியா மூலம் இறை வேண்டல் செய்த இளைஞர் ஒன்றியத்தோடு இணைந்து மெடிலின் அருள்மரி மாதா ஆலயத்தில் இயூஜின் நன்றிப் பலி ஒப்புக் கொடுத்தார்.

இயூஜின் தனது தியானக் குறிப்பேட்டில் 1818ல் எழுதினார்:

**"கன்னி மாதாவே, எனது நல்ல தாயாரே, நான் உம்மை அடிக்கடி கூப்பிடுவதால் எனது குறைபாடுகள் குறைகின்றன. எனது தாயாரே, எனக்கு உதவி செய்தருளும். உமது மகன் எனக்குக் கொடுக்கின்ற சுமைகளை நல்மனத்தோடு தாங்கிக் கொள்ள எனக்காக மன்றாடும். நான் நன்மைத் தனத்தில் தேய்வடையும் பொழுது, மீண்டும் புதுத் தென்புடன் விண்நோக்கிப் பயணிக்க எனக்காக மன்றாடியருளும்."**

பலவிதமான சிலுவைகள் சுமத்தப்பட்ட வேளைகளில் எல்லாம் இயுஜின் அன்னை மரியாவையே துணைக்கு அழைப்பார். மரியன்னையின் பரிந்துரைகளால் பாதுகாக்கப்படவே பெரிதும் விரும்பினார். பங்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகளில் மட்டும் கவனம் செலுத்தும் பங்குத்தந்தையர்களிடமிருந்து விலகலாகநின்று இளையோர் நலம், மகாஞானவொடுக்கம் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்துவாழும் சிறுகுழுவினரான அமல மரித் தியாகிகள் சபையினரை வலுவூட்டுவதில் இயூஜின் அல்லும் பகலும் விழிப்பாயிருந்தார்.

விசுவாசிகள், குறிப்பாக இளையோர்கள் பெருந்தொகையாக எக்ஸ் என்புறொவான்சில் இடம்பெற்ற மாகா ஞானவொடுக்கத்தில் ஒன்று கூடியது மறைமாவட்டக் குருக்களுக்குப் பொறாமையைத் தூண்டு வித்தது. எனினும் இந்த இக்கட்டான சந்தர்ப்பங்களில் மரியன்னை மீது கொண்டுள்ள பக்தி வணக்கம் அதிகரித்தது. புனித அல்போன்ஸ் லிகோரி தனது துன்ப, துயர வேளைகளில் மரியன்னையிடம் சரண ரடைந்து, 'நல்லதாய்' என வேண்டுதல் செய்ததுபோல இயூஜின் அமல மரித்தியாகிகளை மரியன்னை மூலம் வேண்டுதல் செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

## ஆவணி, 15, 1822

ஆவணி 15, 1822 என்ற இந்நாள் இயூஜின் டீ மசனெட்டின் வாழ்க்கை யில் மறக்கமுடியாத நாளாகும். அன்று அவர் மரியாவின் அமல உற்பவம் தொடர்பாக தனது ஆன்மீக வாழ்விற்கான, நல்மனோபாங்கிற் கான தூண்டுதலைப் பெற்றார். அன்று எக்ஸ் என் புறொவான்சில் உள்ள அமல உற்பவ அன்னையின் சுருபத்தின் முன்னால் (தற்போது சுருபம் உரோமையிலுள்ள அமலமரித் தியாகிகளின் உயர் தலைவருக்கான இல்லத்தில்) தனக்காகவும் தான் உருவாக்கிய சபையின் எதிர்காலத் திற்காகவும் வேண்டுதல் செய்தார். இயூஜின் டீ மசனெட் அருட்பணி ரெம்பியர் அடிகளாருக்கு கடிதம் எழுதினார்:

"இந்தக் கொண்டாட்டம் நிறைவுபெற்றுவிட்டது அன்புக்குரிய எனது மேலான சகோதரரே! வீட்டில் அமைதி ஆட்சி செய்கின்றது. நீண்ட சுற்றுப் பிரகாரத்தின் எதிரொலிகளும் மணி ஓசைகளும் ஓய்ந்து விட்டன. உண்மையான பாராட்டு மாலைகளையும் நன்றி வாழ்த்துக் களையும் ஆலயத்தில் அன்னையின் பாதத்தில் ஒருங்கே சமர்ப்பித்து விட்டு ஆறுதலடைகின்றோம். கோலாகலமான சுற்றுப் பிரகாரத்தில் மக்களைப் பங்கெடுக்க வைத்ததன் மூலம் மரியன்னைக்கான பக்தி வணக்கத்தை வலுப்படுத்தியுள்ளோம். அமைதியின் அரசியாம் அன்னை மரியாவிற்குச் சொரியும் பக்திப் பரவசத்தை வெளிக்காட்டும் இந்நாளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரின்பத்தை என் இதயத்திலிருந்து தருகின்றேன். இரட்சணியக் காரியங்கள் அனைத்தையும் எனது சபையின் ஊடாக ஒருமுகப்படுத்து கின்றேன். எனது சபையின் பெறுமதியை உணர்ந்து பெருமிதம் அடைகின்றேன்." அன்னை மரியா ஏழைகளுக்காகவும் சபை அங்கத் தவர்களின் இரட்சணியத்திற்காகவும் பணியாற்றும்படி இயூஜினைத் தூண்டுவித்தார். மரியாவைக் கன்னியாகவும் அன்னையாகவும் இணைத்து இயுஜின் காட்சி கண்டார். அன்னை மரியா இயூஜினைப் பார்த்துப் புன்னகைத்ததாகப் பாரம்பரியம் கூறுகின்றது, புனித சின்னத் திரேசாவின் மாதா அனுபவத்தை ஒத்ததாக இயூஜினின் அனுபவம் இருந்தது. புனித திரேசா வருத்தத்தில் ஆழ்ந்து துன்புற்றபொழுது கூறிய அற்புதமான வார்த்தைகளை நினைவிற் கொள்வோம்:

"திடீரென பரிசுத்த கன்னி மரியா மிகவும் அழகாக எனக்குத் தோன்றி னார். அப்படியான தோற்றப்பாட்டை நான் எவரிலும் ஒருபோதும் கண்டதில்லை. பரிசுத்த கன்னிகையின் புன்னகை என் ஆன்மாவின் ஆழத்தைத் தொட்டது." திருத்தந்தை 12ம் லியோவிற்கு இயூஜின் 1825ம் ஆண்டு மார்கழி மாதம் 8ம் திகதி சபையை அங்கீகரிக்கும்படி கடிதம் எழுதினார். மார்கழி 20ம் திகதி திருத்தந்தையை நேரில் சந்தித் தார். விளைவாக, திருத்தந்தை 12ம் லியோ 1826ம் ஆண்டு மாசி மாதம் 17ம் திகதி 'அமல மரித்தியாகிகள் சபை' எனப் பெயரிட்டு சபை அங்கீகாரத்தை வழங்கினார்.

## மரியாவின் மகத்துவம்

அன்னை மரியா சிலுவை அடியில் நின்றது இயூஜினிற்குப் பிரதான மான செய்தியாகும். "சிலுவையின் அடியில் இயேசுவின் தாயும் தாயின் சகோதரியும் கிளையோபாவின் மனைவியுமான மரியாவும் மகதலா மரியாவும் நின்றுகொண்டிருந்தனர்.

இயேசு தம் தாயையும் தம் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், 'அம்மா இதோ உம் மகன்' என்றார். பின்னர் தம் சீடரிடம், 'இவரே உம் தாய்' என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" (யோவான் 19:25-27).

அமலமரித் தியாகிகளின் ஒழுங்கு நூலில், "அனைத்து அமலமரித் தியாகிகளும் தமது தாயாக எப்போதும் மரியாவைக் கண்டு, தனிப் பட்ட அன்பு வணக்கம் செலுத்த வேண்டும்" என்று கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயூஜினிற்கு மரியா விசுவாசத்தின் மாதிரியாகவும் இரட்சணியத்தின் இணைப்பாளராகவும் விளங்குகின்றார். இயூஜின் டீ மசனெட் அன்னை மரியாவின் அழகை வியத்தலை இரட்சணியத்தின் அதிசயமாம் இயேசுக் கிறிஸ்துவைப் போற்றுவதற்குச் சமப்படுத்துகின்றார். இறைவனுக்கு ஆராதனையும் புனிதர்களுக்கு வணக்கமும் அன்னை மரியாவிற்கு உயர்வணக்கமும் வழங்க வேண்டும் என 2ம் வத்திக்கான் சங்கம் கற்பிக்கின்றது.

அன்னை மரியா விசுவாசத்தின் மாதிரியாய் இருந்துகொண்டு, மலடி எனப் பெயர் பெற்ற எலிசபேத் கருத்தரித்திருக்கும்பொழுது அவரைத் தரிசித்து உதவிக்கரம் நீட்டினார். ஏழை இடையர்கள் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்கள். சிமியோன் இயேசுவின் தாயாகிய மரியாவை நோக்கி, "இதோ இக் குழந்தை இஸ்ராயேல் மக்கள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும். எதிர்க் கப்படும் அடையாளமாகவும் இருக்கும். உனது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக்கா 2:33-35) என்றார்.

கானாவூர்த் திருமணத்தின்பொழுது, இயேசுவின் தாய் மரியா, "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவான் 2:5) என்று சொல்லி கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ள சீடர்களுக்கு அழைப்பு விடுத்தார். இன்று மரியா இரட்சணியப் பாதையில் இணைவதற்கு ஏழைகளின் விசுவாசம் எவ்வளவு வலிதுள்ளது என்பதை அமலமரித் தியாகிகளுக்கு தெரியவைக்கின்றார். அப்போஸ்தலர்கள் அனைவரும் சில பெண்களோடும் இயேசுவின் சகோதரர்களோடும் அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள் (திருத்தூதர் பணிகள் 1:14).

புனித இயூஜின் டீ மசனெட் வாழ்க்கை முழுவதும் அமல உற்பவ அன்னைக்குச் சிறந்த பக்தி வணக்கம் செய்து வந்தார். உயிலில் அவர் எழுதிய வார்த்தைகள்: "மிகவும் தூய்மையான, மாசற்ற கன்னி மரியாவும் இறைவனின் தாயுமானவருக்கு வணக்கம் செலுத்தி, எனது முழு வாழ்விற்கான பிள்ளைக்குரிய பக்தியையும் புனித மரியாவை பிரசித்தப்படுத்தும் அன்புசெய்யும் எனது நீண்ட கால முயற்சிகளை யும் ஒப்புக்கொடுக்கிறேன்."

இயூஜின் டீ மசனெட் தனது முதிய பருவத்தில் நற்சுகத்தோடு காணப் பட்டார். எனினும் 1860ல் அவர் சில கடும் விழுகைகளுக்கு உட்பட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார். மார்கழி மாதத்தில் 18 தடவைகள் கடுமையான நெஞ்சு நோவிற்கு உள்ளானார். இரு தடவைகள் நெஞ்சில் கட்டி வந்து அறுவைச் சிகிச்சை செய்தார். ஈற்றில் ஸ்தாபகரும் ஆயரும் அமல உற்பவ மாதாவின் மகனுமான இயூஜின் டீ மசனெட் 1861ம் ஆண்டு வைகாசி மாதம் 21ம் திகதி இறையடி சேர்ந்தார். இவரது கடைசி நேர நிகழ்வுகள் பற்றி ஆயர் ஜின்கார்ட் எழுதினார்:

"தங்களுக்குள்ளே பரிவும் வெளியிலோ ஆன்மாக்களின் இரட்சிப்பிற்கான ஆர்வமும் இருக்கவேண்டும்" என அமலமரித் தியாகிகளுக்கு அறிவுரை கூறி ஆசீர்வதித்த பின்னர் இயுஜின் இறுதி மூச்சை விட்டார். இறுதி நாட்களில் கோமாநிலையில் இருந்த இயூஜின் இறுதி நேரத்தில் சுயநினைவிற்கு வர, சூழநின்றவர்கள் 'சால்வே றெஜினா' பாட, ஆயர் இயூஜின் உயிர் நீத்தார். இறைவனிடம் பல தடவைகள் ஆயர் இயூஜின் கேட்டிருந்தார், 'நான் நீண்டநேரம் நித்திரையில் இருந்தால் ஆண்டவரே என்னைத் தயவுசெய்து எழுப்பிவிடும். சாகின்றேன் என்பதைத் தெரிந்துகொண்டே நான் சாகவேண்டும்' என்று கேட்டுக்கொண்டபடியே இறப்பினை இயூஜின் எதிர்கொண்டார். கேட்டுக்கொண்ட சம்பாவனையை இறைவன் இயூஜினிற்குக் கொடுத்து பேரின்பத்தை அருளினார்."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயூஜின் டீ மசனெட் அவர்களின் தந்தை, இயூஜின் மற்றும் அவரது சகோதரர்கள் பிறந்த இல்லம்.



இயூஜின் சிறுவனாக இருந்த போது.



இயூஜின் குருப்பட்டம் 1811இல் பெற்றபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*1903ல் அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்ட அமலமரித் தியாகிகளின் இறையியல்கல்லூரி.*




தென் ஆபிரிக்காவில் சிறுவர் பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென் ஆபிரிக்காவில் முதன்முதலில் கல்லூரி ஸ்தாபித்த அமதிகள்.



தென் ஆபிரிக்காவிலுள்ள செடெராவில் உயர்தலைவர் இறையியல் மாணவர்களுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென் ஆபிரிக்காவில் அமதிகள் 1957ல் 2016ல்.



கைவிடப்பட்ட சிறுவர்களுக்கான நம்பிக்கை இல்லம் 1912 ஒட்டாவா, கனடாவில்.




கைவிடப்பட்ட சிறுவர்கள் அரவணைக்கப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மறைமாவட்ட ஆரம்ப அமதி ஆயர்கள்



**Semeria, Jean Etienne**
1813 -1868

யாழ். மறைமாவட்டத்தின் முதல் அமதி ஆயரான சமேரியா ஆண்டகை வட மாகாணத் திருச்சபையின் வளர்ச்சிக்கு பிரதான பங்களித்தவர் ஆவார். ஆயர் பெற்றக்கீனி ஆண்டகையின் வழி காட்டலில் விசுவாசமுள்ள துணை ஆயராகப் பணியாற்றினார். ஆயர் பெற்றக்கீனி ஆண்டகை **1857** இல் இறையடி சேர்ந்தபின் யாழ். மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்றார். கத்தோலிக்கக் கல்வியில் இவர் விசேட கரிசனை எடுத்தார். போர்டோ திருக் குடும்ப சபையினரை **1862**ஆம் ஆண்டு வரவழைத்து பெண்களுக்கான ஆங் கில பாடசாலையினைப் பொறுப்புக் கொடுத்தார்.



**Bonjean, Christophe Entienne**
1823 -1892



**Melizan, Aandrc Theophile**
1844 - 1905



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Joulain, Henri**
1852 - 1919



**Brault, Jules Andre**
1867-1923



**Guyomard, Alfred**
1884 - 1956



**Jerome Emilianus Pillai**
1901 - 1972



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1847ல் யாழ். ஆயர் ஒ.பெற்றக்கீனி அமதி ஸ்தாபகர் இயூஜினைப் பிரான்சில் நேரில் சந்தித்ததன் விளைவாக, அமதிகள் யாழ். மண்ணில் கால் பதித்தார்கள். யோண் ஸ்ரீபன் சமேரியா அமதி அவர்களும் அவரோடு வந்த மூன்று தோழர்களுமே முதற் குழுவினர் ஆவர். 1857ல் சமேரியா யாழ். முதல் அமதி ஆயராகப் பொறுப்பேற்றார்.

1868ல் சி.பொன்சீன் அமதி ஆயராகி, மடுத் திருப்பதியைப் புனரமைத்து மரியன்னைக்கான பக்தியை வளர்த்தார். பத்திரிசியார் கல்லூரிக்கான கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட, உயர்கல்வி முன்னெடுக்கப்பட்டது. 1880ல் தியோபிலிஸ் அன்று மெலிசன் அமதி ஆயராகப் பொறுப்பேற்றார். 1893ல் கென்றி யூலன் அமதி ஆயரானார். இவரது ஆட்சிக் காலத்தில் நூல் வெளியீட்டுப் பணி, இளம் தொழிலாளர் நலன், மதுவிலக்கல் பணி, கல்விப் பணி, நற்செய்தி அறிவிப்புப் பணி போன்றவை சிறப்பாக இடம்பெற்றன.

1919ல், யூட்ஸ் அன்றூ புறொ அமதி ஆயராகத் தெரிவுசெய்யப்பட்டார். மரியன்னைக்கான பக்தி வழிபாடு வளர்க்கப்பட்டது. 1924ல் அல்பிறற் கியோமர் அமதி ஆயராக அபிசேகம் செய்யப்பட்டார். கல்வி, சமுதாய மேம்பாடு, சமயம் போன்ற துறைகளில் வளர்ச்சி காணப்பட்டது. திருத் தந்தையின் பிரதிநிதி பேராயர் அந்தோனி சுடேன் 1924 ஆடி மாதம் 2ம் திகதி மரியன்னைக்கும் பாலனுக்கும் மணிமுடி சூட்டினார். 1957ல் ஜெ. எமிலியானுஸ்பிள்ளை அமதி யாழ். மறை மாவட்ட ஆயரானார். இவரது ஆட்சிக் காலத்தில் கல்வி, புனிதர்களுக்கான பக்தி வழிபாடு, பண்பாட்டு மயமாக்கல், நற்செய்தி அறிவிப்பு போன்றவை வளரலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செபமாலை தாசர் சபை ஸ்தாபகர்

**அருட்பணி பி.ஏ. தோமஸ் அ.ம.தி**
**(07.03.1886 - 26.01.1964)**


இறையடியார் தவத்திரு B.A.தோமஸ் OMI 'கடவுளுக்கு நிகர் யார்?' என்ற கோட்பாட்டைத் தனது வாழ்வில் இலட்சியக் கனவாகக் கொண்டு, தனது செபம், தவம், மறைந்த வாழ்வு போன்றவற்றை வாழ்வாக்கி, உடலை ஒறுத்து, உணர்வுகளை நெறிப்படுத்தி, சொல்லாலும் செயலாலும் இறைஞான ஒளியைப் போதித்தவர். சமுதாய வாழ்வில் அக்கறை கொண்டு சமூக மட்டத்தில் விழிப்புணர்வு ஊட்டியவர்.

செபவாழ்வே இவரது சிறப்பான சாட்சியம். இறையருளும் இறைபக்தியும் நிரம்பியவராய், பல்வேறு நோய்களைக் குணப்படுத்தியும் பேய்களை ஓட்டியும் ஆவியால் ஊட்டம் பெற்றவராய் நற்செய்தி அறிவிக்கும் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டார். ஏழை, எளியவர்கள் மட்டில் அதீத அக்கறையும் பரிவன்பும் உடையவராய், பல்வேறு அன்புப் பணிகளில் ஈடுபட்டார். தாழ்ச்சியின் தடாகமாகவும் நம்பிக்கையின் நங்கூரமாகவும் அன்பின் ஆசானாகவும் வாழ்ந்து வரலாறு படைத்தவர்.

'படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினைப் பறைசாற்றுங்கள்' என்ற இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கியவர். 'செபமாலைதாசர்' சபையின் ஸ்தாபகரான மோமாஸ் அடிகளார் ஏழையரின் தோழனாய், வாழ்வியலின் வள்ளலாய், புனிதனாய் வாழ்ந்து காட்டியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி




முத்திரை வெளியீடு
1981



நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ.ம.தி நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமலமரித் தியாகிகளின் பாது காவலியாகிய அன்னை மரியா பேறுபெற்ற பெண்ணாக, தூய் மையின் இருப்பிடமாகத் திகழ் கின்றார். 2ம் வத்திக்கான் சங்கம் மரியன்னைக்கு உயர் வணக்கம் செலுத்த வேண்டும் என்று கற்பிக்கின்றது.

இஸ்ராயேலரின் கண்ணோட் டப்படி, சமூக ஏணிப்படி களில் கீழ்த்தட்டில் தூக்கி எறியப்பட்ட பெண்கள் அற் புதமாக இயேசுவினால் ஏற்றம் பெற்றார்கள்.

இவ்விடயத்தை உய்த்துணர்ந்த அன்னை மரியா பெரும் மகிழ் வோடு பாடினார்: “ஆண்ட வரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைந்து எனது மனம் பேருவகை கொள் கின்றது. ஏனெனில், அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்” (லூக்கா 1:47,48).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊதாரி மகனின் தந்தையின் உருவத்தில் வலதுகை பெண்ணினதும் இடதுகை ஆணினதுமாக அமைந்துள்ளது.

இவ்வுரு இறைத்தந்தையின் அளவு கடந்த பரிவையும் பாசத்தையும் துல்லியமாக வெளிப்படுத்துகிறது. இறைத்தந்தை மனிதர் சார்பாக எப்பொழுதும் கரிசனையோடு இருகரம் விரித்தவராய், இதயத்தைத் திறந்தவராய் இருக்கின்றார்.

நிபந்தனையில்லாமல் நிறைவாக அன்புசெய்யும் இறைத்தந்தையின் பரிவு பிரிந்து போகும் இன்றைய கால இளையோருக்கு நற்செய்தியாகும். இளையோருக்கான சிறப்புப் பணியாற்ற அமதிகள் இன்றைய காலகட்டத்தில் விசேடமாக அழைக்கப்படுகின்றார்கள்.

புனித இயூஜின் டீ மசனெட்டின் ஆத்மீக தாகம் தீர வழி சமைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் அருட்பணி சமரக்கோன் இந்தியாவில் தியானப்பணி.



இந்திய மண்ணில் அமதிகள் கால் பதித்த பொன்விழா நினைவின் ஆரம்பவிழா (29.06.2017).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு மாகாண அமதிகளின் உயர் கல்விப் பணி.





12 மறைமாவட்டங்களைச் சேர்ந்த 3200 இளையோர் பங்கெடுத்த அன்பின் மகிழ்வு பற்றிய இளையோர் மகாநாடு தேவத்தை தியான இல்லத்தில் நடைபெற்ற பொழுது (20.09.2016).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிலிப்பைன்ஸில் அமலமரிப் பொதுநிலைப் பணியாளர்கள்



தாய்-லாவோ பிராந்திய அமதிகளின் பிரசன்னம் 50 ஆண்டுகள் நிறைவு நிகழ்வின்போது (1916).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமல உற்பவம், கொழும்புத்துறை.



வசந்தகம், கொழும்புத்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பொதுசன நூலகம் அருட்பணி லோங், அ.ம.தி. அவர்களால் 1954ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.



கிறிஸ்து அரசர் ஆலயம், கொய்யாத்தோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமதிகளால் கட்டப்பட்ட மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம்



மன்னார் ஞானோதயத்தில் உயர்கல்விக்கான ஆரம்பம் - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர்பகம், யாழ்ப்பாணம்.




'ஞானதீபம்' இளையோர் வலுவூட்டல் மையம், அரியாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிந்தனைச் சிற்பி, வேதா சுவாமிகள்



வெற்றி அன்னை ஆலயம், பேசாலை.



அன்பகம், முழங்காவில்.



ஞானோதயம், மன்னார்.



அன்னை இல்லம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித அடைக்கல அன்னை ஆலயம், யாழ்ப்பாணம்.



புனித இயூஜின் டீ மசனெட் ஆலயம், கொழும்புத்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஞ்சலியகம், பருத்தித்துறை



அமல உதயம், திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமதிக் கரங்கள், மாங்குளம்.



புனித வளனார் அ.ம.தி குருமடம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். அமதி பொதுநிலைப் பணியாளர்கள்



மன்னார் பேராலயத்தில் மகாஞான ஒடுக்கம் - 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









மன்னார் திருப்புமுனை - மதுபோதை ஒழிப்புத் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லுனுகல லூர்துமாதா ஆலய திருப்பாலத்துவ சபையினர்



முதலாவது அமதி ஆயர் சமேரியாவின் 150வது ஆண்டு நினைவாக யாழ். மரியன்னை பேராலய முன்றலில் திருவுருவச் சிலை - 14.07.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பற்றி...



அருட்திரு விபி அ.ம.தி. அவர்கள் ஆன்மீகம், உளவியல் போன்ற துறைகளில் இருபது நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியவர். இவர் இருபது ஆண்டுகளுக்கு மேலாக கொழும்புத்துறை புனித பிரான் சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் துறையில் விரிவுரையாளராகவும் தற்பொழுது யாழ். தொடர்பக முதல்வராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் அரியாலை 'அன்பகம்', மன்னார் 'திருப்புமுனை', அமல மரித்தியாகி கள் சபை, வசந்தக வெளியீடான 'நான்' உளவியல் சஞ்சிகை ஆகியவற்றின் ஸ்தாபகராகவும் விடத்தல் தீவுப்பங்கில் நூறாண்டு காலமாகப் பிரிந் திருந்த இரு ஆலய நிர்வாகங்களை ஒரு நிர்வாகமாக இயங்கச் செய்த பங்குத்தந்தையாகவும் மூன்றாண்டுகளில் பிரசித்திபெற்ற பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தைக் கட்டியெழுப்பியவராகவும் மிளிர்கின்றார்.

**'சைவ சித்தாந்த, கிறிஸ்தவக் கோட்பாடுகளின் அடிப்படையில் மனிதன்'** என்ற கருப்பொருளில் பேராசிரியர் நா. ஞானக்குமாரனின் நெறிகாட்ட லின்கீழ் ஆய்வுசெய்து மானிடவியலில் முனைவர் பட்டத்தை யாழ். பல்கலைக்கழகத்தில் 2012ம் ஆண்டு பெற்றார். இலக்கியத்துறையில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக 2016ம் ஆண்டு யாழ். பிரதேச செயல கக் கலாச்சாரப் பேரவையினால் **'யாழ் ரத்னா'** விருது பெற்றார்.

சமூக மட்டத்தில் கீழ்நிலையிலுள்ளோரைத் தூக்கிவிடும் கருவியாக இருபது ஆண்டுகளுக்கு மேலாக மன்னார், வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உளசமூகப் பணியாற்றி வருகின்றார். நீண்ட காலமாக உளநலத்துறைக்கு ஆற்றிய சேவையைக் கௌரவித்து 2014ம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் கௌரவிக்கப்பட்டார்.

இவர் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயேசுவின் அன்பையும் இரக்கத்தை யும் எமது சமூகத்தில் துன்பப்படும் மக்களுக்கு வெளிக்காட்டி வருகிறார். இதையிட்டு நான் பெருமைப்படுகிறேன், பாராட்டுகிறேன். குருக்களும் துறவிகளும் இயேசுவின் சீடர்களாகச் சீவிக்கவும் சேவை செய்யவும் இவரின் வாழ்வும் சேவையும் ஊக்கமளிப்பதாக.

**- அருட்கலாநிதி எஸ். ஜே. இம்மனுவல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஒரு புனிதரைப் பற்றித் தெரிய வேண்டியது என்ன? அவரது மறை பொருளை அல்லது கடுந்தவப் பண்புகளைவிட மனித பக்கத்தையே பெரிதும் விரும்புகின்றோம். நாம் புனிதர்களில் காண விரும்புவது எம்மிடமிருந்து அவர்களை விலக்குவது எவை என்பது பற்றியல்ல, மாறாக, எவை அவர்களை எம்மோடு இணைக்கின்றன என்பது பற்றியேயாகும். புனிதர்கள் எமக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்ற நிலையில் அல்ல, மாறாக, அவர்கள் மனிதராக எமது சூழலில், எமது இன்ப, துன்பங்களில், மற்றும், வறுமையில், பங்கெடுக்கவேண்டும் என்றே விரும்புகின்றோம். இவ்வாறு அவர்களில் நம்பிக்கை வைக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்று நிற்கின்றோம். அவர்களோடு பொதுவான, சுமையான புவிசார் அனுபவத்தில் பங்கெடுக்கின்றோம்."

- திருத்தந்தை 6ம் பவுல்



"இந்த ஆயர் மூலமாகக் கிடைக்கப் பெற்ற அளப்பரிய மறுமலர்ச்சிக்காக இறைவனுக்கு நன்றி நவிலுவோம். அவரது தூண்டுதல் அவர் காலத்திற்கு மட்டும் உரித்தானதல்ல. அது இன்னும் எமது நாட்களில்கூட, தொடருகின்றது."

- திருத்தந்தை 2ம் யோண் பவுல்

இயுஜின் டீ மசனெட்டின் புனிதர் பட்டத்தின்பொழுது



ISBN 978-955-7706-09-2

9 789557 706092

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org